YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/130/News/2011
ஓசை : 01 நாதம் : 24 வெள்ளிக்கிழமை 15.04.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# ஆளும்தரப்பு-தமிழ்க்கூட்டமைப்பு மாதஇறுதியில் பேச்சுவார்த்தை

## 29ஆம் திகதி நடைபெறும் சாத்தியம்; அரசியல் தீர்வு குறித்து ஆராயப்படலாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த பேச்சுவார்த்தையின்போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் குறித்து விரிவாக கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் தீர்வு யோசனை ஒன்றை ஆளும் கட்சிக்கு விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. கடந்த ஏழாம் திகதி (6ஆம் பக்கம் பார்க்க)

### யாழ் ஓசை வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்



## ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை பான் கீ மூனிடம் கையளிப்பு

இலங்கை இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை நேற்று ஐ. நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனிடம் கையளித்துள்ளதாக இன்னர் சிற்றி பிரஸ் தகவல் வெளியிட்டுள்ளது.இந்த அறிக்கை உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்படமாட்டாது (6ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அறிக்கை குறித்த அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

### அரசாங்கம் ஆராய்கின்றது

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் இலங்கை நிலைமைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்துவருவதாக அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன. (6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மீது தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைத்தால் எதிர்ப்பு

### ஐ.தே.க. கூறுகிறது

இலங்கை நிலைமை தொடர்பில் பாதகமான அறிக்கை ஒன்றை அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களம் வெளியிடுவதற்கு அரசாங்கத்தின் திறமையற்ற செயற்பாடுகளே காரணமாகவுள்ளன. வெளிவிவகார அமைச்சு தமது பொறுப்பை சரியாக செய்கின்றதா? நாட்டின் நிலைமை தொடர்பில் வெளிநாடுகளுக்கு உரிய முறையில் விளக்கம் அளிக்கப்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (6ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்கின்றனர்

### - சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

வண்ணார்பண்ணை,

வலி. வடக்குப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் எவ்வித மான அடிப்படை வசதிகள் அற்ற (6ஆம் பக்கம் பார்க்க)






noolaham.org



யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திக்குழுவால் 35 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 2 கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் சர்வதேச தரத்திலான வகுப்பறை கணினி வலைப்பின்னல் தொகுதியின் முதல் அலகான போடியம் அமைப்புடன் கூடிய பொதுக் கற்பித்தல் அறை ஆகியன கடந்த 8 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன.இந் நிகழ்வில் அதிதிகள் அழைத்து வரப்படுவதையும், கணினி அறைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் ஆகியோர் நாடவை வெட்டி பிரவேசிப்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா பாடசாலைக்கு முதற்கட்டமாக ரூபா 10 லட்சத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# எங்கள் வளங்கள் நாம் பார்த்திருக்கும் போதே பறிபோகின்றன: முறிகண்டி மக்கள் கண்ணீர்

எங்கள் காணிகளில் எங்களை குடியேற்றுங்கள். எங்களுடைய வளங்கள் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பறிபோய்க்கொண்டிருக்கின்றதென திருமுறிகண்டி மக்கள் கண்ணீர் மல்க கூட்டமைப்பு எம்.பி.க்களான மாவை சேனாதிராசா, சிறிதரன் ஆகியோரிடம் கேட்டுள்ளனர்.

திருமுறிகண்டிப் பகுதிக்கு நேற்று முன்தினம் காலை விஜயம் செய்த மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச மக்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்தினர். இதன்போதே மக்கள் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மக்கள் தொடர்ந்து கூறுகையில்,

விலைமதிப்பற்ற எங்களுடைய வளங்கள் அன்றாடம் திருடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த 30 வருடங்களாக நாங்கள் வாழ்ந்த இடங்களில் எங்களுடைய வீடுகளில் போய் ஒரு தேங்காய் பறிக்கக்கூட எங்களால் முடியவில்லை.

115 குடும்பங்களைச் சேர்ந்த 530 மக்கள் காடுகளில் வாழ்கிறோம். ஆனால் தினசரி பெருமளவு தேங்காய், படையினரால் கொண்டுசெல்லப்படுகின்றது.

இதுகுறித்துப் பேசுவதற்கு எந்த அதிகாரிகளும் முன்வரவில்லை. அதற்குமேல் பல அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் எடுத்துக்கூறியபோதும் இன்று வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே எங்களை எங்கள் மண்ணில் சென்று வாழ அனுமதியுங்கள் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கடந்த காலங்களில் சாந்தபுரம், பொன்னகர் போன்ற கிராமங்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக கூட்டமைப்பு எடுத்திருந்த முயற்சிகளுக்குப் பலன் கிடைத்தது.

அவ்வாறான முயற்சியொன்றை உங்களுடைய விடயத்திலும் கூட்டமைப்பு நிச்சயமாக எடுக்கும். அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளில் இந்த விடயம் தொடர்பில் அதிக அக்கறை காட்டுவோம். மக்கள் சிறிதுகாலம் அமைதியாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அதற்கு கூட்டமைப்பின் எம்.பி.க்கள் ஆதரவளிக்க வேண்டும் என மக்கள் கேட்டனர்.

ஆனால் தற்போதைக்கு அமைதியாக இருக்கும்படியும் பேச்சுவார்த்தைகளில் தீர்வினைத்தர அரசு தவறினால் மக்களுடைய தீர்மானத்திற்கு நாம் உடன்படுவோம் எனவும் எம்.பி.க்கள் கூறினர்.

### வடக்கிற்கான ரயில் பாதையில்

## கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் இறுதிக்கட்டத்தில்

வடக்குப் பிராந்தியத்திற்கான ரயில் பாதையின் இரு மருங்கிலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினருக்கிடையிலான மோதல்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த காலகட்டத்தில் இரு தரப்பினரும் வடக்கின் அனைத்துப் பிரதேசங்களிலும் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருந்தனர்.

அதன் ஒரு கட்டமாக வடக்கிற்கான ரயில் பாதையின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகள் புதைப்பட்டிருந்தன. அதற்கு முன்பே வடக்கிற்காள ரயில் போக்குவரத்தும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போதைக்கு ஓமந்தை தொடக்கம் கொக்காவில் வரைக்கும் மற்றும் பரந்தனிலிருந்து யாழ்ப்பாணம் வரைக்குமான பிரதேசங்களில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. கொக்காவில் தொடக்கம் பரந்தன் வரையான பகுதி மட்டுமே தற்போதையக்கு கண்ணிவெடிகள் அபாயமுள்ள பகுதியாக காணப்படுகிறது.

# புதுவருட கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு மக்களை நிர்ப்பந்திக்கவேண்டாம்: ஆனந்த சங்கரி

புதுவருட கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு மக்களை தொந்தரவு செய்ய வேண்டாமென படை அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு எழுதிய கடிதமொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.

மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு கடந்த காலத்தில் நடந்ததை மறக்க அவர்களின் உற்றார், உறவினர்கள் திரும்பி வரும் வரை அன்றேல் அவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டது என்பதை தெரியும் வரை கால அவகாசம் வழங்குங்கள். தயவு செய்து கச்சேரிக்கும் விளையாட்டு கழகங்களிலும் புதுவருட கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு தொந்தரவு செய்ய வேண்டாமென அறிவுறுத்தவும் எனவும் அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தின் விபரம் வருமாறு:-

இடம் பெயர்ந்து துன்பத்தில் வாழ்ந்த மக்களுக்கு எத்தகைய மனிதாபிமானமான சேவையை இராணுவத்தினர் ஆற்றியுள்ளனர் என்பதை நான் மிகவும் பாராட்டியிருக்கின்றேன். இராணுவத்தையும் பொலிஸையும் சேர்ந்த பெண் அதிகாரிகள் அங்கவீனர்கள், கடும் நோயாளிகள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்களை எவ்வாறு பாராமரித்தனர் என்பதை நான் அறிவேன். அண்மைக் காலத்தில் தங்களுக்கு நடந்ததை பிள்ளைகள் மறக்கக்கூடிய வகையில் எவ்வாறு பெண் அதிகாரிகள் அவர்களுடன் விளையாடி மகிழ்ந்தார்கள் என்பதையும் நான் அறிவேன். இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் கூட இவர்களை வெகுவாக பாராட்டியுள்ளனர். படையினர் தமது கடமையை திறமையாக செய்துள்ளனர். தற்போது அவர்கள் ஓய்வெடுக்க வேண்டிய நேரம்.

வடக்கு-கிழக்கு மக்கள் ஒரு ரக இராணுவத்தை ஒத்த ஆட்சியில் 30 ஆண்டுகளுக்கு மேல் கஷ்டப்பட்டார்கள் என்பதை நான் தங்களுக்கு கூறத்தேவையில்லை. அவர்கள் போதியளவு அவமானம், சங்கடம், அச்சுறுத்தல், மிரட்டல் ஆகியவற்றுக்கு ஆளாகியிருந்தனர். இந்த நிலைமை மீண்டும் திரும்புவதை மக்கள் விரும்பவில்லை. இச்சம்பவங்கள் அவர்களுக்கு பெரும் அச்சத்தை கொடுத்துள்ளமையால் குறிப்பாக பெண்கள் ஒரு துப்பாக்கியை கண்டதும் பைத்தியம் பிடித்தவர்கள் போல கடந்த காலத்தை நினைத்து மிரண்டு ஓடுகின்றனர்.

நடந்து முடிந்த நல்ல சம்பவங்கள் தற்போது இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்கள் ஒரு துப்பாக்கியையோ, சீருடை அணிந்த இராணுவத்தினரையோ காண விரும்புகின்றார்கள் இல்லை. அவ்வளவு தூரம் மிக மோசமாக அவர்கள் கடந்த காலங்களில் பாதிப்புக்கு ள்ளாகியிருந்தனர்.

அவர்கள் தமது உடைமைகள் அத்தனையையும் இழந்துள்ளனர். யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகளாகிய பின்னரும் முன்பு வசதியாக வாழ்ந்த வீடுகள் போலன்றி ஆதிகால மனிதர்களின் வீடுகளையொத்த வீடுகளில் வாழ்கின்றனர். ஆண்கள் தமது மனைவியரையும், மனைவியர் தமது கணவரையும், இழந்துள்ளனர். சிலர் தமது பிள்ளைகளை இழந்தும் வேறு சிலர் தம் பிள்ளைகளை தடுப்பு முகாமிலும் எதுவித குற்றமும் புரியாமலே தடுத்து வைக்கப்பட்டுள்ளதை பார்க்கின்றனர். பலர் குடும்பத் தலைவரை இழந்துள்ளனர். பிள்ளைகள் பலர் பாடசாலைக்கோ வேறு வேலைக்கோ போக முடிவதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் இம்மக்கள் புதுவருடத்தை கொண்டாடுவது அவர்களுடைய கற்பனைக்கு எட்டாத விடயமாகும். அவர்கள் தமது வாழ்வில் சந்தோஷம் பற்றி நினைக்க முடியாமல் உள்ளனர். சிறு பிள்ளைகள் சில தமாஷாக்களால் கவரப்படலாம். ஆனால் குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியாகவும் குதூகலமாகவும், இருக்கக்கூடிய நிலைமை இல்லை. அவர்கள் தனிமையில் விடப்படுவதையே விரும்புகின்றனர்.


அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு இன்னமும் காலம் உண்டு. பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளில் பலவந்தமாக இவர்களை சேர்ப்பதை தவிர்க்குமாறு தயவு செய்து தங்கள் அதிகாரிகளுக்கு கட்டளையிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 'கர' வருட வாழ்த்துச் செய்திகள்

## வளமான சமூகத்தை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்

**வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி**



பாரம்பரியமாக தமிழ் சிங்கள புத்தாண்டு இலங்கையில் இரு இன மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்புத்தாண்டு பிரதான இரு இனங்களினதும் முக்கியமான தினமாகும்.

இக்காலப் பகுதியில் மக்கள் தங்கள் பழைய துன்பங்களையெல்லாம் மறந்து உத்வேகத்துடனும் புதிய நம்பிக்கையுடனும் புதிய எதிர்காலத்தை எதிர்கொள்கின்றனர். இந்நாட்கள் எமது கலாசாரத்தை எமக்களித்த முன்னோர்களை நினைகூரவைக்கின்றன. எமது மரபுவழி உரிமையை ஆதரிக்கவேண்டிய தேவை எமக்குண்டு.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தூர நோக்கின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வட மாகாண மீள்குடியமர்வு, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமாகிய பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலுக் கமைவாகவும் பாதுகாப்பு படையினரின் [illegible]வியுடனும் வட பகுதி மக்கள் அபிவிருத்தியின் பலாபலன்களை அனுபவிக்கின்றனர்.

எமது பாரம்பரியத்தின் வழிகாட்டலில் மீள் ஒருங்கிணைப்புக்கான செயற்பாட்டை பலப்படுத்தும் நோக்கில் எமது மனம், எமது குடும்பம், எமது சமூகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து தனித்துவமான இலங்கையின் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைய வேண்டும். நாம் எல்லோரும் எமது பாரம்பரியத்துடனும் புத்தாண்டுக் களியாட்டங்களுடனும் மகிழ்ச்சி பெறுவோமாக.

நான் ஒவ்வொருவருக்கும் வளமான எதிர்காலம் உருவாக நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் !

*புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் !!*

## தமிழ் மகனாய் வந்துதிப்பாய் புத்தாண்டே!

*கம்பி வாழ்க்கையது*
*காணமாமல் போக*
*அகதியின் நிலைகள்*
*சொந்த மண் திரும்பி*
*உழைத்து வாழ்ந்து*
*உண்டு மகிழ்திட*
*வல்லத் தமிழ் புத்தாண்டே*

*ஒற்றுமையின் சின்னமதை*
*ஒளி கொண்ட நிலவாய்*
*கற்பனையின் எல்லை கடந்த*
*கடலலைகள் போன்றது போல்*
*புதுமண வாழ்வு காணும்*
*தம்பதிகள் இன்ப நனவுகளிலே*
*நிறைந்து இசைந்து வாழ்ந்திட*
*வாகை சூடி வந்துதிப்பாய்*
*தமிழ் மகனே*

*குறள்வரி நாதமும்*
*குணமகள் வேதமும்*
*பூவிதனில் என்றும்*
*புகழ்ந்து பரவிட*
*அன்பின் இன்ப ஊற்றாய்*
*ஆர்ப் பரித்து*
*வந்துதிப்பாய் தமிழ் மகனே*

*வே.அகிலேஸ்வரன்*
*மருதங்கேணியூரான்*

## என்றும் வேண்டும் இன்ப அன்பு

**நல்லை ஆதீன குருமதல்வர் ஆசிச் செய்தி**



புத்தாண்டு ஈழம் வாழ் மக்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டாக மலர்ந்து எல்லோரும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவுமம் மங்களகரமாகவும் அபிட்சமாகவும் வாழவகை செய்து தரவேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமாளைனப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குவதில் பெரும கிழ்ச்சி அடைகின்றோம்.

இதுவரை காலமும் பட்ட துன்பதுயரங்கள் முற்றாக நீங்கப் பெற்று இன்று முதலாக எல்லோரும் ஒற்றுமையாக நல்லெண்ணம் கைவரப் பெற்று இன்பகரமான நல்வாழ்வு வாழ்விற்கு வழி எறுபட வேண்டுமென இறையருளை வேண்டி நல்லாசிகளை நல்கி உளமிகு மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இன்று மலர்ந்திருக்கும் தமிழ் வருஷமான கர வருஷம் சகல மக்களுக்கும் சமாதானத்தையும் சமத்துவத்தையும் சொரிந்து இன்ப வாழ்க்கைக்கு அடி கோல வேண்டுமென்று நாம் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

***ஆதீன குருமுதல்வர்***
***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்***
***இரண்டாவது குருமஹாசந்நிதானம்***
***நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்***

## இயற்கை தெய்வங்களே காத்தருள்க!

**செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுருகன்**



இறையருள் நிலவட்டும் இனிய புத்தாண்டை அனைவரும் வரவேற்போம். இயற்கை அன்னையை அனைவரும் வழிபாடு செய்வோம். நிலம்,நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள் உலகுக்கு சாதகமாக அயை வேண்டுமல் செய்வோம். மனிதர்களால் வரும் அச்சங்களுக்கு அப்பால் இயற்கை தொடர்பான ஏக்கம் எல்லா நாட்டிலும் இன்று ஏற்பட்டுள்ளது.

இப்புதிய ஆண்டு பிறக்கும் வேளை இவ்வுலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் இயற்கைத் தெய்வங்களே காத்தருள்க என மன்றாடுவோம். மனித சமூகப் மகத்துவமான வாழ்நாளை வீண் விரயமாக்காது நல்ல வண்ணம் வாழ எண்ணுவோம்.

கடந்து செல்லும் ஆண்டில் நாம் பெற்ற நன்மைகளை நினைந்து இறைவனுக்கு நன்றி சொல்வோம். நாம் விட்ட தவறுகளை நினைத்து அத் தவறுகளில் இருந்து நல்வழி காணவேண்டுதவல் செய்வோம். பகையை வளர்க்காது பயனுள்ளவர்களாக நாமும் பிறரும் வாழ வழி செய்வோம். இனிய நட்புக்களை வளர்த்துக் கொள்வோம். காலத்தின் பெறுமதியை உயர்ந்து அப் பொழுதை தவிர்த்து ஒவ்வொரு வினாடிகளையும் தவப்பொழுதாகக் கருதி கடமை செய்வோம். எங்களை விட வசதி குறைந்தவர்களை எண்ணுவோம்.

அவர்களுக்கு எம்மால் எவ்வாறு உதவலாம் எனச் சிந்திப்போம். நன்றே சிந்தித்ததை அன்றே செய்ய முற்படுவோம். எங்களுக்கு இறைவன் தந்த நல்ல சந்தர்ப்பங்களில் நாம் என்ன நன்மைகளை செய்வோம் என்று எங்களை நாம் வினாவி நல்வழி காண்போம். சித்திரைப் புத்தாண்டு நாள் சிந்திப்பதற்குரிய நன் நாள் எம்மை வளர்த்து ஆளாக்கிய தாய்- தந்தை- ஆசிரியர்கள் ஆகியோருக்கு எம் உழைப்பால் பெற்ற உபகாரங்களை வழங்கி உலவகை கொள்ளும் திருநாள். பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளிகள் குடும்பமாகக் கூடி உண்டு மகிழ்ந்து உறவாடும் திருநாள். வழிபாடு செய்து நல்வாழ்வு பெற வாழ்த்துகின்றேன்.

எங்கள் திருநாடு எமக்குரிய காவல் அனைத்தையும் இறைவன் காத்தருள வேண்டி அன்பும் பண்பும் அறமும் ஒற்றுமையும் நிலைத்திட வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 ஏப்ரல் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சித்திரைப் புத்தாண்டு வழிவகுக்குமா?

சித்திரைப் புத்தாண்டை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கடந்த மூன்று தசாப்த காலப் போர் மற்றும் இனப்பிரச்சினையின் விளைவாக நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் அரசியல் கைதிகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகின்றபோதிலும் இவர்கள் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படவோ அல்லது இவர்களை விடுவிக்கவோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்திடம் விடுத்துள்ள வேண்டுகோளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அதிகம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பிறந்துள்ள புத்தாண்டும் பௌத்த தர்மமும் அர்த்தமுடையதாக அமைய வேண்டுமானால் ஆதாரமே அற்றவகையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ள கூட்டமைப்பு தமிழர்கள் இந்நாட்டில் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற நிலை உறுதிப்படுத்தப்படுகின்ற வரையில் புத்தாண்டு உள்ளிட்ட கொண்டாட்டங்கள் அனைத்தும் போலியானதாகவே இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் போர் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ள பக்கவிளைவுகள் எண்ணிலடங்காதவை.

போரினால் காயமடைந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உறவுகளை இழந்தவர்கள், உள ரீதியாக பாதிப்படைந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், சொத்து செல்வங்கள் மற்றும் தொழில்வாய்ப்புகளை இழந்தவர்கள், எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், அரசியல் கைதிகள் என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

இவர்களில் ஏனைய சாராருக்குரிய நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமும் அரச சார்பற்ற அமைப்புகளும் ஓரளவேனும் மேற்கொண்டுள்ள போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இதுவரை சம்பந்தப்பட்ட தரப்புகள் பராமுகமாகவே இருந்து வருவது கவலைதருகிறது.

கடந்த காலங்களில் அங்கம் வகித்த பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அவ்வப்போது சிறைகளுக்குச் சென்று இக் கைதிகளின் நிலை தொடர்பில் கேட்டறியும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை விடுவிக்குமாறு வேண்டுகோள்விடுப்பதற்கும் தவறுவதில்லை. ஆனால் அவை அனைத்தும் வெறும் ஊடக செய்திகளாக மாத்திரமே இதுவரை இருந்து வருகின்றன. இந்நிலையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டாவது இக் கைதிகளை விடுவியுங்கள் எனக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

தற்போது இலங்கையின் நீதியமைச்சராக சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமே இருக்கிறார். அவருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் நெருங்கிய உறவு இருந்து வருகிறது.

எனவே இதனைப் பயன்படுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். அதன் மூலமாகவேனும் இக் கைதிகளை விடுவித்து அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மறுவாழ்வளிக்க ஆவன செய்ய வேண்டும்.

பிறந்திருக்கும் இந்தப் புத்தாண்டு இந்நாட்டில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கொண்டு வர அனைவரும் இருகரமேந்திப் பிரார்த்திப்போம்.

## சீனாவுக்கு சாதகமாகும் இலங்கை - பாகிஸ்தான் உறவு

தென்னாசியப் பிராந்தியத்தின் சிக்கல் நிறைந்த உறவினைப் பொதுவாக விபரிப்பார்கள். அந்தவகையில் இந்தியா - பாகிஸ்தான் - இலங்கை என்ற இந்த முக்கோண ஒப்பீட்டு ரீதியில் பலம்பொருந்திய இந்தியாவும் பாகிஸ்தானும் இலங்கையை தத்தம்வசப்படுத்துவதற்கு முனைவதையே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியாவிற்கு எதிரான தனது முனைப்புக்ளின்போது பாகிஸ்தான் எப்படி ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்துகின்றதோ அதேபோன்றதொரு நிலைமையினையே பாகிஸ்தான் இங்கும் எதிர்பார்க்கிறது.

தென்னாசியாவின் இராஜதந்திர உறவுகள் தொடர்பாக ஆராயும் போது பாகிஸ்தானின் தலைமையிலான கூட்டணியொன்று இந்தியாவினை எதிர்க்குமொரு கருத்து நீண்ட பல காலமாகவே இருந்து வருகிறது.

1947 ஆம் ஆண்டு இரத்தக்களரியுடன் கூடிய பிரிவினை பாகிஸ்தான் என்ற தேசம் உருவாவதற்கு வழிவகுத்தது. இந்தப் பிரிவினை ஏற்பட்ட முறை, இந்தப் பிராந்தியத்தில் கிளர்ச்சிசார் பிணக்குகள் முடிவின்றித் தொடரும் என்பதைக் கட்டியம் கூறுவதாக அமைந்தது.

தென்னாசியப் பிராந்தியத்தில் பலவீனமானதொரு தரப்பாக இருக்கும் பாகிஸ்தான் தனக்கு அருகாக இருக்கும் பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை இணைத்துக்கொண்டு தனது பிரதான எதிரியான இந்தியாவினை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ளும் விருப்பத்துடன் செயலாற்றுகிறது.

இங்கு நேபாளம், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இந்தியா தொடர்பாக பாகிஸ்தான் கொண்டிருக்கும் கரிசனைகள் எவையோ அவற்றில் சிலவற்றையேனும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் இந்த முயற்சி இதுவரை கைகூடாதபோதும், தென்னாசியப் பிராந்தியத்தியத்திலுள்ள இதர நாடுகளுடன் பாகிஸ்தான் கொண்டிருக்கும் இரு தரப்பு உறவுக் கொள்கையானது இந்தியாவினை எதிர்ப்பது என்றதொரு அம்சத்தின் அடிப்படையிலேயே கட்டப்பட்டிருக்கிறது. இலங்கையுடனான தனது உறவினை மேலும் விரிவாக்குவதற்குப் பாகிஸ்தான் முன்னெடுக்கும் புதிய நகர்வொன்று இந்தப் பிராந்தியத்தில் கவனத்தினைக் குவித்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டு லாகூரில் இலங்கைக் கிரிகெட் அணி மீது நடாத்தப்பட்ட தாக்குதலைத் தவிர, இரண்டு நாடுகளுக்கிடையிலும் கடந்த பல ஆண்டுகளாக சுமூகமானதொரு உறவே இருந்து வந்திருக்கிறது. இருப்பினும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் காணப்படும் கலாசார மற்றும் மொழிசார் பிணைப்புகள் வலுவாக இருப்பதன் விளைவாக, இலங்கையுடன் அதிகம் நெருங்க முனையும் பாகிஸ்தானின் முயற்சிகள் எதுவும் இதுவரை கைகூடவில்லை.

எவ்வாறிருப்பினும் சுதந்திர பாகிஸ்தானிய வரலாற்றில் அரைப்பகுதிக்கும் அதிகமான காலப்பகுதியில் இராணுவ அரசாங்கமே அமைந்திருந்தது. இந் நிலையில், இலங்கையில் பல ஆண்டுகளாக தமிழ் யுத்தம் இடம்பெற்றது. யுத்தத்துக்கு ஆயுதங்களை வழங்குவதன் ஊடாக பாகிஸ்தான் இலங்கையுடன் தனது நெருக்கத்தை வளர்த்தது. இலங்கைக்கு அதிக ஆயுத தளவாடங்களை வழங்கிய நாடுகளின் வரிசையில் பாகிஸ்தான் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

2005 ஆம் அண்டு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் 2006 ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாகிஸ்தானுக்கு பயணம் செய்திருந்தார்கள். பாகிஸ்தான் வழங்கிய ஆயுத உதவிக்கு நன்றி கூறும் வகையிலேயே இந்தப் பயணங்கள் அமைந்திருந்தன. மே 2009 ஆம் ஆண்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பாகிஸ்தான் வழங்கிய படைத் தளவாடங்கள் பெரும் பாங்காற்றின என்பது உலகறிந்த விடயம். பல ஆண்டுகளாக நீடித்த இராணுவ ஆட்சி முடிவுக்கு வர 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தான் ஜனநாயக ஆட்சிமுறைக்குத் திரும்பியது. இந்த நிலையில் முன்னார் இராணுவ ஆட்சியாளர் முசாரப் கைக்கொண்ட வெளிநாட்டுக் கொள்கைகள் சார் விடயத்திலும் புதிய அரசாங்கம் மாற்றத்தினைக் கொண்டுவந்திருக்கிறது.

ஆட்சியில் இருப்பது இராணுவ அரசாங்கமாக இருக்கலாம் அன்றில் ஜனநாயக அரசாங்கமாக இருக்கலாம், ஆனால் இராணுவத்தினரது எண்ணங்கள் மற்றும் கரிசனைகளின் அடிப்படையிலேயே பாகிஸ்தானுக்கும் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு உறவின் தன்மை அமைகிறது.

பாகிஸ்தானின் இலங்கையுடனான உறவுநிலையும் இத்தகையதொரு தளத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நாட்டினது வெளிநாட்டுக் கொள்கையினை இராணுவத்தின் தலையீடுகள் எதுவுமின்றித் தனித்துவமாக முடிவெடுப்பதற்கே பாகிஸ்தானின் ஜனநாயக அரசாங்கம் விரும்புகிறது. இந்த விசப்பரீட்சையினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான முதலாவது களமாக பாகிஸ்தான் இலங்கையைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

### அறிவார்ந்த மூலோபாயம்

பத்து ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நிலவியதைத் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானின் ஜனாதிபதி அசீப் அலி சர்தாரி நவம்பர் 2010 இல் இலங்கைக்கான பயணத்தினை மேற்கொண்டபோது இந்தக் கரிசனைகள் பாகிஸ்தானியர்கள் மத்தியில் தெளிவாகத் தெரிந்தது.

( தொடரும்)

தி. வண்ணமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. வென்றால் மீண்டும் சேது சமுத்திர திட்டம்: கருணாநிதி

**திருவாரூர்:**
இந்தத் தேர்தலிலே தி.மு.க. வெற்றி பெற்றால் மத்திய அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, சேது சமுத்திரத் திட்டம் மறுபடியும் தொடங்கப்பட வேண்டும் என்று கேட்போம் என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

திருவாரூர் தொகுதியில் போட்டியிடும் அவர் அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலே இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய அரசிலே சேது சமுத்திரத்திட்டம் என்ற மகா உன்னதமான திட்டத்தை நிறைவேற்ற அண்ணா காலத்தில் இருந்து தொடங்கி அதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடைபெறும்பொழுது, சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்தியே ஆக வேண்டும், அது இராமருக்கு ஆகாது என்று சொன்னார்கள். இராமர் எங்கும் வந்து சேது சமுத்திரத் திட்டத்தை வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழகத்தை உலகத்தின் உச்சத்தில் உட்கார வைக்கும் என்று பொறாமை கொண்டவர்கள்தான் வேண்டுமென்றே இராமர் மீது பழியை சுமத்தி, இராமர் இந்த பாலத்தை வேண்டாம் என்கிறார் என்றெல்லாம் சொல்லி அந்த பாலத்தினுடைய பணி இன்றைக்கு நின்று போய்விட்டது.



நான் உங்களுக்குச் சொல்லுவேன், இந்தத் தேர்தலிலே நானும் தி.மு.க. வெற்றி பெற்றால் மத்தியிலே இருக்கிற அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, சேது சமுத்திரத் திட்டம் மறுபடியும் தொடங்கப்பட வேண்டும் என்று கேட்போம். அது பாலுவினுடைய அரிய முயற்சியினால் அந்தத் திட்டம் நிறைவேறி எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையிலே எல்லா நாடுகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே அது விளங்கும் என்ற அந்த நிலையையும் நான் உங்களுக்கு இந்த கூட்டத்திலே உறுதியாக அறிவிக்க விரும்புகின்றேன்.

இந்தத் தொகுதிக்கு யார் நன்மைகளைச் செய்வது, யார் இந்தத் தொகுதியை கவனிப்பது, யார் இந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு அனுசரணையாக இருப்பது என்கின்ற அந்தப் போட்டியே தவிர வேறல்ல. நாளைக்கு நானே கூட ஒரு வேளை மீண்டும் முதலமைச்சராக உங்களுடைய அன்பால், அருளால் ஆகிவிட்டால் வேறொரு தொகுதியிலே நின்று வெற்றிப் பெற்று வருகின்ற எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களை அவர்கள் எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் ஆயிற்றே என்று நான் வெறுக்க மாட்டேன்.

அவர்களையும் அனுசரித்து, அவர்களுக்கும் நிலைமைகளை எடுத்து விளக்கி, திருவாரூர் பகுதியிலே, இந்தத் தொகுதியிலே இன்னும் என்னென்ன வேலைகள் நடைபெற வேண்டும், இதுவரையில் நடைபெற்றுள்ள சாதனைகள் போதுமானவைகளா? பாதாளச் சாக்கடை ஆரம்பிக்கப்பட்டு முக்கால் பகுதியிலே நிற்கிறது, இன்னும் கால் பகுதி நிறைவேற்றப்பட வேண்டும், அதற்கு ஒத்துழைப்பை நல்கக் கோருவேன்.

என்னோடு சண்டை போட்டவர்கள் சண்டை போட்டவர்கள் அல்ல, என்னோடு போட்டி போட்டவர்களைக் கூப்பிடாமல் தான் இதைச் செய்வேன் என்று நான் எந்தக் காலத்திலும் அவ்வளவு ஜனநாயகம் தெரியாதவனாக இருக்க மாட்டேன்.

எல்லோரையும் அனுசரித்து, எதிர்க்கட்சியையும் மக்கள் கட்சி தான், அவர்களும் மக்களுக்காகப் பாடுபடுகிறவர்கள்தான் என்றெண்ணி அவர்களையும் சேர்த்துக் கொண்டு தான் திருவாரூர் தொகுதிக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வேன் என்றார்.

## தடுப்புகளை கடந்த ராகுல் காந்தியின் காலில் ஆணி குத்தியதால் பரபரப்பு

**ஆலப்புழா:**
கேரளாவில், தேர்தல் பிரசாரத்திற்கு வந்த காங்கிரஸ் கட்சி பொதுச் செயலர் ராகுலின் காலில் ஆணி குத்தியது. அவரது காலில் இருந்த ஆணியை அகற்றிய பாதுகாப்பு படையினர், பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு சென்றனர்.



செங்கன்னூர் நகராட்சி மைதானத்தில் நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் கூட்டம் முடிந்து மேடையை விட்டு இறங்குகையில், தன்னை நோக்கி கையசைத்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த மக்களை நோக்கி, தடுப்பு வழியாக வெளியே வந்தார். இதனால் மகிழ்ச்சியடைந்த கூட்டத்தினர், ராகுலின் கைகளை தொட்டுவிட முயற்சித்து, தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டனர். இதனிடையே அவர்களை நோக்கி கை வீசியபடி வந்த ராகுலின் காலில் இருந்த செருப்பையும் மீறி, ஆணி குத்தியது. எனினும் அவர் அதை எடுக்க முயற்சித்தார். இந்நிலையில் ராகுலைக் கண்ட பாதுகாவலர்கள் பதற்றமடைந்ததோடு, அவரது காலில் குத்தியிருந்த ஆணியை அகற்றி, அவரை பாதுகாப்பு வளையத்திற்குள் அழைத்துச் சென்றனர்.

அப்போதும் அவர், பொது மக்களை பார்த்து கையசைத்தவாறே சென்றார்.

## தமிழக முதல்வர் யார்?: காங்கிரஸ் மழுப்பல்

**புதுடில்லி,**
முதல்வர் பதவிக்கு கருணாநிதி குடும்பத்தில் போட்டி இருக்கிறதா என்கிற கேள்விக்கு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி மழுப்பலாகப் பதிலளித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்றால் கருணாநிதி தான் முதல்வராகப் பொறுப்பேற்பார் என்று மத்திய அமைச்சர் மு.க.அழகிரி அண்மையில் கூறியிருந்தார். தமது சகோதரர் மு.க. ஸ்டாலின் முதல்வர் பதவிக்கு வரமாட்டார் என்பதையே அழகிரி மறைமுகமாகக் அப்போது குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக அபிஷேக் சிங்வியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, இந்த விவகாரத்தை தேர்தலுக்குப் பிறகு கவனிப்போம் என்று கூறினார். இல்லாத ஒரு பிரச்சினையை இப்போது நான் எதிர்பார்க்கவில்லை. இப்போது தீவிரமான பிரசாரத்தில் ஈடு பட்டிருக்கிறோம். வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறோம். வெற்றி ஒன்று மட்டுமே எங்களது குறிக்கோள். வேறு பிரச்சினையில் நாங்கள் கவனத்தைச் சிதறவிட விரும்பவில்லை என்று அவர் பதிலளித்தார்.

## கோவை விஜய் ரசிகர் மன்றங்கள் கலைப்பு: தி.மு.க.வில் ரசிகர்கள்

**கோவை:**
கோவையில் விஜய்யின் ரசிகர் மன்றங்கள் கலைக்கப்பட்டதாகவும், இவர்களில் ஒரு பகுதியினர் தி.மு.க.வில் சேர்ந்ததாகவும் அறிவித்துள்ள செய்தியொன்று வெளியாகியுள்ளது.



நடிகர் விஜய்யின் தந்தையும் விஜய் மக்கள் இயக்க நிறுவனத் தலைவருமான இயக்குநர் எஸ்.ஏ சந்திரசேகரன் கடந்த சில தினங்களுக்கு முன் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை சந்தித்து, அந்த கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இதனை எதிர்த்து ஏற்கெனவே சேலத்தில் சில ரசிகர்கள் தி.மு.க.வை ஆதரிப்பதாகக் கூறி மன்றத்தைக் கலைத்தனர். ஆனால் இதனை எஸ்.ஏ சந்திரசேகரன் மறுத்திருந்தார்.

இந்நிலையில் கோவையில் விஜய் ரசிகர் மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுமார் 300 பேர், தங்கள் மன்றங்களைக் கலைத்து விட்டு, தி.மு.க.வில் இணைந்தனர். மேலும் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்ததற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் விஜய் உருவம் பதித்த பதாகைகளை தீ வைத்து எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடந்த சில தினங்களுக்கு முன் விஜய் மக்கள் இயக்கத்தில் மாநில பதவி வகித்த ஜெயசீலன், திருவள்ளூர் மாவட்ட நிர்வாகி ஸ்டாலின் பிரபு ஆகியோர் அந்த இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டதாக சந்திரசேகர் அறிவித்தார். அவர்கள் உடனடியாக தி.மு.க.வில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போது கோவையில் ஏற்பட்ட நிலைமை குறித்து விஜய் தரப்பில் விசாரித்த போது, ஆளும் கட்சி கடைசி நேரத்தில் செய்யும் பரபரப்பு இது. கோவை ரசிகர் மன்றங்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாக தெரிவித்தனர்.

## பிரபல நடிகையை கொலை செய்ய சதி செய்தவர் கைது

**டில்லி:**
பிரபல இந்தி நடிகை மல்லிகா ஷெராவத்தை கொலை செய்ய சதி திட்டம் தீட்டிய முன்னாள் குற்றவாளி ஒருவர் டில்லியில் கைது செய்யப்பட்டார்.

ராஜேஷ் தலால் (வயது 35) என்ற இவர் ஜாட் சமூகத்தினர் பற்றி அவதூறாக பேசியதாக, நடிகை மல்லிகா ஷெராவத்தை கொலை செய்ய சதி திட்டம் தீட்டியதாக கடந்த 2006 ஆம் ஆண்டில் மும்பையில் கைது செய்யப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

3 வருடங்களுக்குப்பிறகு தேர்வு ஒன்று எழுதுவதற்காக 5 நாட்கள் பரோலில் சென்ற ராஜேஷ் அப்போது தலைமறைவாகிய நிலையில் அவரை பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையில், தனது நண்பருடன் டில்லி வந்த ராஜேஷை பொலிஸார் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தகட்ட அரசியலமைப்பு மாற்றத்தில் தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடக்கப்படும்?

பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பிரதான தேர்தல் முறைமை மாற்றம் குறித்து அரசாங்கம் அடுத்தகட்டமாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் அடுத்தகட்ட அரசியலமைப்பு மாற்றத்தில் தேர்தல் முறைமை மாற்றம் குறித்த விடயம் உள்ளடக்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்படும் என்று ஆளும் கட்சியினர் கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது தெரிவித்திருந்தனர்.

இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தல் திருத்தச்சட்டம் தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்ட போதும் அது நிறைவேற்றப்படவில்லை. சில திருத்த யோசனைகளுடன் உள்ளூராட்சிமன்ற புதிய தேர்தல் முறைமைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தது.

அதாவது 70 வீதம் தொகுதி முறைமையிலும் 30 வீதம் பிரதேசவாரி முறைமையிலும் அமையும் வகையில் புதிய உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பிரதான தேர்தல் முறைமையும் கலப்பு முறைமையாகவே அமையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் தேர்தல் முறைமை மாற்றம் குறித்து ஆராய்ந்த கடந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பரிந்துரைகளில் சில திருத்தங்களை மேற்கொள்வதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய கலப்பு தேர்தல் முறைமைக்கு செல்லலாம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

# சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய அமர்வில் அரசாங்கத்தின் சார்பில் மஹிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி. சில்வா கலந்துகொள்வர்

பனாமாவில் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் கூட்டத் தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் கூட்டத் தொடரின் மனித உரிமைகள் தொடர்பான அமர்வில் இலங்கை தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு தாங்கள் பதிலளிக்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான பல்வேறு விவகாரங்கள் குறித்து மனித உரிமை அமர்வில் கலந்துரையாடப்படும் என்றும் அதன் போது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தாம் அங்கு அறிவிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## ஐ. நா. ...(தொடர்ச்சி)

என்றும் சில வேளைகளில்

அது பகிரங்கப்படுத்தப்படாமல் கூடப் போகலாம் என்றும் இன்னர் சிற்றி பிரஸ் கூறியுள்ளது.

அதேவேளை ஐ. நா. நிபுணர்கள் குழுவை இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் சந்தித்துப் பேசியதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளது குறித்து இன்னர் சிற்றி பிரஸ் ஐ. நா பொதுச்செயலரின் மூத்த நிர்வாக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர்கள் அப்படிக் கூறியுள்ளது தனக்கு ஆச்சரியமளிப்பதாகக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நடக்கவில்லை என்பதால் ஆச்சரியப்படுகிறீர்களா அல்லது அதுபற்றி இரகசியம் பேணுவதென்று இருதரப்பும் உறுதியளித்ததால் ஆச்சரியப்படுகிறீர்களா என்று கேள்வி எழுப்பியதற்கு அவர் தான் தற்போது ஆச்சரியமடைவதாக மட்டும் கூறியுள்ளார்.

## ஆளும்தரப்பு...(தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் குறித்த விடயம் மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளில் ஆளும் தரப்பின் சார்பில் கலந்துகொள்ளும் அமைச்சர்களில் ஒருவரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அண்மையில் லண்டனில் வைத்து கருத்து வெளியிடுகையில் :-

இலங்கையில் முரண்பாடுகளுக்கு பின்னரான நிலைமையில் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஏற்கனவே மூன்று சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இம்மாத இறுதியில் மற்றுமொரு பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

## அமெரிக்கா...(தொடர்ச்சி)

அமெரிக்கா இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து அடுத்தக்கட்டமாக என்ன நடவடிக்கைகயை மேற்கொள்வது என்பது குறித்தே வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அமெரிக்காவின் அறிக்கைக்கு இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சு பதிலளிக்குமா? என்பது இன்னும் உறுதிபடுத்தப்படவில்லை என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்காவின் அறிக்கை குறித்து கருத்து வெளியி[illegible]ருந்த மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இலங்கை தொடர்பில் அமெரிக்கா இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படுகின்ற விடயங்கள் நம்பிக்கையற்ற மற்றும் பக்கச்சார்பான மூலங்களிலிருந்து பெறப்பட்ட அடிப்படையற்ற தரவுகளை பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...(தொடர்ச்சி)

இதேவேளை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் மீது அமெரிக்கா தனிப்பட்ட ரீதியில் குற்றச்சாட்டுக்களை வைக்குமானால் அதனை ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கும். நாடு என்ற வகையில் அதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து ரவி கருணநாயக்க எம்.பி. மேலும் கூறுகையில்

இலங்கை விடயம் குறித்து அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கை குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். அதாவது இந்த அறிக்கையின் ஊடாக ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் மீது அமெரிக்கா குற்றம் சுமத்துமானால் அதனை நாம் எதிர்க்கின்றோம்.

இலங்கை என்ற வகையில் ஐக்கிய தேசிய கட்சி இந்த நிலைப்பாட்டில் இருக்கின்றது. நாடு என்ற ரீதயில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம்.

ஆனால் மறுபுறம் அமெரிக்கா ஏன் இவ்வாறு ஒரு அறிக்கையை வெளியிடுகின்றது என்பது குறித்து நாம் ஆராய வேண்டியுள்ளது. அதாவது அரசாங்கத்தின் திறமையற்ற செயற்பாடுகளின் காரணமாகவே இவ்வாறான அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

மேலும் மனித உரிமைகளை பாதுகாக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் இதனை விட முக்கியத்துவம் செலுத்தி செயற்பட வேண்டும். அனைத்து மக்களினதும் மனித உரிமைகளை பாதுகாத்து சகல மக்களும் சகல உரிமைகளுடனும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சு தமது பொறுப்பை சரியாக செய்கின்றதா? நாட்டின் நிலைமை தொடர்பில் வெளிநாடுகளுக்கு உரிய முறையில் வி[illegible]கம் அளிக்கப்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. இந்த விடயத்தில் வெளிவிவகார அமைச்சு மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றார்.

## வலிகாமம்...(தொடர்ச்சி)

நிலையில் வாழ்ந்துவருகின்றனர். எந்த மனிதாபிமான தொண்டு அமைப்புக்களும் தமக்கு உதவிசெய்ய முன்வரவில்லையென மீள்குடியேறிய மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை வலி. வடக்கில் மீள்குடியேறிய மக்களை பாராளுமன்ற உறுப்பினர் சந்தித்தார். இதன் போதே மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

கடந்த திங்கட்கிழமை வலி. வடக்கில் மீள்குடியேறிய மக்களை சந்திப்பதற்குச் சென்றபோது கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஆளரவமற்ற இடமாக இருந்த இப்பிரதேசம் தற்போது காடு மண்டி, புதர்கள் நிறைந்து காட்சி தருகின்றது.

அங்கு மீள் குடியேறிய மக்கள் எதுவித அடிப்படை வசதிகளும் அற்றநிலையில் வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கமோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ அல்லது பொது அமைப்புக்களோ எதுவித உதவிகள் செய்யாத நிலையில் மக்கள் தமது வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளது. ஒருசில பகுதிகளில் இராணுவத்தினரின் முகாம்கள் இருப்பதால் அவ்வீதியால மக்கள் செல்லமுடியாது இருப்பதுடன் பல மைல் தூரம் சுற்றியே வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

இங்குள்ள பெண்களுக்குக் கூட எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான தேவைகள் உடனடியாக செய்யப்பட வேண்டும். மலசல கூடங்கள் இல்லாத பிரச்சினை தற்போதும் தொடர்கிறது. அத்தோடு, குடிநீர்ப் பிரச்சினையும் தலைதூக்கியுள்ளது.

குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு வலி. வடக்கு பிரதேச சபையால் ஒரு நேரம் மாத்திரமே பவுசர் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நீரைக் கொண்டே நாள் முழுவதற்குமான குடிநீர்த்தேவையை இம்மக்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. எனவே, இதனை இரண்டு தடவை வழங்கவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மக்களுக்கான குடிநீர் வலி. வடக்கு பிரதேச சபை விநியோக்கும் போது அதற்கான டீசல் செலவை சேவாலங்கா நிறுவனம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள கிணறுகள் ஆழமாக உள்ளமையினாலும் சேதமடைந்து துப்புரவு செய்யப்படாமல் உள்ளன.

மேலும், நகுலேஸ்வரம் பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு தற்காலிக தங்குமிடம் அமைப்பதற்குக் கூட எதுவித வசதிகளும் அவர்களுக்கு செய்துகொடுக்கப்படவில்லை. வலித்தூண்டல், வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியேறியுள்ள போதும் அவர்களும் தமது பகுதியில் தொழில்புரிவதற்கு கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 குடும்பங்கள் மீள்குடியேறிய நிலையில் இவர்களுக்கு 12 கூரைத் தகரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இது தவிர,வேறு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. இம் மக்களுக்கு தொழில்செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த மக்களது அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டியது அவசர தேவையாக உள்ளது. தடுப்பு முகாம்களில் இருந்து அனுபவித்த துன்பத்தை விட சொந்த இடத்திலும் தாம் பல சிரமங்களை அனுபவிப்பதாக இம் மக்கள் முறையிடுகின்றனர்- என சுரேஷ் எம்.பி. தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடையை குளிர்ச்சியாக்கலாம்



✱)கோடையின் வெப்பத்தைக் குறைக்க மோரே அருமருந்தாகும். மதிய வேளையில் மோரில் நன்கு நீர் கலந்து அதனுடன் சீரகம், கொத்தமல்லி சேர்த்து குடிப்பது நல்லது.

✱)கோடை காலத்தில் டிபன் அதாவது தோசை, பூரி, பரோட்டா இவற்றை தவிர்ப்பது நல்லது. காலையில் இட்டலி, ஓட்ஸ் அல்லது கேழ்வரகு, கம்பு இவற்றை கஞ்சியாக செய்து சாப்பிடலாம். இதனால், உண்ட உணவு எளிதில் ஜீரணமாகும்.

✱)மதிய உணவில் அதிக காரம், புளி சேர்க்காமல் நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவது நல்லது. பரங்கிக்காய், பூசணிக்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

✱)இளநீர், பனை நுங்கு ஆகியவை உடல் வெப்பத்தைத் தணித்து உடலுக்கு சக்தியைக் கொடுக்கும்.

✱)ஒரேஞ், சாத்துகுடி, கீரணிப் பழச் சாறு, எலுமிச்சை பழச் சாறு, பதநீர் சாப்பிடலாம். தர்ப்பூசணி, பப்பாளிப் பழம் சாப்பிடலாம்.

✱)குடிநீரை கொதிக்கவைக்கும் போது அதில் சீரகம் கலந்து கொதிக்கவைத்து ஆறிய பின்னர் குடிநீராக அருந்தலாம். தினமும் குறைந்தது 3 லீற்றர் தண்ணீர் அருந்தினால் தான் வெப்பத்தால் உண்டான உடல் சூடு குறைந்து சமநிலைப்படும்.

✱)வாயுவைத் தூண்டும் உணவுகளை தவிர்த்தல் நலம். இரவு உணவு மென்மையாக இருக்க வேண்டும். எளிதில் ஜீரணமடையும் உணவுகளை உண்பது நல்லது.

✱)தினமும் இருமுறை குளிப்பது நல்லது. அதிக வியர்வை இருக்கும் போது, வெயிலில் இருந்து திரும்பிய உடன் குளிக்கக் கூடாது.

✱)மதிய வெயிலில் அலைவதைத் தவிர்க்கவேண்டும். முடிந்தவரை பகலில் நீண்ட தூரப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

✱)வெயில் தாக்காமலிருக்க தலையில் தொப்பி வைத்துக் கொள்ளலாம். தலை அதிகம் வியர்க்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

✱)வெளியில் செல்லும்போது முகம், கை, கால்களில் லேசாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாம். இதனால், சருமம் வறட்சியடையாமல் இருக்கும்.

✱)வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது.

✱)கோடை வெப்பத்தின் போது அதிக நேரம் குளிரூட்டப்பட்ட அறையில் இருப்பது நல்லதல்ல. அதுபோல், வெய்யிலில் அலைந்து திரிந்த பின் வியர்வையுடன் குளிரூட்டப்பட்ட அறைகளுக்கு செல்வதும் நல்லதல்ல.

✱)நீரிழிவு நோயாளிகள் கோடை காலத்தில் அதிகம் வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும். கை, கால்களுக்கு எண்ணெய் தடவவேண்டும். உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

✱)படுக்கையறை நன்கு காற்றோட்டமானதாக இருக்க வேண்டும். பருத்தியினால் தயாரிக்கப்பட்ட விரிப்புகளை பயன்படுத்துவது நல்லது.

✱)வெளியே செல்லும் போது கறுப்பு வண்ணக் குடைகளை தவிர்த்து வெண்நிறக் குடைகளை பயன்டுத்துவது நல்லது. வெண்ணிறக் குடைகள் சூரிய வெப்பத்தை உள்வாங்காது.

## முட்டை பச்சி



**தேவையான பொருட்கள்:**

முட்டை - 02, கடலை மாவு - 100 கிராம், உப்பு - தேவையா ளளவு, மிளகுத்தூள் - தேவையான அளவு, தண்ணீர் - தேவையான அளவு, தேங்காயெண்ணெய் - 1/4 போத்தல்.

**செய்முறை:**

முட்டைகளை அவித்தெடுத்து ஒவ்வொன்றையும் நீளவாக்கில் 4 துண்டுகளாக வெட்டிக்கொள்க. கடலை மாவுக்கு அளவாக உப்புத் தூள், மிளகுத்தூள் சேர்த்து தண்ணீர் விட்டு கூழ்ப்பதமாக கரைத்தெடுத்துக் கொள்க. தாச்சியில் எண்ணெயை விட்டு கொதித்ததும் முட்டைத் துண்டுகளை கரைத்த கடலை மாவில் தோய்த்தெடுத்து கொதிக்கும் எண்ணெயுள் இட்டு பொன்னிறமாகும் வரை பொரித்தெடுத்துக் கொள்க.

## கோக்கனற் பவ்

**தேவையான பொருட்கள்:**

வறுத்த தேங்காய்ப்பூ - 10 மேசைக்கரண்டி, பசும்பால் - ஒரு தம்ளர், பால்மா (லக்ஸ்பிறே) - 4 மேசைக்கரண்டி, வறுத்த கச்சான் முத்து - 4 மேசைக்கரண்டி, சீனி - 350 கிராம், சிறிதாக ஒடித்த கறுவா - ஒரு மேசைக்கரண்டி, கலரிங் - ஒரு தேக்கரண்டி, மாஜரீன்- 1 மேசைக்கரண்டி.

**செய்முறை:**

தாச்சியில் மாஜரீனை உருகவிட்டு வறுத்துத் துப்புரவாக்கிய கச்சான் முத்துக்களைப் போட்டு பொன்னிறமாகப் பொரித்து அப்படியே மாஜரீனுடன் சேர்த்து பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

பின்பு, பசுப்பாலில் பால்மாவை கட்டிபடாமல் நன்கு கரைத்து சீனியும் சேர்த்து அடுப்பில் வைத்துக் கலவை தடித்து வரும் வரை இடைவிடாமல் கரண்டியால் துழாவிக் கொள்ளவும்.

கலவை நன்கு தடிக்கத் தொடங்கியதும் மாஜரீனையிட்டு சேர்த்துக்கொண்ட பின் கறுவாத்தூள், பொரித்தெடுத்த கச்சான் முத்து, பொன்னிறமாக வறுத்த தேங்காய் பூ போன்வற்றை சேர்த்து இடைவிடாது கிளறி கலவை சட்டியில் ஒட்டாது திரளும் பதத்ததை அடைந்ததும் கலரிங்கும் சேர்த்து இறக்கிக் கொள்க.

பின்பு மாஜரீன் பூசிய தட்டில் இக் கலவையைக் கொட்டி மாஜரீன் பூசிய வாழையிலைத் துண்டால் நன்கு அழுத்தி 1" தடிப்பாகப் பரவி 1"து1" அளவு கொண்ட சதுரத் துண்டுகளாக வெட்டிக் கொண்டு மூன்று மணி நேரத்தின் பின் ஒவ்வொரு துண்டுகளாகப் பிரித்தெடுத்து பக்கம் மாற்றி வேறோர் தட்டில் அடுக்கி வைத்து 3 மணி நேரம் உலர வைத்த பின் பரிமாறலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படாத முன்னாள் போராளிகளை

# தேடியலையும் பெற்றோர்கள்

இப்போதெல்லாம் முன்னாள்.பெண் போராளிகளின் குடும்ப வாழ்க்கை, சமூகத்துடன் இணைந்து வாழ்வது, புனர்வாழ்வு பற்றியெல்லாம் பலரும் கதைக்கிறார்கள். விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை பொறுத்தவரை அவர்களது எதிர்காலம் பற்றி எவரிடமும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கப்போவதில்லை. ஆனால், விடுவிக்கப்பட்டவர்களுள் முழுமையாக போரட்டத்தில் ஈடுபட்டவர்கள் எத்தனை பேரென்பதற்கு எவரிடமும் விடைகிடையாது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் சுலபமாக வெளியார் வகைப்படுத்தக் கூடிய மூன்று பிரிவுகளே இறுதிக் காலப்பகுதிகளில் இருந்திருந்தன. சுயவிருப்பினில் இணைந்து கொண்டவர்கள், கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினில் ஊதியத்தில் பணியாற்றியவர்களென இவ்வகைப்படுத்தல்கள் அமைந்துவிடுகின்றன. பின்னைய இரு தரப்புக்களும் கூட விடுதலைப்புலிளென்ற வகைப்படுத்தல்களுள் கைதுசெய்யப்பட்டேயிருந்தனர்.

முள்ளிவாய்க்காலில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த இடைத்தங்கல் முகாம்களில் பிடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை பலமடங்காகும். விடுதலைப்புலிகளுடன் ஏதாவது ஒரு நாளேனும் இணைந்து பணியாற்றிருந்தால் கூட பதிவுகளை மேற்கொள்ளுமாறு படைத்தரப்பு ஒலிபெருக்கிகளூடாக அறிவித்திருந்தது. பதிவின் பின்னர் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு விடுவரென்ற உறுதிமொழியினை நம்பியே பெரும்பாலானோர் சரணடைந்துமிருந்தனர். ஆனால், அனைவருமே வாகனங்களில் ஏற்றப்பட்டு விஷேட தடுப்புமுகாம்களுக்கு கொண்டுசெல்லப்பட்டும் விட்டனர்.

இவற்றுக்கப்பால் பரஸ்பரம் காட்டிக் கொடுப்புக்கள், பழிவாங்கும் வகையிலான மாட்டிவிடுதல்களெனவும் ஆயிரக்கணக்கானோர் பிடித்துக் கொண்டு செல்லப் பட்டனர். 12,000 பேர்வரை இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சுயாதீனத் தரப்புக்கள் இவ்வாறான புள்ளிவிபரங்களை கூறுகின்ற போதும் கைதுசெய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்களுள் விடுவிக்கபட்டோர், தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் தொடர்பான உண்மை புள்ளிவிபரங்கள் அரசை தவிர வேறு எவரிடமும் இருந்திருக்கவில்லை. அரசின் அமைச்சர்களோ அல்லது புனர்வாழ்வுக்கான படை அதிகாரிகளோ தெரிவிப்பதே புள்ளிவிபரங்கள் என்றாகி விடுகின்றது.

யுத்தம் முடிவுற்று இரண்டாம் ஆண்டு எட்டப்படுகின்ற நிலையில் கூட தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளது பெயர்விபரங்களை வெளியிட அரசு பின்னடித்தே வருகின்றது. முன்னதாக தமிழ்த் தேசிய கூட்மைப்புடன் அரசின் அமைச்சர்கள் நடத்திய பேச்சுக்களையடுத்து பெயர்ப்பட்டியல் வவுனியாவில் காட்சிக்கு வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. வாரங்கள் பல கடந்தபோதும் அவ்வாறான பட்டியல்களெதுவுமே வெளிவந்திருக்கவில்லை. தற்போது மீண்டும் எதிர்வரும் 16 ஆம் திகதி பட்டியலை வெளியிடுவது பற்றி பேசப்படுகின்றது.

உண்மையில் பெருமளவிலான முழுமையான முன்னாள் போராளிகளது நிலை பற்றி எதுவுமே அறிந்திராத நிலையே குடும்பங்களுக்கு இருக்கின்றது. அமைச்சர்கள் டியு .குணசேகரவே புலிகளின் முக்கியஸ்தர்களான பாலகுமாரன், யோகி உள்ளிட்ட பலரும் இறந்துவிட்டனர் என ஊடகங்களுக்குக் கூறியிருந்தார். ஆனால் பின்னர் அவர் பல்டியடித்தும் கொண்டார்.

வீட்டுவாசலில் வைத்து தமக்கு முன்னால் கைதுசெய்யப்பட்ட கணவர்மார் இராணுவ வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டதாக யோகி, புதுவை இரத்தினதுரை உள்ளிட்டோரது மனைவிமார், நல்லிணக்க ஆணைக்குழு முன்பதாக வாக்குமூலமளித்தனர். தமது கணவர்மாரை படையினர் பிடித்துச்சென்றது தொடர்பாக சகல தரப்பிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் கூட தொள்ளாயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகளைப் பெற்றிருக்கின்றது.

ஆனால், இலங்கை அரசோ தற்போது பகிரங்கமாக இயங்குகின்ற தடுப்பு முகாம்களில் உள்ளோர் பற்றியே கணக்குக்காட்ட முற்படுவதாக நம்பப்படுகின்றது. இவ்வாறான தடுப்புமுகாம்களிலுள்ள முன்னாள் போராளிகளுள் கணிசமானோரை அவர்களது குடும்பங்கள் சந்தித்துப் பேச அனுமதிக்கப்பட்டே இருக்கின்றது. அவ்வாறானவர்களது பெயர் விபரங்கள் வெளிவருகின்றமை குடும்பங்களுக்கு எந்தவித பலாபலனையும் தரப்போவதுமில்லை. ஆனால், உயிருடன் உள்ளாரா? இல்லையா என்ற கேள்வியுடன் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இப்போதும் அலைந்து திரிந்து கொண்டேயிருக்கின்றன.

பெண் போராளிகளது எண்ணிக்கைகள் தொடர்பான சர்ச்சைகளும் தொடர்கின்றன. பெண் போராளிகள் பெரும்பாலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுவிட்டதாக அரசு கூறுகின்றது. ஆயினும், மூத்த பெண் போராளிகள் உள்ளிட்ட பலரது நிலை என்னவென்பது தெரியாதேயுள்ளது. அவர்களது பெற்றோர் இப்போதும் தமது பிள்ளைகளை தேடி அலைந்துகொண்டேயிருக்கின்றனர்.

முன்னாள் போராளிகளது நிலையினைப் பொறுத்தவரையில் இப்போதைய அவசரமாக உள்ளது அவர்களது உயிருடனான இருப்பு மட்டுமே. அவர்கள் பாதுகாப்பாக உயிருடன் உள்ளனரென்ற உறுதிமொழியை உரிய தரப்புக்கள் வழங்கவேண்டும். அடுத்ததாக, அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் சந்திப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அரசு கூறுவது போன்ற அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் நீதிமன்றில் அவர்கள் ஆஜர்படுத்தப் படவேண்டும். தமது தரப்பு நியாயத்தையும் நீதிமன்றில் கூற அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

அவர்கள் குற்றவாளிகளா? இல்லையா என்பதை நீதிமன்றங்கள் தீர்மானிக்கும் வரை அவர்களது குடும்பங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்கான வாழ்வாதாரங்கள் ஏற்படுத்தி வழங்கப்படவேண்டும். அதுவரை அவர்களது குடும்பங்கள், தப்பிப்பிழைப்பதற்கான பொருளாதார தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். பெரும்பாலான போராளிக் குடும்பங்கள் முன்னர் உதவு தொகையினைப் பெற்றே வாழ்ந்தும் வந்திருந்தன. ஆனால், அவை இப்போது அநாதரவாக கைவிடப்பட்டேயுள்ளன. இவர்களுக்கான உதவிகளை வழங்க புலம்பெயர் சமூகமே உதவவேண்டும்.

ஆனால், முன்னாள் போராளிகள் குடும்பத்துடன் இணைவது போன்ற முதன்மையான விடயங்களைத் திசைதிருப்பவே சமூகப்பிரச்சினை, பெண் போராளிகளது எதிர்காலம் போன்ற விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. அதனை சக ஊடகங்களும் முன்னுரிமை வழங்கி பிரசுரித்து வருகின்றன.

அதேவேளை, போராளிகளது இருப்பு, விடுதலை, குடும்பங்களுடனான இணைவு பற்றி எவரும் எதுவுமே பிரஸ்தாபிக்காதவர்களாக

பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## சிம்பிள் சயன்ஸ்



நாம் சைக்கிள் ஓட்டும் போது முதலில் சற்று கடினமாக இருக்கும். பிறகு சைக்கிள் மிதிப்பது சுலபமாக இருக்கும். இதற்கு காரணம் என்ன?

நியூட்டனின் முதலாம் விதிப்படி எந்த ஒரு பொருளும் விசையேதும் பிரயோகிக்கப்படலையென்றால் தன்னிலையிலேயே இருக்கும். இந்த அடிப்படையில் நமது உடலும் அசைவற்ற நிலையில் உள்ளது.

எனவே, நீங்கள் சைக்கிள் மிதிக்க ஆரம்பிக்கும் போது அதிக விசை தேவைப்படுகிறது. பிறகு எளிதாகிவிடுகிறது. அதாவது, ஒரு முறை சைக்கிள் இயங்க ஆரம்பித்த பிறகு எளிதாகிவிடும். அதேபோல, இயங்கிக் கொண்டிருக்கும் சைக்கிளை நிறுத்துவதற்கும் ஒரு விசை தேவைப்படுகிறது. அதாவது பிரேக் போடும் போது சக்கரத்தின் உராய்வினால் ஏற்படும் தடையால் சைக்கிள் நிற்கிறது.



## தவளைக்கு கலர் அடிச்சது யாரு?

அமேசன் பகுதியின் தரை மற்றும் தண்ணீரில் வாழும் உயிரினங்களை பற்றி ஆராய்ச்சியாளர்கள் முதலில் அதிக அக்கறை காட்டவில்லை. இப்போது அங்குள்ள தாவரங்கள், விலங்கினங்களின் முக்கியத்துவம் கருதி தங்கள் ஆராய்ச்சியை அப்பகுதியில் முடுக்கிவிட்டுள்ளனர்.

தவளை இனத்தை பற்றி ஒரே ஒரு ஆராய்ச்சிதான் இதுவரை மேற்கொள்ளப்பட்டது. கயானாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உலகின் மொத்தமுள்ள 70 தவளை இனங்களில் அதிகப்படியான தவளை இனங்கள் இங்குதான் காணப்படுகின்றன என அறிந்தனர்.

இருட்டின் பின்தான் தவளைகள் நடமாட்டம் அதிகமாகும். ஒவ்வொரு வகை தவளை இனமும் குறித்த ஒலியை எழுப்பும். இதன் மூலம் தம் இனத்தவர்களுடன் இணைந்திடும். இரவில் மின்சூழ் (டோர்ச்) வெளிச்சத்தை தரையில் பாய்ச்சினால் மினுங்கும் புள்ளிகள் தெரியும். கற்களில் அமர்ந்து ஈரப்பதத்தை அனுபவிக்கும் தவளைகளது கண்களின் பிரதிபலிப்புத் தான் அவை. எண்ணிக்கையில் எக்கச்சக்கமாகக் காணப்படுகிறது.

இனபெருக்கத்திற்கு இவை நம்புவது தண்ணீரைத் தான். சில வகை தவளைகள் தண்ணீரில் முட்டையிட அம்முட்டைகள் தாவரங்களில் போய் ஒட்டிக்கொள்ளும். சில தவளைகள் முட்டையை சுற்றி தன் வாயிலிருந்து வெள்ளைத் திரவத்தை பீய்ச்சிடும். இந்தத் திரவம் முட்டைக்குத் தேவையான ஈரப்பதம் மற்றும் பிராணவாயு அளவை உறுதிசெய்யும். முட்டையை சுற்றிய இந்த விநோத அமைப்பு எதிரிகளிடமிருந்து காக்கிறது. சில தவளைகள் தங்கள் குஞ்சுகளின் அருகேயே இருக்கும். கங்காரு போல இதன் முதுகில் இருக்கும் அமைப்பில் குட்டிகள் வளரும். குட்டிகள் வளர்ந்ததும் தண்ணீரில் விட்டுவிடும்.







செ.இலக்கியா தரம் 6B
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

## சேவையில் என்னை மிஞ்சிவிட்டாய்...



ஒரு சமயம் ஒரு ஏழைத் தாய்க்கு மூன்று ரொட்டித் துண்டுகளை வழங்கினார் அன்னை தெரேசா. பசியோடு இருக்கும் ஒருவருக்கு உணவு வழங்கினால் அவர் அந்த இடத்திலேயே சாப்பிட்டு விடுவார்.

ஆனால், ரொட்டித் துண்டுகளை வாங்கிய பெண்மணியோ, அவற்றை சாப்பிடாமல் அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடத்தொடங்கினாள். அதைக் கண்டு ஆச்சரியப்பட்ட அன்னை தெரேசா, "சற்று நில்லம்மா!" என்றார். அந்தப் பெண் நின்றாள். அவள் அருகே சென்ற அன்னை தெரேசா, "சாப்பிடாமல் எங்கே ஓடுகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண்மணி, "அன்னையே நானாவது பரவாயில்லை... இரண்டு நாள் பட்டினி. எனது பக்கத்து வீட்டுப் பெண் தன் மக்களோடு மூன்று நாட்களாக பட்டினி கிடக்கிறாள். இந்த ரொட்டித் துண்டுகளை அவர்களுக்குக் கொடுக்கத்தான் வேகமாகப்போகிறேன்" என்றாள். அதைக் கேட்டு அதிர்ந்தார் அன்னை தெரேசா. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள அவருக்கு சில விநாடிகளாயிற்று. அவருக்கு கண்ணீரே வந்துவிட்டது. அவர் அந்தப் பெண்மணியின் கன்னத்தை அன்புடன் தடவி, "அம்மா,



உ.சர்மினி தரம் 4B
கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலை

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மருந்து கடத்திய நபருக்கு ஈரான் சிறையில் தூக்கு தண்டனை

ஈரானில் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டதாக அந்நாட்டைச் சேர்ந்த கைதிக்கு சிறையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானில் கடுமையான குற்றங்களுக்கு அதிகபட்சமாக தூக்கு தண்டனை விதிக்கப்படுவது வழக்கம். இந்நிலையில் கரீம்காஹ் என்பவர் போதை மருந்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டதாக கடந்த சில மாதங்களுக்கு முன் அந்நாட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக டெஹ்ரான் நீதிமன்றத் தில் வழக்கு தொடரப்பட்டது.

தற்போது இவர் டெஹ்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் இவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப் பட்டது. இதன்படி நேற்று முன்தினம் சிறைக்குள் தூக்கு தண்டனை விதிக்கப்ப ட்டது.

ஈரானில் கடந்த 2011ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை 93 பேர் பல்வேறு குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ள னர்.

எனினும் அதிகபட்சமாக கடந்த 2009 ஆம் ஆண்டு 179 பேருக்க தூக்கு தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஈரா னின் இத்தகைய தண்டனை குறித்து கவ லை தெரிவித்துள்ளதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் ஈரான் சர்வதேச மனித உரிமை மீறல் சட் டங்களை மீறி கடந்த 3 ஆண் டுகளில் 388 பேருக்கு தூக்கு தண்டனை நிறை வேற்றியுள்ளதாகவும் கூறப்படுகி றது.

எனினும் மரண தண்டனை வழங் குவதில் தற்போது சீனாதான் முன்னிலை வகிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன.



ஆஸ்திரியா தலைநகர் வியன்னால் அந்நாட்டு ஜனாதிபதி ஹெனிஜ் பிஸ்சரை (வலது) சுவிட்சர்லாந் து ஜனாதிப தி மிட்சலின் கல்மி-ரெ சந்தித்துப் பேசினார்.

# ஜப்பானில் தொடரும் துயரம்: அஞ்சலி நேரத்தில் நிலநடுக்கம்

ஜப்பானில் நேற்று முன்தினம் மீண் டும் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலையில், புக்குஷிமா அணு மின் நிலையத்தைச் சுற்றி, மக்கள் வசிக்கத் தடை விதிக்கும் பரப்பளவு அதிகரிக்கப் பட்டுள்ளது.

ஜப்பானில் பயங்கர நிலநடுக்கம் மற் றும் சுனாமி நிகழ்ந்து ஒரு மாதம் கடந்த நிலையில், நேற்று முன்தினம் அதை நினைவுகூரும் வகையில் நாடு முழுவ தும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி கூட்டங்கள் முடிந்த ஒரு மணி நேரத்தில், புகுஷிமாவுக்குத் தெற் கில் 81கி.மீ., தொலைவில் மையம் கொண்ட பயங்கர நிலநடுக்கம் ஏற்பட் டது.

ரிக்டர் அளவுகோலில் 7.1 புள்ளிக ளாக பதிவான இந்நிலநடுக்கத்தால், தலைநகர் டோக்கியோவில் கட்டடங்கள் குலுங் கின.

இதனால், இபாரக்கி மாகாணத்தில் மூன்றடி உயரத்தில் சுனாமி அலைகள் தாக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்க ப்பட்டது.

எனினும், 50 நிமிடங்களுக்குப் பின் அது திரும்பப் பெறப்பட்டது. நில நடுக் கத்தால் புகுஷிமா அணு மின் நிலையத் தில் பணியில் இருந்த ஊழியர்கள், பாது காப்பு கருதி உடனடியாக வெளியேற்றப் பட்டனர்.

ஜப்பான் வானிலை மையம், இன்னும் பல பயங்கர நிலநடுக்கங்கள் நிகழ வாய் ப்பிருப்பதாக எச்சரித்துள்ளது. இந்நிலை யில், புகுஷிமா அணு மின் நிலையத்தில் இருந்து கதிர்வீச்சு தொடர்ந்து வெளியே றிக் கொண்டிருப்பதால், மக்கள் அப் பகு தியில் வசிக்கக் கூடாது என்று அதன் பர ப்பளவை அதிகரித்து உத்தரவிட்டுள் ளது.

அதன்படி, அணு மின் நிலையத்தில் இருந்து 20 முதல் 30 கி.மீ., சுற்றளவிற் குள் உள்ள நகராட்சிப் பகுதிகள் இதில் அடங்கும். இப்பகுதிகளில் வசிக்கும் மக் கள், வேறு இடங்களுக்குச் சென்று விட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள் ளது.

# மூன்றாவது மிகப்பெரிய சுற்றுலா தளமாக சீனா தெரிவு

உலகின் மிகப்பெரிய மூன்றாவது சுற் றுலா தளமாக சீனா இடம் பிடித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இதில் இந்தியா 41 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள் ளது. ஐ.நா.வுக்கான உலக சுற்றுலா அமை ப்பின் சார்பில் உலகின் சுற்றுலா பயணி களை ஈர்க்கும் மிகப்பெரிய 50 சுற்றுலா தளம் கொண்ட நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் கடந்த 2010-11 இன் படி அமெ ரிக்க முதலிடத்தில் உள்ளது. இதில் 78.95 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்து ள்ளது. இரண்டாம் இடத்தில் பிரான்ஸ் உள்ளது. இது 60.88 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளது. மூன்றாம் இடத்தில் ஆசிய நாடான சீனா 52.02 மில் லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள் ளது. சீனாவிற்கு ஸ்பெயின் நிதி உதவி செய்து வந்ததன் காரணமாக சீனாவில் சுற்றுலா பயணிகளின் வருகை 9 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் இந்தியா மிகவும் பின்தங்கி 41 ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியாவிற்கு கடந்த 2010-11இல் வெறும் 5.06 மில்லி யன் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். மேலும் ஐ.நா.வின் அறிக்கையின் படி முதல் 10 ஆசிய நாடுகளில் மலேஷியா முதலிடம் வகிக்கிறது.

இந்நாடு கடந்த 2010-11 ஆம் ஆண்டு 24.06 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளதாவும் கூறப்பட்டுள்ளது?

# விண்வெளிக்கு மனிதன் சென்ற 50 ஆண்டு கொண்டாட்டம்

விண்வெளிக்கு முதன் முதலாக மனி தன் சென்றுவந்ததன் 50 ஆம் ஆண்டு நிறைவு ரஷ்யாவில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

ரஷ்யாவைச் சேர்ந்த யூரிகாகரின் விண் வெளி நிலையத்திற்கு வஸ்ரொக் 1 விண் கலம் மூலம் கடந்த 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி சென்று வெற்றிகர மாக பூமிக்கு திரும்பினார். இதன் 50 ஆம் ஆண்டு விழாவையொட்டி மொஸ் கோவில் வண்ணமய மான வானவேடிக் கையுடன் கொண்டாடபட்டது.

இது குறித்து ஜனாதிபதி டிமெ ட்ரி மித் வதேவ் கூறுகையில் ஆண்டு தோறும் ஏப்ரல் 12 ஆம் திகதியினை விண்வெளி க்கு மனிதன் சென்றதை சர்வதேச தின மாக அறிவிக்க வேண்டும் என ஐ.நா.வி டம் வலியுறுத்தியுள்ளதாக கூறினார்.

# அமெரிக்கா நீதிமன்றத்தில் பணிபுரியும் 103 வயது நீதிபதி

அமெரிக்காவில் விசிதா நகரைச் சேர் ந்த 103 வயதான வெஸ்லி பிரவுன், அங் குள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி யாக பணிபுரிகிறார். இந்த வயதிலும் அவர் சிறப்பாக பணியாற்றும் அவரால் நடக்க முடியாததால் சக்கர நாற்காலியில் வருகிறார். கடந்த 49 ஆண்டுகளாக நீதிபதியாக இருக்கிறார். அமெரிக்க ஜனா திபதியாக இருந்த கென்னடி தனது பதவி காலத்தில் 4 பேரை பெடரல் நீதிபதியா நியமனம் செய்தவர்களில் ஒருவரான இவர் தற்போது பணி புரியும் நீதிபதி களில் மிகவும் மூத்தவராவார்-. மேலும் அமெரிக்க நீதிபதிகளில் அதிக நாள் பணி புரிந்தவர் என்ற பெருமையை வெஸ்லி பெற்றுள்ளார்.



அமெரிக்க வட டகோட்டாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அங்குள்ள குடிமனைகள் வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பதை படத்தில் காணலாம். அப்பி ரதேசத்தில் உள்ள ஆறு ஒன்று வெள்ளப்பெருக்கின்போது பெருக்கெடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு குளிர்பான வகைகளை கூடிய விலையில் விற்கும் வர்த்தகர்கள்

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவிவரும் உஷ்ணமான காலநிலை காரணமாக மக்களின் குளிர்பான நுகர்வும் என்றுமில்லாத அளவு அதிகரித்திருக்கின்றது. இதனால், குளிர்பான வகைகளுக்கான கேள்வி அதிகரித்திருப்பதுடன் இதனைக் காரணம் காட்டி இங்குள்ள வர்த்தகர்கள் குளிர்பான வகைகளின் விலைகளை ஆளாளுக்கு வேறுபட்ட விலைகளில் விற்பதாக பாவனையாளர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.


நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிகரித்த விலைகளிலேயே குளிர்பானங்களை கூடுதலான வர்த்தகர்கள் விற்பனை செய்துவருவதாக புகாரில் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்கள், சில்லறைக்கடைகள் மற்றும் உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் தம் இஷ்டம் போல் குளிர்பான வகைகளின் விலைகளை நிர்ணயித்து விற்கின்றன. குளிர்பானப் போத்தல்களில் ஒட்டப்பட்டிருக்கும் விலைச் சுட்டியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலைகளிலும் பார்க்க அதிக விலையில் இவை விற்கப்படுகின்றன. உதாரணத்திற்கு,ஒன்றரை லீற்றர் கொள்ளளவுள்ள கொக்கோ கோலா (பிளாஸ்ரிக் போத்தல்) ஒன்றின் கம்பனி விலை 170 ரூபாவாகும். எனினும், அது 180 - 190 ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

யாழ். நகரை அண்டியுள்ள உணவகங்களிலும் வைத்தியசாலை வீதியிலுள்ள உணவகங்கள் மற்றும் குளிர்பான நிலையங்களிலேயே இவ்வாறு அதிகரித்த விலையில் கொழும்பு குளிர்பானங்கள் விற்பனைசெய்யப்படுகின்றன.

வெய்யின் கொடுமை தாங்க முடியாது தாகத்தால் அவதிப்படுவோர் எப்படியும் விலையைப் பொருட்படுத்தாமல் குளிர்பானம் வாங்கி அருந்துவர் என்ற துணிவிலேயே இவர்கள் தம்மிஷ்டம் போல் நடக்கத் தலைப்பட்டுள்ளனர். அத்துடன், தாம் விற்கும் குளிர்பான வகைகளுக்கும் உரிய முறையில் பணப் பற்றுச் சீட்டுக்களை வழங்கவும் வர்த்தகர்கள் மறுக்கின்றனர்.

யாழ். குடா நாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களிலும் உணவகங்களிலும் விலைப் பட்டியலை காட்சிப்படுத்துமாறு விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் கண்காணிப்புக்கள் போதியளவில் இல்லாததனாலேயே இவ்வாறான பகற்கொள்ளைகள் இடம்பெறுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.




# ஜெயக்குமார் அடிகளாரை அவமதித்தவர்களை கைதுசெய்து தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## யாழ். தளபதிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடிதம்

ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு. சி.ஜி. ஜெயக்குமாரை அவதூறுப்படுத்தும் விதமான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெறுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது ஊர்காவற்றுறை பங்குத் தந்தையாக பணிபுரியும் அருட்திரு.சி.ஜி. ஜெயகுமார் அடிகளாருக்கு ஏற்பட்ட துன்பகரமான நிகழ்வு எம்மை மிகவும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

அருட்திரு ஜெயக்குமார் அடிகளார் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். இந்த நிறுவனம் சாதி, இனம், மதம் என்பவற்றைக் கடந்து பாதிக்கப்பட்ட சாமானிய மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துவரும் நாட்டு மக்களால் நன்கு அறியப்பட்ட ஒரு மனிதாபிமான அரச சார்பற்ற தொண்டு நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தின் பணிப்பாளராகப் பதவி வகிக்கும் ஜெயக்குமார் அடிகளாரின் தராதரம் மிக்க ஆளுமை, சொல்லாற்றல், மிதமான போக்கு, சமகால விடயங்களில் அவருக்கு இருந்த அறிவாற்றல் என்பன அவரை யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் தலைமைப் பதவியில் அமர்த்தின. பின்னரும் இந்தப் பதவியை தொடர்ந்து பொறுப்பேற்குமாறு எல்லோராலும் ஏகோபித்த முறையில் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அதை நிராகரித்து இந்த அமைப்பின் ஒரு செயல்திறன் மிக்க - சாதாரண உறுப்பினராகவே தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார்.

இத்தகைய உயர்ந்த ஒழுக்க, சீரியப் பண்புகள் நிறைந்த, இரக்க சுபாமுள்ள இவர் மீது சில மனச்சாட்சியற்ற வெட்கக்கேடான பிரகிருதிகள் கடந்த் முதலாம் திகதி இரவு அவர்மீது மாட்டுச் சாணத்தை வீசி அவமானப்படுத்திய பின்னர் ஒடி மறைந்துள்ளனர்.

இது கடந்த 30 ஆம் திகதி கொழும்பு மறை மாவட்ட ஆயர் மல்கம் ரஞ்சித் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சர்வமதக் குழுவினரின் கூட்டத்தில் இவர் ஆற்றிய பெறுமதி மிக்க பங்களிப்பான உரையின் எதிரொலி என்றே எண்ணத் தோன்றுகிறது. மேலும், கருத்துச்சுதந்திரம் இங்கு இல்லையென்பதை வெட்டவெளிச்சமாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிலையில், தாங்கள் இச் சம்பவம் தொடர்பாக கவனத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பவத்துடன்தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களைக் கைதுசெய்வதற்கு ஆவன செய்யுமாறு வேண்டு-கோள் விடுக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவகம் தெற்குப் பகுதி வாழ் மக்களின் நலன் கருதி 779 வழித்தட பஸ் சேவையை ஆரம்பிக்க பணிப்பு

தீவகம் தெற்குப் பகுதி பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி வேலணை - வங்களாவடியூடாக ஊர்காவற்றுறை செல்லும் 779 வழித்தட பஸ் சேவையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு வேலணை வர்த்தக சங்கத் தலைவர் டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி(ஜே.பி.) வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரைக் கேட்டுள்ளார். 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வங்களாவடியிலிருந்து புளியங்கூடல் ஊடாக ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதி சில கிலோ மீற்றர் தூரம் வரை பொதுப்போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி பாதையை திறந்துவைத்து தானே போக்குவரத்துச் சபை பஸ்ஸை இப்பாதையூடாக ஓட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி 779 இலக்க வழித்தடப் பாதையூடான தனியார் சிற்றூர்திச் சேவையினையும் மீண்டும் ஆரம்பிக்கும்படி ஊர்காவற்றுறை தனியார் சிற்றூர்திச் சங்க தலைவர் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏ-9 வீதி திருத்தப் பணியின் கீழ் 25 மதகுகள் திருத்தியமைப்பு

நெடுங்கேணி,

ஏ-9 வீதி திருத்தப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதிப் பகுதியில் காணப்படும் சுமார் 25 மதகுகள் செப்பனிடப்பட்டு திருத்தியமைக்கப்படுகின்றன. மேலும், குண்டும் குழியுமாகவுள்ள வீதிப்பகுதியும் துரித கதியில் திருத்தப்பட்டு வருகின்றது.

இதைவிட, தாண்டிக்குளத்தில் இருந்து கனகராயன்குளம் வரையான வீதி அகலமாக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு வீதி புனரமைக்கப்பட்டு செப்பனிடப்படுவதால் வீதி விபத்துக்கள் குறைவடைவதுடன், வாகனங்கள் பழுதடைவதும் குறைவடைய சந்தர்ப்பம் உள்ளதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

# 15 இலட்சம் ரூபா செலவில் காரையில் அலங்கார வளைவு

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகரின் நுழைவாயிலில் சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் அலங்கார வளைவு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக அமைக்கப்படவுள்ள இவ் அலங்கார வளைவுக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் அலங்கார வளைவுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மத்தியில் மறைந்திருக்கும் கலைஞர்களை நாம் வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டும்

## நீதிபதி சுவர்ணராஜ்

நாவிதன்வெளி,

இயற்கையை அனைவரும் ரசிக்க வேண்டும். அவ்வாறு ரசிக்காதவர்கள் வாழ்க்கையில் எதனையும் ரசிக்கவும் மாட்டார்கள்.

திருப்தி பெறவும் மாட்டார்கள் என கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி பொ. சுவர்ணராஜ் தெரிவித்தார்.

எழுத்தாளர் முகில்வண்ணன் எழுதிய ''இனியும் நான் இராமன்தான்'' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா கல்முனைச் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் கல்முனை நால்வர் கோட்ட தாமரை மண்டபத்தில் கடந்த 9 ஆந் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நீதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்முனை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கலாநிதி பரதன் கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சிறுகதைத் தொகுப்பின் முதல் பிரதியை தொழிலதிபர் தேசமான்ய கலாநிதி மு. இராஜேஸ்வரன் பெற்றுக் கொண்டார். விழாவின் சிறப்பு அதிதியாக எழுத்தாளர் றூத் சந்திரிகா சுரேஷ் கலந்து கொண்டார்.

சிறுகதைத் தொகுப்பின் அறிமுக உரையை அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ நிகழ்த்தினார்.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி பொ. சுவர்ணராஜ் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எழுத்தாளர் முகில் வண்ணனின் இனியும் நான் இராமன் தான் சிறுகதைத் தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கதைகளும் சமூகத்தில் அன்றாடம் நடக்கும் மனித செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

இலக்கண இலக்கிய நயங்கள் பாமரனுக்கும் விளங்கக் கூடிய வகையில் எழுதப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

ஈழத்து சிறுகதை எழுத்தாளர் வரிசையில் முகில்வண்ணன் சண்முகநாதன் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருவர்.

நான் நீதித்துறைக்குள் காலடி வைத்து நீண்ட காலத்துக்குப் பின்னர் இலக்கிய விழா வென்றில் கலந்து கொள்ளக் கிடைத்ததனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் திறமை படைத்தவர்கள். எம்மத்தியில் பல கலைஞர்கள் இலைமறை காய்களாக உள்ளனர். அவர்களை நாம் வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும்.

அதனடிப்படையில் இவ்விழாவை ஏற்பாடு செய்த கல்முனை தமிழ்ச் சங்கம் பாராட்டப்பட வேண்டும் என்றார்.

# ஜனாதிபதி மஹிந்தவின் சீரான தலைமைத்துவம் நாட்டின் அபிவிருத்திக்கு பிரதான காரணம்

## ரணில் பிரதமராகவிருந்த காலத்தில் கிழக்கு அபிவிருத்தி காணவில்லை என்கிறார் ஹரீஸ் எம்.பி.

(நாவிதன்வெளி நிருபர்)

இந்நாட்டில் 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தம் நடக்கவில்லை. சமாதானம் நிலவியது. வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை நிதி கிடைத்தது. ஆனால் அக்காலப் பகுதியில் பிரதமராக இருந்த தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எமது மாகாணத்தில் எவ்வித அபிவிருத்திப் பணிகளையோ அல்லது இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளையோ வழங்கவில்லை.

அதன் காரணமாகவே நாம் வீதியில் இறங்கி ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி எமக்கு தேவையில்லை எனக் குரலெழுப்பினோம் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருதுவில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் சேவைகள் மத்திய நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது நாட்டை ஆசியாவிலேயே பொருளாதார ரீதியாக ஒரு வளமிக்க நாடாக மாற்றும் பலத்தை எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டுள்ளார்.

முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்ததை ஜனாதிபதி நன்கறிவார். அதன் காரணமாகவே ஜனாதிபதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப் பேரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பயனாகவே எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து மக்களின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா நூறு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அந்நிதி மூலம் வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கவில்லை.

இதற்கு மாற்றமாக ஜனாதிபதி எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

இதன் காரணமாக எமது மக்கள் அபிவிருத்திக்கு தமிழ் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களுக்கும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் செல்கின்றனர். இவ்வாறான சூழல் அன்று இருக்கவில்லை.

இன்று நாடு அபிவிருத்தி காண்பதற்கு காரணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சீரான தலைமைத்துவமும் நேரான வழிகாட்டலுமாகும் என்றார்.

# தமிழர்களுக்கு பிரச்சினையுள்ளதென்பதை ஜனாதிபதியும் பிரதமரும் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்

## பங்காளிக்கட்சிகளே மறுக்கின்றன என்கிறார் செல்வராசா எம்.பி.

மண்டூர்,

இந்த நாட்டில் தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அரசின் பங்காளிக்கட்சிகள் சில அவ்வாறு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறுகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கூறினார்.

மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பதினாலரை இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட முனைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

60 வருட காலமாக இருந்து வரும் பிரச்சினைக்கு இரண்டு நாளில் தீர்வு காண முடியாது என ஜனாதிபதி கூறியதாக அண்மையில் 'கேசரி' பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனவே, இதன் மூலம் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாக நாம் கருதலாம்.

அதேபோன்று இலங்கையில் தமிழர்களுக்கு உள்ள பிரச்சினை கணவன் - மனைவிக்கு இடையே உள்ள பிரச்சினைக்குச் சமனானது. எனவே இதில் வெளிநாடுகள் தலையிட முடியாது என்று சமீபத்தில் பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் கூறினார்.

இதன் மூலம் அவரும் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். அதுமட்டுமன்றி கணவன்-மனைவி பிரச்சினை வீட்டுக்கு வெளியே வந்து விட்டால் வெளியார் தலையிட நேரிடும் என்பதையும் அவர் அறிய வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நம்பிக்கை வைத்துள்ளதை கண்டோம்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதை நீங்கள் அறிவீர்கள்.

இப்பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமா இல்லையா என்பதை எம்மால் கூற முடியாது.

இருப்பினும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக் குள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி தொடக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்புவரை தமிழ் தேசியம் என்ற கொள்கையில் உறுதியாக உள்ள கிராமங்களில் முனைத்தீவு கிராமமும் ஒன்றாகும். இக் கிராமத்து மக்கள் கடந்த பொதுத் தேர்தலின் பின் எம்மை அழைத்து இதே மைதானத்தில் வரவேற்பு அளித்தனர். அப்போது இந்த மைதானம் புனரமைக்கப்படாமல் காணப்பட்டது.

அடுத்த புது வருட விளையாட்டு விழாவுக்கு முன்னர் இதனைப் புனரமைத்து தருவதாக அன்று உரையாற்றிய நான் குறிப்பிட்டேன்.

அதன்படி எனது கோரிக்கையின் பேரில் பதினாலரை இலட்சம் ரூபா செலவில் மத்திய அரசினால் இவ்விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஐந்து நாட்களில் புதுவருட விளையாட்டு விழா இங்கு நடத்தப்படவுள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையில் மோசடி செய்த இருவர் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது

செங்கடகல,

புதுவருட சமயத்தில் பொருட்களை மோசடியான வகையில் விற்பனை செய்த இருவரை கண்டி விஷேட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக இருந்தே வியாபாரிகள் இருவரையும் பொலிஸார் கைது செய்ததுடன் இவ்வாறு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உருளைக் கிழங்கு பெரிய வெங்காயம் போன்ற பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி விஷேட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர். எம். குணரத்தின தலைமையிலான பொலிஸாரின் திடீர் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை 60 ரூபாவுக்கும் ஒரு கிலோ உருளைக் கிழங்கை 50 ரூபாவுக்கும் இவ்வியாபாரிகள் விற்பனை செய்து கொண்டிருந்தனர்.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட இப் பொருட்களை பரிசோதனைக் குட்படுத்திய போது 500 கிராம் பொருட்கள் 150 கிராம் குறைவாக 350 கிராம் இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இம் மோசடி வியாபாரிகள் இருவரை கைது செய்ததுடன் மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட நிறுவைத் தராசும் 200 கிலோ உருளைக் கிழங்குகளையும் 150 கிலோ பெரிய வெங்காயத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

# மலையகப் பகுதிகளில் வட்டாரங்களை அதிகரிப்பதால் மட்டும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை

**ம.ம.மு. செயலாளர் லோறன்ஸ்**

கொத்மலை,

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் மலையகப் பகுதிகளில் வட்டாரங்களை அதிகரிப்பதால் மட்டும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் தொகையையும் அதிகரிக்க வேண்டும். இதன் மூலமே பல சாதக விளைவுகள் ஏற்படும் என்று மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ. லோறன்ஸ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக நாடுகளில் தேர்தல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. எனவே தேர்தல்கள் நம்பகத்தன்மை மிக்கதாக காணப்படுவது மிகவும் அவசியமாகும். இந்த வகையில் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறை குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இந்நிலையில் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. எல்லை நிர்ணயக் குழு உருவாக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது. வட்டாரங்களை ஏற்படுத்த எல்லை நிர்ணயம் செய்யப்படுவது போன்று உள்ளூராட்சி மன்றங்களை ஏற்படுத்தவும் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். வெறுமனே வட்டாரங்களை மட்டும் அதிகரிக்காத உள்ளூராட்சி மன்றங்களின் தொகையினை மலையகப் பகுதிகளில் அதிகரிக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மலையகத்தின் பல பகுதிகளில் இன்னும் பல பிரதேச சபைகளையும் நகர சபைகளையும் மாநகர சபைகளையும் உருவாக்க முடியுமாக உள்ளது. இந்த வாய்ப்பினை நாம் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லை நிர்ணயக் குழுவில் சகல இனங்களையும் சார்ந்த பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும். இதன் மூலமே எல்லை நிர்ணயக் குழுவின் பணிகள் சிறப்பானதாக காணப்படும். மலையக அரசியல்வாதிகள் கருத்து முரண்பாடுகளை மறந்து உள்ளூராட்சி மன்ற திருத்த சட்ட மூலத்தை சாதகமாக்கிக் கொள்ளும் வழி வகைகள் குறித்து சிந்திக்க வேண்டும் என்றார்.

# சங்கிலியை அபகரித்த இருவர் மடக்கி பிடிப்பு

(காவத்தை மேலதிக நிருபர்)

இரத்தினபுரி கொரக எலதி பிரதேசத்தில் யுவதியின் தங்கச்சங்கிலியை அபகரிக்க முயன்ற இருவரை பிரதேசவாசிகள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வீதியில் நடந்து சென்ற யுவதியிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியைப் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர். இதையடுத்து யுவதி சத்தமிட்டதை தொடர்ந்து பிரதேச வாசிகள் சுற்றிவளைத்து கொள்ளையர்களைப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரோக்கியமான பிரவேசத்தை ஏற்படுத்தி உள்ளது

**- இலங்கை தேசிய தோட்டத் தொழிற்சங்க செயலாளர்**

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் ஆரம்பமாகியுள்ள பேச்சுவார்த்தைகள் ஆரோக்கியமான பிரவேசம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைத் தேசிய தோட்டத் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் க.வேலாயுதம் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் தொழிலாளர்களின் அபிப்பிராயங்களை ஆராயும் முகமாக பண்டாரவளை இந்துக் கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் தெரிவித்ததாவது:-

பேச்சுவார்த்தைக்கு செல்லமுன்னே நாம் தீர்மானங்களுடன் சென்றால் அவை பேச்சுவார்த்தைகளை பலவீனப்படுத்தி விடும். கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை நீண்டகாலத்துக்கு இழுத்துச் செல்ல முடியாது. உழைப்பிற்கு ஏற்ற முழுச்சம்பளம் வழங்கப்படவேண்டும். அவை உபகூறுகளாக வழங்குவதை எவ்வகையிலும் நாம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. பொறுப்புள்ள வகையிலேயே பேச்சுவார்த்தையில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

அதேபோன்று முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்துறையைப் பாதுகாத்து தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு வழங்க கவனம் செலுத்துவதாக தெரிகிறது. ஆகையினால் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முன்னே தீர்மானத்துடன் செல்வது நன்மை பயக்காது. பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏப்ரல் மாத சம்பளம் வழங்கப்படவலியுறுத்தியுள்ளோம்.

அதேவேளை அங்கு வருகைதந்த தோட்டக் கமிட்டி, மாவட்ட கமிட்டி, மாநில கமிட்டி தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில் தாம் வாழும் வீடு சூழ்ந்த காணிகளுக்கு காணி உறுதி வழங்கப்பட வேண்டும். மரண செலவுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அதிகரிக்கப்படவேண்டும். காவலாளிகள் கங்காணிமார்களுக்கான சம்பளம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். தேயிலைத் தோட்டங்களில் வேறு பயிர்ச் செய்கை தடைசெய்யப்படவேண்டும்.

தோட்டங்களிலுள்ள பெறுமதியான மரங்களை தறிப்பதை நிறுத்தவேண்டும். தோட்டக் குடியிருப்புகளுக்குச் செல்லும் வீதிகள் கம்பனிகள் அல்லது அரசாங்கத்தின் மூலம் பராமரிக்கப்படவேண்டும். தறிக்கப்படும் மரங்களுக்கு பதிலாக மரக்கன்றுகளை நாட்டவேண்டும்.

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் பிரதியமைச்சர் எம்.சச்சிதானந்தன், ஊவா மாகாண சபை உறுப்பினர் ரவிகுணவர்த்தன, பண்டாரவளை மாநகர முதல்வர் சமித்த விஜேசிறி உள்ளிட்ட பல பிரமுகர்களும் புதிய பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# அகில இலங்கை ஆண் அழகன் போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

**23ஆம் திகதி பண்டாரவளை நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக சுப்பர் ஜிம் அமைப்பு தெரிவிப்பு**

(பண்டாரவளை மேலதிக, தியத்தலாவை நிருபர்கள்)

அகில இலங்கை ஆண் அழகன் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம்முறை ஆண் அழகன் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி பண்டாரவளை நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக பண்டாரவளை சுப்பர் ஜிம் அமைப்பு தெரிவிக்கின்றது.

நிகழ்வின் ஏற்பாட்டாளர் ரஸீர். எஸ். ஹமீட் அண்மையில் பண்டாரவளை ஸ்கைபார்க்வில் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இப்போட்டிகள் இரண்டு பகுதியாக இடம்பெறவுள்ளன. அகில இலங்கை ரீதியான போட்டியும் அடுத்து ஊவா மாகாணப் போட்டியுமாகவும் இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அகில இலங்கை ரீதியான போட்டியில் முதல் இடம் பெறும் ஆண் அழகனுக்கு முப்பதாயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெறுபவர்க்கு பதினைந்தாயிரம் ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெறுபவர்க்கு பத்தாயிரம் ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை பண்டாரவளை சுப்பர் ஜிம் உதவி ஏற்பாட்டாளர் ரஸீர். எஸ். ஹமீட்டுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாடு பூராகவும் உள்ள போட்டியாளர்கள் இதில் பங்கு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்றார்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற 077 237 8623, 071 8958444 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதனை இலங்கை பொடிபில்டர் சம்மேளனம் ஊவா மாகாண விளையாட்டு அமைச்சு பண்டாரவளை சுப்பர் ஜிம் என்பன கூட்டாக ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

இதில் கையொப்பம் இடவும்
மெதனின் அசன் கரன்ன

இது ஒரு லட்சம்
மேக்க லச்சயாயி

சிறிது நேரம் பொறுக்கவும்
டிக்க வெலாவக் இவசன்ன

இது நூறு ரூபாய்
மேக்க ரூப்பியல் சீயாயி

எனக்கு கொஞ்சம் விளங்கும்
மட டிக்காக் தேரெனவா

இது ஐம்பது ரூமுாய்
மேக்க ரூப்பியல் பனாய்

இன்று என்ன திகதி?
அத தினய கிய த?

வவுனியாவில் ஏதாவது பிரச்சினையா?
வவுனியாவே மொனவாரி பஸ்ஸயக்த

இன்று எட்டாம் திகதி
அத தினய அட்ட

அங்கு ஒரு பிரச்சினையும் இல்லை.
ஏ மொக்குத் கல பல நென

இன்று என்ன நாள்?
அத தவச குமத்த அல்லது கோமத

உமக்கு என்ன விருப்பம்?
ஓயாட்ட கெமத்தி குமக்த?

ஏன் கோபிக்கிறீர்?
அய் தரா வென்னே

நான் இன்று காலையில் வந்தேன்
மட அத உதே ஆவே

உமக்கு இடைஞ்சலாக இருக்கிறதா?
ஒபட்ட அவகிரயக் திபேத

மக்கள் கஸ்டப்படுகிறார்கள்
ஜனத்தாவ மகன்சி வெனவா

மன்னிக்கவும்
சமாவென்ன

ஏன் அவசரப்படுகிறீ?ர்
அய் அதிசிவென்னே

உமக்கு பசிக்கிறதா?
ஒபட்ட படகினித

இது பழையது
மேக்க பரணய்

சாப்பிட்டீரா?
கேம கேவத?

இது புதியது
மேக்க அலுத்

என்ன சாப்பிட்டீர்?
மொனவத கேவே?

எனக்கு போதும்
மட்ட அதி

தேனீர் குடிப்போமா?
தே பொமுத?

எனக்கு போதாது
மட்ட மதி

உமது வேலை முடிந்துவிட்டதா?
ஒயாகே வெட அவசன்த

இப்பொழுது என்ன நேரம்?
தென் வெலாவ கீயத?

இது என்ன விலை?
மேக்க மில கீயத?

மீண்டும் அடுத்த
பாடத்தில் சந்திப்போம்

●வேலு. ஜீவராஜா

# SPOKEN ENGLISH

## A visitor who came from Mathara met a boy at Nallur

Visitor: Hello, Nice to meet you!
விருந்தாளி: ஹலோ. உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.
Boy: Hello, Nice to meet you and where are you from?
பையன்: ஹலோ. உங்களைச் சந்திப்பதிலும் மகிழ்ச்சி. நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?
V: I am from Mathara
வி: நான் மாத்தறையிலிருந்து வருகிறேன்.
B: Did you come to see the Nallur temple?
பை: நீங்கள் நல்லூர் ஆலயத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்களா?
V: Yes, Actually, I heard a lot about Nallur temple.
வி: ஆம். உண்மையில் நான் நல்லூர் ஆலயத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.
B: I see, what did you hear about Nallur?
பை: அப்படியா. நல்லூரைப் பற்றி அப்படி என்ன கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?
V:-I heard this is the biggest Hindu templd in Srilanka, Isn't it?
வி: இது இலங்கையிலுள்ள மிகப்பெரிய ஆலயம் அல்லவா?
B: Why not? This is the biggest one in Srilanka.
பை: ஏன் இருக்கக்கூடாது? இது ஒரு இலங்கையிலுள்ள மிகப்பெரிய ஆலயம்.
V: Is these god "Katharagama"?
வி: இது ஒரு முருகன் (கத்தரகம) ஆலயமா?
B: Yes, some people call like that but Hindus Call lord murugan who is one of the pow- full god.
பை: ஆம். சில மக்கள் இப்படி அழைப்பார்கள். ஆனால், இந்து மக்கள் முருகன் என்று அழைப்பார்கள். முருகன் சக்திவாய்ந்த கடவுளர்களில் ஒருவர்.
V: I see, Can you say to me about the god.
வி: அப்படியா. இக் கடவுளைப் பற்றிச் சொல்லமுடியுமா?
B: Sure, This is Nallur murugan whose father is lord Siva.
பை: இது நல்லூர் முருகன், சிவபெருமானின் மகன்.
V: What about Vishnu?
வி: விஷ்ணுவைப் பற்றி கூறமுடியுமா?
B: Vishnu is his father – in – law.
பை: விஷ்ணு என்பவர் முருகனின் தாய் மாமன்.
V: I see, his mother?
வி: ஆ! அப்படியா? முருகனின் தாய்...?
B: His mother is Parwathy, southern people call "Paththini theio'
பை: அவரது தாய் பார்வதி. தென்பகுதி மக்கள் 'பத்தினிதெய்யோ' என அழைப்பார்கள்.
V: Can you say about Valliyammah?
வி: வள்ளியம்மையைப் பற்றிக் கூறமுடியுமா?
B: Lord Murugan has two wives. One of Valliyammah and another one is Theyva i ammah.
பை: முருகனுக்கு இரண்டு மனைவிமார் உள்ளனர். ஒருவர் வள்ளியம்மை. மற்றவர் தெய்வானை.
V: I see, shall I take a photo please?
வி: ஆ! அப்படியா? புகைப்படம் எடுக்கமுடியுமா?
B: Oh, no, We can't take photos inside the temple.
பை: இல்லை. ஆலயத்திற்கு உட்புறம் புகைப்படம் எடுக்கமுடியாது.
V: Why can't we enter this temple now?
வி: இப்போது ஏன் ஆலயத்திற்குள் செல்லமுடியாதுள்ளது?
B: Actually This is not opening time. We can't enter 12 .00 – 3.00 at day time. except fri- days.
பை: உண்மையில் இப்போது ஆலயம் திறக்கும் நேரம் அல்ல. நாங்கள் வெள்ளிக்கிழமையினைத் தவிர மிகுதி நாட்களில் 12.00 மணியிலிருந்து 3.00 மணி வரை உள்ளே செல்ல முடியாது.
V: I think, you gave more information about Nallur.
வி: நான் நினைக்கின்றேன் நல்லூரைப் பற்றி நீங்கள் மேலதிகமான தகவல்களை தந்துள்ளீர்கள்.
B: No. We have more about murugan.
பை இல்லை. எங்களிடம் இன்னும் முருகனைப் பற்றி தகவல்கள் இருக்கின்றன.
V: Next time I like to come back to Nallur.
வி: அடுத்த தடவை நல்லூருக்கு வர ஆவலாக உள்ளேன்.
B: It's okay.
V: Thanks a lot. Good bye.
B: Good bye.

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றுண்டு விழாவில் உரும்பிராயைச் சேர்ந்த லண்டன் வாசியான தொழிலதிபர் க.தர்மகுலசிங்கம் தம்பதியினரால் நிர்மாணித்த மண்டபத்திற்கு தர்மகுலசிங்கம் தம்பதியினர் அழைத்துவரப்படுவதையும் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கம் தம்பதியினருக் கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் நினைவுக்கின்னம் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- நெடுந்தீவு நிருபர்)

## புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் கோணேஸ் காலமானார்

தெல்லிப்பழை,

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நாகராஜா கோணேஸ்வரன் (வயது 38) கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார். இவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு ஒரு மாத காலமாக சிகிச்சை பெற்று வந்தார்.

யாழ்ப்பாணம், கீரிமலை பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கீரிமலை - நகுலேஸ்வரா வித்தியாலயம், தெல்லிப்பழை - மகாஜனாக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவராவார். யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் விஞ்ஞானமாணிப் பட்டதாரியான இவர் கொழும்பு - ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நுமாணி பட்டத்தையும் பெற்றார்.

இலங்கை நிர்வாக சேவையிலிருந்த இவர், இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும் தேசிய முதியோர் செயலக உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



தற்போது புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிந்துள்ளார். கோணேஸ்வரன் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சிறந்த கணித ஆசிரியராக விளங்கியதோடு அளவெட்டியில் கோணேஸ் மற்ஸ் அக்கடமியின் நிறுவுனராகவும் விளங்குகின்றார்.

இவருடைய பூதவுடல் கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் புதன்கிழமை நடைபெற்றன.

## மெய்வல்லுநர் பயிற்சி முகாமில் 120 தீவக மாணவர்கள் பங்கேற்பு

ஏழாலை,

தீவக கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மெய்வல்லுநர் பயிற்சிமுகாமில் 120 மாணவர்கள் பங்குபற்றியுள்ளார்கள்.

யாழ். மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஏற்றவாறு தீவக வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்றவர்களுக்கான மூன்று நாள் வதிவிட பயிற்சிமுகாம் கடந்த வாரம் ஊர்காவற்றுறை - புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப் பயிற்சி முகாமில் மாணவர்களுக்கு மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிநிரல்களுக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தீவக கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.என். லோகநாதன் தெரிவித்தார்.

## மலசலகூட வசதிகளின்றி வாழ்ந்து வரும் அம்பிகை நகர் கிராம மக்கள்

ஏழாலை,

வேலணை - அம்பிகை நகர் கிராமத்திலுள்ள பல குடும்பங்கள் நீண்ட காலமாக மலசல கூட வசதியின்றி வாழ்ந்துவருகின்றனர். வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள அம்பிகை கிராமத்தில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் மற்றும் ஏற்கெனவே இக் கிராமத்தில் வசித்த குடும்பங்கள் என 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மலசலகூட வசதியின்றி பெரும் அசௌகரியங்களை தினமும் எதிர்நோக்குகின்றார்கள்.

இக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இவர்களுக்கு அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூட வசதி ஏற்படுத்தித் தரப்படாமையினால் இக்கிராம வறிய மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

மலசல கூட வசதியினை இக்கிராம மக்களுக்கு ஏற்படுத்தித் தருவதற்கு அரச மற்றும்அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என இப்பகுதி மக்கள் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

## கரப்பந்தாட்டப் போட்டியில் சோமஸ்கந்தா அணி வெற்றி

அச்சுவேலி,

அச்சுவேலி மத்திய கல்லூரி புதிய விளையாட்டு மைதான திறப்பு விழாவின் போது நடைபெற்ற சினேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் - ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து நேர் சுற்றுக்களைக்கொண்ட ஆட்டத்தில் புத்தூர் - ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அணி 3:2 என்ற அடிப்படையில் அச்சுவேலி மத்திய கல்லூரியை வெற்றி கொண்டது.

கரப்பந்தாட்டப் போட்டிகளை அச்சுவேலிப் பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் எஸ். தர்மராசாவும் அச்சுவேலி யூனியன் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி சிசிரகுமாரவும் ஆரம்பித்துவைத்தனர்.

## உலக வங்கியின் உதவியுடன் பயிற்சி நிலையம் அமைப்பு

ஏழாலை,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

உலக வங்கியின் உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபா செலவில் இப்பயிற்சி நிலையம் அமைக்கப்படுகின்றது.

சிறுப்பிட்டி ஜனசக்தி கிராம அபிவிருத்தி அமைப்பினால் பயிற்சி நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பிரதேச செயலகம் நடத்தும் விளையாட்டுப் போட்டி

ஏழாலை,

தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையமும் இணைந்து புதுவருடத்தை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கரப்பந்தாட்ட மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.


இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழகங்கள் உரிய நேரத்திற்கு முன்னர் மைதானத்தில் சமுகமளித்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்

சங்கானை,

சங்கானை - அரசடி வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகமும் மணவாளக் கோலமும் மகா சங்காபிஷேகப் பெருவிழாவும் காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவர்கள் பீதியுடன் பிக்கப் ஆகும் நடிகை



**'மாப்பிள்ளை'** மூலமாக தமிழ் சினிமாவுக்கு வந்துள்ள புதுப்பெண் ஹன்சிகா நமீதாவாக கலக்குவார் என்று ஹொலிவூட்டில் ஏகமனதாகக் கூறுகிறார்கள்.

'மாப்பிள்ளை' வந்து 2 நாட்கள்தான் ஆகின்றன. ஆனால், அதற்கு முன்பாகவே கை நிறையப் படங்கள் ஹன்சிகாவைத் தேடிவந்து அவரை திக்குமுக்காட வைத்துவிட்டது. விஜய்யுடன் 'வேலாயுதம்', ஜெயம் ரவியுடன் 'எங்கேயும் காதல்', உதயநிதி ஸ்டாலினுடன் 'ஒரு கல் ஒரு கண்ணாடி' போன்ற படங்களில் 'பிஸி'யாக இருக்கிறார். தெலுங்கிலும் ஹன்சிகாவுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இப்படி இவரைத் தேடி நிறையப் பட வாய்ப்புக்கள் வந்துள்ளதால் ஏற்கெனவே பீல்டில் கோலோச்சிக் கொண்டிருக்கும் தமன்னா போன்றவர்களின் மார்க்கெட் பெரும் ஆட்டம் கண்டுள்ளதாம். பார்ப்பதற்கு நெய்யினால் செய்யப்பட்ட பெரிய சைஸ் பொம்மை போல 'கொளுக் மொளுக்' என்று இருக்கிறார் ஹன்சிகா. ஆனால், நடிப்புத் தான் சுட்டுப்போட்டாலும் வராது போலத் தெரிகிறது.

எனவே, நமீதா ரேஞ்சுக்கு கவர்ச்சியை பிரதானமாகக் கொண்டு ஹொலிவூட்டை ஒரு கலக்குக் கலக்கலாம் என்று எதிர்பார்க்கிறது. ஹன்சிகாவுக்கு முன்னணி ஹீரோக்களின் ஆசிர்வாதம் பூரணமாக இருப்பதால் அத்தனை ஹீரோக்களுடனும் ஒரு ரவுண்டை முடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ரசிகர்கள் மத்தியிலும் இவருக்கு ரிப்பீட் ஆடியன்ஸ் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஹன்சிகாவின் பேரெழிச்சியைப் பார்த்து முன்னணி நாயகிகள் பெரும் பீதியுடன் இருப்பதில் ஆச்சர்யம் இல்லைத்தானே.



பெருமான்



மார்க்கண்டேயன்

## கமலுக்கு பிரான்ஸ் அரசு பாராட்டு


**பிரான்ஸ்** நாட்டில் படப்பிடிப்பு நடத்தியதற்காக நடிகர் கமலஹாஸன், இயக்குநர்கள் கே.எஸ். ரவிக்குமார் மற்றும் சரண் ஆகியோருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது அந்நாட்டு அரசு.

பிரான்ஸில் படப்பிடிப்பு நடத்துபவர்களை ஊக்குவிக்கவும் சலுகைகள் தரவும் அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதுவரை பிரான்ஸில் படமாக்கப்பட்ட தமிழ்ப் படங்கள் மற்றும் அதன் கலைஞர்களை அங்கீகரிக்கும் விதத்தில் சிறப்புக்கூட்டம் சென்னை - கன்னமாரா ஹோட்டலில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நடிகர் கமலஹாஸன், இயக்குநர்கள் கே.எஸ். ரவிக்குமார் மற்றும் சரண், நடிகர் யூகி சேது ஆகியோரும் கலந்துகொண்டனர்.

'மன்மதன் அம்பு', 'அசல்' போன்ற படங்களும் பிரான்ஸில் எடுக்கப்பட்டமைக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும், இப்போது வரவிருக்கும 'எங்கேயும் காதல்' படமும் இங்கு எடுக்கப்பட்டமை தெரிந்ததே. இக்கூட்டத்திற்கு பிரபுதேவா,அஜித், த்ரிஷா ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வத்திருமகன்

## சன் பிக்சர்ஸ் வாங்கிய அவன் இவன்

**பாலா** இயக்கத்தில் உருவாகி வரும் 'அவன் இவன்' படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விஷால், ஆர்யா மற்றும் ஆர்கே நடிக்கும் இப் படம் குறித்து ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன. கல்பாத்தி அகோரத்தின் ஏஜி எஸ் தயாரிப்பாக உருவாகியுள்ள 'அவன் இவன்', 'மாப்பிள்ளை', 'எங்கேயும் காதல்' படங்களுக்குப் பிறகு வெளியாகும் எனத் தெரியவருகிறது.



## தமன்னா தரும் தகராறு

**தெலுங்கில்** நாகசைதன்யாவுடன் '100% லவ்' என்ற படத்தில் நடித்துவருகிறார் தமன்னா. படத்தின் தயாரிப்பாளர் தமன்னாவுக்கு சம்பளம் தராமல் இழுத்தடிப்பதாகவும். அதனால் அவர் டப்பிங் பேச மறுத்..ட்டதாகவும் தெலுங்குப் பட உலகில் செய்திகள் பரவியுள்ளன. இதுபற்றி தமன்னா கூறியதா..ினிமாவுக்கு வந்த புதிதில் என்னைப் பற்றி ஏராளமான வதந்திகள் வந்தன. அதை நான் சீரியஸாக ..க்கொள்ளவில்லை. ஆனால், இப்போது தயாரிப்பாளருக்கும் எனக்கும் இடையே பிரச்சினையை ..டுத்த வேண்டும் என்று சிலர் தவறான வதந்திகளை பரப்பிவருகின்றனர்.

தமிழ், தெலுங்கு பட உலகில் நடித்துவருகிறேன். இதுவரை யாரிடமும் எந்த பிரச்சினையும் செய்ததில்லை. தயாரிப்பாளருடன் பிரச்சினை என்ற செய்தியில் உண்மையில்லை. இவ்வாறு கூறிப் புலம்பினார் தமன்னா.



மாவீரன்

## பில்லா அஜித்துக்கு ஜோடி ரெடி

**'பில்லா - 2'** படத்தில் அஜித்துக்கு ஜோடியாக பிரபல மொடல் அழகி ஹயூமா குரேஷி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். டில்லியைச் சேர்ந்த இவர் 'சாம்ஸங்மொபைல்','நெரோலக் பெயின்ட்', 'பியர்ஸ் சோப்', 'ஐடியா', 'பஜாஜ்' போன்ற டிவி விளம்பரங்களில் ஷாருக்கான், அமீர்கான் போன்ற நடிகர்களுடன் நடித்துள்ளார்.

இந்தியில் இப்போது தயாராகிவரும் 'சுப்பிரமணியபுரம்' ரீ-மேக்கிலும் இவர் தானாம் நாயகி. 'பில்லா - 2' அனுஷ்கா நடிப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்த வேளையிலேயே இவரின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.'பில்லா - 2' படத்தின் கதையை இயக்குநர் சக்ரி டோலெட்டி கூறிய போது, ''எனக்கான வேடத்தை அறிந்த போது என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன்'' என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க கலை

## ஏ.எஸ்.ராமநாதன்



இலங்கையின் இசைக்கலை வளர்ச்சியில் மிருதங்க (வாத்தியக் கலை) இந்தியக் கலைஞர்களின் பங்கு மகத்தானதாகப் போற்றப்படுகின்றது. காலத்தின் தேவையறிந்து இந்தியாவிலிருந்து இசைக்கலைஞர்களை வரவழைத்து, இலங்கையின் கலைவளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டும், அவ்வாறு வரவழைக்கப்பட்ட இசைக்கலைஞர்களது இசைப்பங்களிப்பும் போற்றுதற்குரியது. இவ் வகையில் மிருதங்கக் கலை வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கிய பெரியார், மதிப்புக்குரிய பேராசிரியர் ஏ.எஸ். ராமநாதன் முதன்மை பெறுகின்றார்.

இந்த வகையில் முப்பந்தைந்து வருடகாலம் இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மிருதங்கக் கலையை பாரம்பரிய, பக்குவ, குருத்துவ, சிஷ்ய, சிட்சை முறையில் கற்பித்த பேராசான் ஏ.எஸ். ராமநாதன் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை இலங்கையின் கலை வளர்ச்சிக்கு அர்ப்பணித்த இந்தியக் கலைஞர்களின் வரிசையில் முத்திரை பதித்த அல்லது தடம்பதித்த மூத்த கலைஞர் ஆவார்.

1944 - 1948 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இந்தியாவில் இசைக்கலைக்குச் சிறப்பான தனியிடத்தினை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றிருந்த காலகட்டம் ஆகும். இலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் இசை பயில அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற வேளையது. இவ் இலங்கைக் கலைஞர் பெருமக்களால் சிபாரிசு செய்யப்பட்டவரே மிருதங்கக் கலைஞர் ஏ.எஸ். ராமநாதன். குறிப்பாக பரம் தில்லைராஜா, வி.ஆர். ராசநாயகம் ஆகியோரே ராமநாதனின் வருகைக்கு ஆதார புருஷர்களாக அமைந்தனர் எனலாம்.

1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ். நடன பாடசாலையில் ஏ.எஸ். இராமநாதன் பிரவேசித்த பாக்கியத்தினால் இசையோடு பரதம், கதகளி, மிருதங்கம், கிளாரிநெட், புல்லாங்குழல், ஹார்மோனியம் யாவுமே களைகட்டத் தொடங்கிற்று எனலாம். பரதக்கலை வித்தகர் ஏ. சுப்பையா மாஸ்ரால் பரதம் பலிதம் பெற்ற வேளையில், லயவாத்தியத்தினைப் பிரகாசிக்கச் செய்த உபகாரியாக ஏ.எஸ். ராமநாதன் விளங்கினார். இசைப்புலவர் சண்முகரத்தினம், பரம் தில்லைராஜா, ராம் குமாரசாமி, திருமதி. சத்தியபாமா ராஜலிங்கம், ஐயாக்கண்ணு தேசிகர், பொன். முத்துக்குமாரு, லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தி, இயலிசை வாருதி வீரமணி ஐயா போன்றவர்களது இசையரங்க நிகழ்வுகளில் ராமநாதன் மிருதங்க லயப் பிரவாகத்தினைக் காத்திரமாக வழங்கியதன் காரணமாக இசையில் கவரப்பட்ட பெரும் எண்ணிக்கையான குடும்பத்தவர்கள் தமது பிள்ளைகளை மிருதங்க இசைப்பரப்பினில் வளர்வதற்கு பொருத்தமான காலமாகத் துணிந்து ஏற்றதன் பயனாக முதலாவது ஏ.எஸ். ராமநாதனது சிஷ்ய பரம்பரை உதயமானது என கொள்ளலாம்.

இம் முதலாவது பரம்பரையின் முதலாவது மாணவன் நாச்சிமார்கோவிலடி வி. அம்பலவாணர் ஆவார். தொடர்ந்து ரி. பாக்கியநாதன், ப. சின்னராசா, நீதிவான் எச்.டபிள்யூ. தம்பையாவும் தேர்தல் அதிகாரி எஸ். ரட்ணதுரையும், டாக்டர் சிவஞானரத்தினம், ஏனைய கலை ஆர்வலர்களுமாக மொத்தம் இருபத்தைந்து சிஷ்யர்களை உருவாக்கி சபையிலே அரங்கேறச் செய்து அங்கீகரிக்கின்ற பேற்றினையும் பெற்றுக்கொடுத்தார். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய ஸ்ரீகாந்தாவின் ஆசீர்வாதம் முதலாவது பரம்பரைக்கு ஆரோக்கியம் அளித்தது எனலாம்.

1962 ஆம் ஆண்டிலிருந்து 'இராமநாதன் அக்கடமி'க்கு ஏ.எஸ் அழைக்கப்பட்ட பேற்றினால், ஸ்திரமான பணிக்குக் கிடைத்த அங்கீகாரமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். சு.நடேசபிள்ளை அவர்களது கருணையும், மகாராஜபுரம் சந்தானம் அவர்களது இசையமுதும் சங்கீத அக்கடமியின் நீடித்த ஆயுளுக்கு மருந்தாக ஏ.எஸ். அவர்களின் லயவாத்தியமாம் மிருதங்க இசை அமைந்தது. ஏராளமான மாணவர்கள் 'இராமநாதன் அக்கடமி'யில் இசையோடு மிருதங்கத்தினையும் பயின்று 'சங்கீத ரத்தினம்' என்ற பட்டத்துடன் இசையுலகில் பிரவேசித்தார்கள். சிறப்பாக மகாராஜபுரம் ஸ்ரீநிவாசன்,

**நீண்ட மிருதங்க மாணவ பரம்பரையை இலங்கையில் உருவாக்கி, கடந்த மாதம் 2 ஆம் திகதி மறைந்த இலங்கையின் மிருதங்கக் கலை வளர்ச்சியில் முத்திரை பதித்த மூத்த மிருதங்கக் கலைஞர் 'சங்கீத பூஷணம்' பேராசிரியர் சிதம்பரம் ஏ.எஸ். ராமநாதனின் பணியும் வாழ்க்கையும் நினைவுமீட்டல்.**

மகாராஜபுரம் ராமச்சந்தின், உடுவில் விஜயசிங்கம், ஏ.கே. கருணாகரன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவரின் திருமணத்திற்குப் பின்னர் 1961 ஆம் ஆண்டில் இருந்து திருநெல்வேலியில் தங்கியபோது இரண்டாவது பரம்பரை ஆரம்பமாகியது எனலாம். தற்பொழுது மிருதங்க பேராசான்களாக விளங்கும் கலாபூஷணம் க.ப. சின்னராசா, கலாபூஷணம் சி. மகேந்திரன், கலாபூஷணம் எஸ். சிதம்பரநாதன் முதலான பல சீடர்கள் உருவானார்கள். உலகளாவிய ரீதியில் இவரது சக சீடர்கள் மிருதங்க சிட்சையினைக் கற்பித்து வருவதும், அம்மாணவர்களின் அரங்கேற்றங்களுக்கு ஏ.எஸ். அவர்களின் தரிசனமும் ஆசியும் கிடைப்பதும் உண்மையிலேயே அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலான உலக மிருதங்க சாம்ராஜ்ஜியத்தினை ஆண்டுவரும் ஒரு சக்கரவர்த்தியாக உயர்த்திவிட்டது எனலாம். ஏ.எஸ். இடம் கற்ற பாடாந்தர பாணியினை மனோலய பரம்பலாக்கி ப. சின்னராசா, சி. மகேந்திரன், எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் தமது சீடர்களுக்கு நியம சிட்சைப் பிரகாரம் கற்பித்ததன் விளைவாக ஐம்பதுக்கும் மேற்பட்ட மிருதங்கக் கலைஞர்களது அரங்கேற்றங்கள் யாழ். மண்ணில் நடைபெற்றதனை வரலாறு சான்று பகரும். இவை யாவும் ஏ.எஸ். ராமநாதனுக்கு கிடைத்த விருதுகள் என்றே கருதலாம்.

ஏ.எஸ். குறிப்பாக 1971 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் ஆரம்ப மிருதங்க பேராசானாகக் கடமை புரிந்த பெருமையோடு 1983 வரை பணி புரிந்து மிருதங்கக் கலையினை இந்த மண்ணில் ஆழப்பதித்து நீடித்த ஆயுளை விஸ்தாரம் செய்திருக்கின்றார்.

இந்நிலையில், இவரது சிஷ்யர்களான ப. சின்னராசா கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மிருதங்க விரிவுரையாளராகவும், சி.மகேந்திரன், எஸ். சிதம்பரநாதன் இராமநாதன் ஆகியோர் நுண்கலைப்பீடத்தின் விரிவுரையாளர்களாகவும் கடமையாற்றி இக்கலையினை சிறப்பாக வளர்த்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்பெறும் மிருதங்க பரீட்சைக்கு காத்திரமான பாடத்திட்டம் அமைக்கும் பணியில், மாணவர்களின் தரங்களுக்கு ஏற்ப பாடத்தரங்களை நிரல்படுத்திய வித்துவான்களில் இவர் முதன்மை பெறுகின்றார். ஏ.எஸ். நீடூழி வாழ்வதற்கும், அவரது சீட பரம்பரை ஆயிரமாண்டு காலம் சிரஞ்சீவியாக வாழ்வதற்கும் வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் அடித்தளமாக அமைகின்றன.

நிறைவாக யாழ்ப்பாணத்தில் இசை வளர்க்கும் சபைகளான ரசிகரஞ்சன சபா, சங்கீத வித்வ சபை, அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், வட இலங்கை சங்கீத சபை, இளங்கலைஞர் மன்றம், இளந்தொண்டர் சபை யாவற்றிலும் ஏ.எஸ். இன் இசைப்பணி காத்திரமாக அமைந்து சித்தியும் சிறப்பும் அடைந்துள்ளது என்பதனை அவரது சீடர்கள் நன்றியுடன் உணர்த்திவருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அக்கடமியில் 'சங்கீத ரத்தினம்' பட்டம் பெறவந்த முக்கிய மாணவர்களில் சிலர் பிரணவநாதன், சின்னராசா, மகேந்திரன், சிதம்பரநாதன், ஜெம்புநாதன், வரதராஜன், ஜெயமணி தேவி, கண்ணன், விவேகானந்தன், நித்தியானந்தேவி, ஸ்ரீதரன், செல்வநேசன் இன்னும் பலர் தனிப்பட்ட முக்கிய மாணவர்கள் சிலர். ஆனந்தப் பிரசாத், பிரகலாதன், ரவிச்சந்திரன், பாலசிறீ, நேசராஜ், இன்னும் பலராவார். இவரது மாணவர்கள் சுமார் அறுபதுக்கு மேலே எனலாம்.

மிருதங்க லய மாமேதையும் இலங்கையில் மிருதங்கக் கலை வளர்ச்சியின் பரம்பரை ஒன்றை உருவாக்கி ஓய்ந்த பெருமகனார், சங்கீத பூஷணம் உயர்திரு. ஏ.எஸ். ராமநாதனின் திடீர் மறைவு குறித்து ஏங்கி, இரங்கி, வருந்தி நிற்கும் சிஷ்யர்களும், கலைஞர்களும் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றனர்.

*'கலாபூஷணம்'*
*க.ப.சின்னராசா (மாணவன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவலுப் பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி நான்கு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

ஆனாலும், மலையகத் தமிழ் மக்களுக்கு காலஞ்சென்ற கோ. நடேசையர், பெரிசுந்தரம், கே.ரி. இராசலிங்கம், எஸ். தொண்டமான், எம்.எஸ். செல்லச்சாமி, செனட்டர் ஜேசுதாசன் போன்றோர் அந்த மக்களுக்குரிய அரசியல் தலைமைத்துவத்தை வழங்கி தொடர்ந்தும் இலங்கை அரசியலில் பொருளாதார, சமூக கட்டுமானங்களில் அவர்கள் விலக்கிவைக்கப்பட முடியாத தேசிய சக்திகள் என்பதை நிலைநிறுத்தினார்கள்.

இதுவே தேசிய சுமையாக கருதப்பட்ட மக்களை படிப்படியாகத் தமது உரிமைகளைப் பெற அடித்தளமிட்டது எனலாம். இந்த அடித்தளத்தில் தான் ஆறுமுகம் தொண்டமானும் பெரியசாமி சந்திரசேகரனும் தமது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அவர்களது அரசியல் பிரவேசம் மலையகத் தமிழ் மக்களது சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டுமானங்களில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது.

### 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

1954 - 1956 வரையான இலங்கையின் வரலாறு என்பது மொழிப்பிரச்சினையால் இன முரண்பாடுகள் மேல் எழுந்த கொந்தளிப்பான கால கட்டமாகும். சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கும் சிங்களம் மட்டும் (SINHALA ONLY) என்ற அழுங்குப்பிடியான இரண்டு பேரினவாதக் கட்சிகளும் நிலைப்பாடு இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்த்தது. அது தீவு எங்கும் முனைப்படைந்து, கூர்மை பெற்றது. அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் இறுக்கி மூடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியில் இன ஐக்கியமும் இல்லை; இலங்கை தழுவிய தேசியமும் இல்லை. அது ஒரு பேரினவாத - ஏகாதிபத்திய - முதலாளித்துவக் கட்சி என்பதற்கு அதன் செயற்பாடுகளே வெளிச்சம் போட்டுக் காட்டின. மறுபக்கத்தில், சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பதும் பேரினவாதத்தின் ஒரு பக்க முகம் என்பது இதுவே இக்கட்சியின் முகவரி என்பதும் துலாம்பரமாயிற்று. இந்த நிலையில் தான், 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை இலங்கை மக்கள் எதிர்நோக்கினார்கள்.

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (M.E.P) என்ற மகாஜன எக்சத் பெரமுன வெற்றிபெற்றது. இதனால், பண்டாரநாயக்கா இலங்கையின் நாலாவது பிரதமராகப் பதவியேற்றார். இலங்கையில் இருதுருவ அரசியல் ஆரம்பமானது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது.

## சட்டமும் சமூகமும் 23




1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் கருத்து நிலைப்பாடு இரண்டு பிரதான கட்சிகளும் மத்தியில் உச்சம் பெற்று இருந்தது. அவர்கள் இரு பகுதியினர் மத்தியிலும் பேசாப்பொருளாக இருந்த விடயம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றிய விடயமேயாகும்.

ஆனால், தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் தமிழர் உரிமை-களுக்காக உரக்கக் குரல் கொடுத்தார். அவரது உரிமைக்குரல் உலகம் எங்கும் எதிரொலித்தது.

இதனால், இந்தியாவின் முதல் மகாதேசாதிபதியான சக்கரவர்த்தி இராஜாஜி (இராஜகோபாலாச்சாரியார்) இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்தின் சமஷ்டிக் கோரிக்கையானது இலங்கையில் இனங்களுக்கிடையே ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய நியாயமான குரல் என்பதை பண்டாரநாயக்கா அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என 'கல்கி' வார இதழில் அழுத்தம் கொடுத்து எழுதினார்.

*(தொடரும்...)*

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பக்தர் கேட்டவை
## பாபா சொன்னவை

**பக்தர்:** சுவாமி! சிறு வயதிலேயே நற்குணங்கள் நிரம்பப் பெற்றிருக்க வேண்டும். நற்குணங்களை பெறுவது எப்படி?

**பாபா:** முதலில் உனக்கு நற்குணங்களின் அவசியம் தெரியவேண்டும். நற்பண்புகள் உன்னை வாழ்வில் எத்தகைய உயர்ந்த நிலையில் வைக்கும் என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு பிறகு நீ உனது கெட்ட குணங்களை கவனிக்க வேண்டும். எப்பொழுது நீ உனது கெட்ட நடவடிக்கைகளிலிருந்து விடுபடுகிறாயோ அந்தக் கணமே நீ, நற்குணங்களைச் சேர்த்துக்கொள்ளத் துவங்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு டம்ளரில் தண்ணீர் இருக்கிறது. இதில் நீ பாலை நிரப்ப வேண்டும் என்றால், என்ன செய்ய வேண்டும்? முதலில் டம்ளரிலுள்ள தண்ணீரைக் காலிசெய்ய வேண்டும். காலி டம்ளரில் இப்போது பாலை ஊற்ற வேண்டும். இது போலவே உன்னிடமுள்ள தீய குணங்களை உன்னிடமிருந்து அறவே நீக்கிவிட்டு அதன் பிறகு நற்குணங்களை நிரப்பத் துவங்கு. அதுவே நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வழி.

*Removal of immorality is immortality.*

**பக்தர்:** சுவாமி! Rest கிடைக்கவில்லையே என்று சொல்கிறார்கள். எப்படி Rest எடுத்துக் கொள்வது?

**பாபா:** Change of work is Rest, ஏதும் வேலை செய்யாமல் சோம்பலுடன் உட்கார்ந்திருப்பது Rest அல்ல. Laziness is Dust and Rust . கடைசியில் Dust and Rust - Burst ஆகிவிடும்.

Always work is Rest and Best. ஒரு வேலை செய்து சலிப்பு ஏற்படும் போது அதைவிட்டு வேறு செய். அது தான் உண்மையான Rest.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 23

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | 13 | ■ |
| 14 | 15 | 16 | ■ | 17 | 18 | 19 | 20 |
| ■ | 21 | 22 | 23 | 24 | ■ | 25 | 26 |
| 27 | 28 | ■ | 29 | ■ | 30 | ■ | 31 |
| 32 | 33 | 34 | 35 | ■ | 36 | 37 | 38 |
| 39 | ■ | 40 | 41 | 42 | ■ | 43 | 44 |
| 45 | 46 | 47 | ■ | 48 | 49 | 50 | 51 |

### இடமிருந்து வலம்

1. பூமியில் ஜனனமாகும் ஒரு நிகழ்வு
6. சமையல் அறை உபகரணம்
9. மங்கள கருமங்களை செய்யும்போது ஆண்கள் அணிவது
14. ஒரு சமயம்
17. புகைப்படங்களை பாதுகாப்பாக வைக்கும் பொருள்
21. பஞ்சு மரம் (குழம்பியுள்ளது)
25. மாதவனின் படம் / ஓட்டம் (திரும்பியுள்ளது)
27. ஒரு வினைச் சொல்
32. வாள்
36. புத்திரி (திரும்பியுள்ளது)
40. தோள் (குழம்பியுள்ளது)
43. மிக அழகான பெண்
45. இடம்
48. ஒரு சினிமா படம் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. இரத்தல்
3. ஒலி (குழம்பியுள்ளது)
4. நுளம்பிலிருந்து எம்மை பாதுகாப்பவர்.
5. காலை உணவு இனிப்பானது (குழம்பியுள்ளது)
6. எதிரி
12. நிறைஉணவு
15. 365 நாட்கள்
20. இருமல் மருந்து (திரும்பியுள்ளது)
23. மறுபக்கம் பார்
27. இது நாக்கில் இல்லை
30. சொல் விளம்பி/ உடலிற்கு கேடான பானம்
34. அச்சம்
37. மரத்தில் ஏறும் விலங்கு
42. நமது (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 21க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |
| க | ம் | ■ | ட | தி | ல் | ■ | ■ |
| ர | ய | உ | ம் | ■ | கோ | கு | ல |
| ம் | ■ | ல | ■ | ப | ள் | ள | ம் |
| ■ | ம | க | ர | ம் | ■ | ம் | ஓ |
| கா | க | ம் | ■ | ப | ம் | ■ | ■ |
| சி | ம் | ■ | தோ | ர | ண | ம் | ■ |
| னி | ■ | ■ | டி | ம் | பா | பா | ட் |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **எஸ். சீலன்**
சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

2. **அ. கீர்த்திகா**
4ஆம் குறுக்கு
யாழ்ப்பாணம்.


3. **ச. சிவகுமார்**
பருத்தித்துறை
யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 23க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்



பாடசாலை என்பது அறிவின் ஊற்று. ஒழுக்கத்தின் இருப்பிடம். ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்துவமான பண்பாட்டுக்கூறுகள் உண்டு. ஒரு பாடசாலையின் பண்பாட்டுக்கூறுகளே அப்பாடசாலையின் பயன்தரு நிலையினை தெளிவாக பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். மனிதனின் நடத்தைக்கோலங்களில் பொரும்பாலானவற்றை நிர்ணயிப்பதில் பாடசாலைக் கலாசாரம் காத்திரமான இடத்தை வகிக்கும் போது, பாடசாலையின் நன்மதிப்பை - சிறப்பு மிகு நடத்தைக் கோலங்களை வகுப்பதிலும் பேணிக்காப்பதிலும் அவற்றுக்கு முக்கியம் கொடுத்துச் செயற்படுத்துவதிலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்து வகிபாகம் காத்திரமானது.

தற்போது கல்வி கற்பதற்குரிய புறச்சூழல் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் குடாநாட்டின் கல்வித்தரம் பின்னடைவையே காட்டி நிற்கின்றது.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த ஒழுக்கக் கல்வி அருகிவருகின்றது. முன்னர் யாழ். குடா நாடு போரின் பிடிக்குள் சிக்குண்டிருந்த வேளையில் ஆசிரியர்கள் தமது புனிதக் கடமையை செவ்வனே நிறைவேற்றினர். மாணவர்களும் பல்வேறு பேரிடர்களுக்கு மத்தியிலும் தமது கல்வியிலேயே குறியாக இருந்தனர்.

ஆனால், இன்று நிலைமை தலைகீழாகவே உள்ளது. பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகள் வந்தபோதும் மாணவர்களின் கல்வித் தரம் பின்னடைந்து செல்கிறது. இதற்கு தனியே மாணவர்களை மட்டும் குற்றம் காணவிழைவது தவறு. ஆசிரியர்களும் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை ஏற்றுத் தான் ஆகவேண்டும்;

நான் சிறுவனாக இருந்து கல்வி கற்ற போது ஏற்பட்ட அவலம் நிறைந்த நினைவுகளில் ஒன்றை இங்கு மீட்டிப் பார்ப்பது பொருத்தமென எண்ணுகிறேன்.

1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு பாரிய இடப்பெயர்வு அவலங்களை சந்தித்த வேளை அது. நான் அப்போது சிறுவனாக இருந்த படியால் யுத்தத்தின் முழுமையான வலிகளை அனுபவிக்கவில்லை. அல்லது உணரவில்லை. அக்காலப் பகுதியில் பாடசாலைக்குச் செல்வது குறைவாகவே இருந்தது. காரணம், யுத்தத்தின் முரட்டுக்கரங்கள் மனித உயிர்களை பலியெடுத்துக் கொண்டிருந்த நேரம். எந்த நேரமும் சாவு எம்மை அழைக்கலாம் என்றவாறு உயிரை கையில் பிடித்த படி பேதலித்து நின்ற காலம். யுத்தத்தின் தீ நாக்குகள் எம்மை வரவேற்றபடி நின்றன.

அக்காலத்தில் இடப்பெயர்வு என்பது தமிழ் மக்களின் வாழ்வியலில் சாதாரண நிகழ்வாகியது. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது. பாடசாலைக் கல்வி என்பது இறுக்கமாயிருந்த நேரம், இருந்தும் என்னை எப்படியாவது ஒருபாடசாலையில் சேர்த்து விட வேண்டும் என்ற தவிப்பில் பெற்றோர் பல பாடசாலைகளின் வாசற்படிகளில் ஏறி இறங்கியதன் பயனாக ஒருவாறு வசதிகள் குறைந்த ஒரு பாடசாலையில் இடமும் கிடைத்தது. தமது முயற்சிக்கு கைமேல் பலன் கிடைத்த திருப்தியில் எனது பெற்றோர் இருந்தனர்.

அந்த பாடசாலை நாட்கள் இருவாரங்கள் வரை உருண்டோடியிருக்கும். அன்றும் வழமை போலவே எனது கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலையில் காலைப்பிரார்த்தனை முடிந்து முதற்பாடம் ஆரம்பித்தது. நேரம் காலை 8.30 மணியைத் தாண்டியிருக்கும். எங்கிருந்தோ பேரிரைச்சலை கக்கியவாறு காற்றைக் கிழித்துக்கொண்டு இரு 'புக்காரா' விமானங்கள் சீறிவந்தன.

அப்போது பாடம் நடத்திக்கொண்டிருந்த மேகலா ரீச்சர், ''பிள்ளைகள் ஓடிவாங்கோ, ஓடிவாங்கோ ஓடிவாங்கோ'' என்றதும் பழகிப்போன அப்போதைய சூழல் மனித வாழ்வின் ஒவ்வொரு கணமும் எப்படிச் செயற்பட வேண்டும் என்பதை யதார்த்த பூர்வமாக உணர்த்திக்கொண்டிருந்த படியால் நிலைமையை உணர்ந்து வேகவேகமாக பாடசாலை பின்புறத்தில் பதுங்குவதற்கு வெட்டப்பட்டிருந்த பதுங்குகுழிக்குள் தஞ்சமடைந்தோம். அது வாயைப் பிளந்தபடி எம்மை வரவேற்றது. ஒருவர் மீது ஒருவராக அக் குழிக்குள் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து முத்தமிட்டபிடி பயத்தினால் பதறியபடி இருந்தோம். அக்கண நேரத்தில் இடி இடிப்பது போல பேரோசை கேட்டது.

அந்தச் சத்தம் எங்கள் காதுகளை பிளந்தன. இரும்புக் குண்டுகளை உமிழ்ந்த பின் ஒருவாறு தனது கடமையை முடித்து அந்த வானூர்திகள் விரைந்து மறைந்தன. எங்கும் மயான அமைதி நிலவியது. ''பிள்ளைகள் எல்லாரும் வாருங்கோ வகுப்புக்குள்ள ஒழுங்குமுறையாகப் போங்கோ'' என்ற ரீச்சரின் ஆதரவுக் குரல் எங்கள் காதுகளைத் தழுவியது. நானும் ஒருவாறு முக்கி முனகியபடி எழுந்து பாடசாலையின் வாசற்பக்கமாகப் பார்த்தேன்.

எங்கும் ஒரே புழுதி மண்டலம். வீதியால் செல்லும் வாகனங்களைக் கூட அடையாளம் காணமுடியாத படி எங்கும் புகை மணற்துகள்கள் கவிந்திருந்தன. நானும் எனது சக தோழர்களும் வீதிப் பக்கமாக சென்று நோட்டமிட்டோம். அப்போதைய சூழ்நிலையின் விபரீதத்தை உணராத வயது என்ற படியால் ஆழ்மன உந்துததால் பின்னர்வரும் விளைவுகளை உய்த்துணராத பருவம்.

நானும் என் வகுப்புத் தோழர்களும் அங்கு நடந்த சம்பவத்தை அவதானித்தோம். தென்னைகள் பல சரிந்து வீழ்ந்திருந்தன. எதிர்வீட்டுச் சுவர் இடிந்து வீதியின் குறுக்காகக் கிடந்தது. எதிரில் இருந்த வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தாலும் அதன் உரிமையாளர்களை காணமுடியவில்லை. எங்கு பார்த்தாலும் மயான அமைதி. அப்போது நான் கண்ட காட்சி இரத்தத்தையே உறையவைத்தது. எனது வகுப்புத்தோழன் ஒருவன் குருதி மழையில் நனைந்தவாறு மூளை சிதறிக்கிடந்த கோரக்காட்சியை கண்டேன். நான் மட்டுமல்ல, எல்லா வகுப்புத் தோழர்களும் ஒரு கணம் உறைந்துபோய் விட்டனர். அங்கிருந்து கால்கள் நகர மறுக்கின்றன. உதடுகள் பேச மறுக்கின்றன. துணிவை ஒருவாறு வரவழைத்தபடி ஓட்டமும் நடையுமாக வீடுவந்து சேர்ந்தேன். அதன் பிறகு சில மாதங்கள் வரை கல்வியை என்னால் நெருங்கமுடியவில்லை.

இப்படியான பல சம்புவங்கள் 1995 க்கு முன்னர் யாழ். குடாநாட்டில் வசித்தவர்களுக்கு பசுமரத்தாணி போல் பதிந்திருக்கும். அன்றைய போர்ச் சூழலை விட்டு இன்றைய சூழலுக்குள்ளும் யாழ். குடாநாட்டு பாடசாலைகளை சற்றே நோக்கினால் அவற்றின் சீத்துவம் புரியும்.

எவ்வித தடங்கல்களுமின்றி பயப்பீதியின்றி கற்றலுக்கான இயல்புச்சூழ்நிலை இருந்தது. கல்வியில் பின்தங்கிய கூட்டத்தினர்களாகவே இருக்கிறோம். இவ்விடத்தில் அண்மையில் குடாநாட்டிலுள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் இளம் ஆசிரியை பற்றியதான செய்தி என் செவிகளுக்கும் எட்டியது.

பாடசாலையில் விடுப்பெடுத்து தனது காதலனுடன் திரையரங்கு ஒன்றில் இணைந்திருந்து படம் பார்த்து மகிழ்ந்தும் குளிர்பான நிலையத்தில் ஐஸ்கிறீம் உண்டு மகிழ்ந்தும் காதல் என்ற இன்ப வெள்ளத்தல் மூழ்கியிருந்தார். ஆனால், அந்த ஆசிரியையிடம் கல்வி கற்க வந்த மாணவர்களின் நிலையோ பரிதாபம். ஆசிரியர்கள் என்போர் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவார்கள். எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்த முன்னுதாரணமாக திகழவேண்டியவர்கள். அத்தகைய சிறப்பு பெற்றவர்கள் இப்படி அநாகரிகமாக நெறிபிறழ்ந்து செல்வது வேதனை தருகிறது. தற்போது யுத்தம் இல்லை. அதனால் விளைந்த அவலங்களும் இல்லை. எனவே, யாழ்ப்பாணத்தின் கல்வித் துறை அருவியெனப் பாய்வதற்கு வடிகால்களாக திகழவேண்டும்.

அன்று யுத்த சூழ்நிலையின் மத்தியிலும் யாழ். குடாநாட்டு மாணவர்களின் கல்வித் தரம் உயர்ந்திருந்தது. அவர்களது கல்விப் பெபேறுகள் இதற்கு கட்டியம் கூறின. எந்த நெருக்கடியிருந்த போதும் கூட கல்வியே கருந்தனமாக இருந்தனர். ஆனால், இன்று நிலமை வேறு. ஆசிரியர்களுக்கும் சரி, மாணவர்களுக்கும் சரி, தமது கடமைகளை மறந்து தடம் மாறிச் சென்றுகொண்டிருக்கின்றனர் என்பது தான் உண்மை.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை - யாழ்ப்பாணம்

# வீதி விஸ்தரிப்புக்குப் பின்னர் தொடரும் முரண்பாடுகள்

யாழ். மாவட்டத்தின் ஐந்து வீதிகள் விஸ்தரிக்கப்பட்டு புனரமைப்புச்செய்யப்படவுள்ளன என ஆரம்பத்தில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. இதன் முதற்கட்டப் பணி 14 மீற்றர் அகலமாக்கப்படும்போது கலசார - மக்களின் வீடு- பொது இடங்கள் என்பன அழிவடைய - சேதமடைய வாய்ப்புகள் இருந்தன. இச் செயற்பாட்டை மக்கள் ஏற்றுகொள்வார்களா என்ற கேள்வி எழுந்தது. அத்துடன், இதற்கு எதிர்ப்பும் கிளம்பியிருந்தது.

இது ஒரு பகுதியினரின் கருத்தாக இருந்தவேளையில், வீதி விஸ்தரிக்கப்பட்டால் எமக்கு சிறப்புத்தானே? இதுவரையில் நாம் சந்தித்த அழிவுகள், சேதங்களிலும் பார்க்க இது ஒரு அழிவா? சேதமா? என்ற வகையில், வீதி விஸ்தரிப்புக்கு உடன்பாடாக இருந்தனர். இந்தநிலையில் வீதி அகலமாக்கும் பணியை எங்கே ஆரம்பிப்பது? ஆரம்பிக்கும் போது எத்தகைய எதிர்த்தாக்கங்கள் எழும்பும்? எவ்வாறு அதனை எதிர்கொள்வது என்ற குழப்பங்கள் எழுந்த வேளையில் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புத்தூர் - மட்டுவில் சந்திக்கும் வல்லைப் பாலத்துக்கும் இடையில் உள்ள வீதியை பரீட்சார்த்தமாக அகலமாக்குவது என்ற முன்னெடுப்பு செயல்வடிவமாகியது.


பருத்தித்துறை - யாழ்ப்பாண 33 கிலோமீற்றர் நெடுஞ்சாலை ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்வது. யாழ். பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம், வலி கிழக்கு பிரதேச செயலகம், கரவெட்டி பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பனவே அவை.

முதற்கட்ட முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதி கிராமப்புறம், தோட்டவெளி உள்ளடங்கிய பிரதேசம் ஆகையால் மக்கள் நஷ்டஈடு கோரமாட்டார்கள்; எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்ற எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டத்திற்கு பொது மக்கள் எதிர்பாராத உற்சாகத்துடன் வரவேற்பளித்தனர்.

வீதியின் மத்தியில் இருந்து இரண்டு பக்கங்களும் 7 மீற்றர் அகலமாக்கக் கோரிய போது 7 மீற்றருக்கு மேல் 8 மீற்றர் வரையில் அகலமாகிக் கொடுத்தனர். நூற்றுக்கணக்கான பயன்தரும் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டன.

இந்த வகையில், 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமான அகலமாக்கும் பணி கட்டம் கட்டமாக விஸ்தரிக்கப்பட்டு வலி. கிழக்கு பிரதேச செயலகத்திற்கு அருகிலிருந்து பருத்தித்துறை பஸ் நிலையம் வரை ஏறத்தாழ 24 கிலோ மீற்றர் தூரம் அகலமாக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டிருப்பதோடு இவ்வளவு பகுதியும் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

24 கிலோ மீற்றர் நீளமான வீதி 7க்கு மேற்பட்ட பிரிவுகளாக வேறுபட்ட ஒப்பந்தக்காரர்களால் (தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள்)





புனரமைப்புச் செய்யப்பட்டது.

இதில் 9 ஆவது கிலோ மீற்றரிலிருந்து 15 கிலோ மீற்றர் வரை ஒரு பிரிவாகவும் 15 கிலோ மீற்றரிலிருந்து 18 ஆவது கிலோ மீற்றர் ஒரு பிரிவாகவும் 18 ஆவது கிலோ மீற்றரிலிருந்து 19 1/2 கிலோ மீற்றர் வரை ஒரு பிரிவாகவும் 19 1/2 கீலோ மீற்றரிலிருந்து 21 கிலோ மீற்றர் வரை ஒருபிரிவாகவும் 21 கிலோ மீற்றரிலிருந்து பகுதிபகுதியாகவும்33 கிலோ மீற்றர் வரை வீதி பகுதி பகுதியாக வெவ்வேறுபட்ட முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

வல்லைப் பாலத்திலிருந்து பருத்தித்துறை வரையான வீதி புனரமைப்பு குறிப்பிடத்தக்களவு திருத்தமாக முழுவதும் கருங்கல் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. வல்லைப் பாலத்திலிருந்து தெற்குப் பக்கமாக யாழ்ப்பாணம் வீதியில் குறிப்பிடத்தக்களவு பிரதேசம் யாழ்ப்பாண சுண்ணக்கல் மட்டும் பயன்படுத்தப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

சுண்ணக்கல் கொண்டு சீராக்கம் செய்யப்பட்ட வீதி தற்போது சேதமடையத் தொடங்கியுள்ளது. வீதியில் தார் அரிக்கப்பட்டு கல்லு கிளறுப்படத் தொடங்கியுள்ளது. அதுமட்டுமல்ல, மதகுகள் அமைக்கப்பட்ட பகுதியில் மதகுக்கு போடப்பட்ட கொங்கிறீட் மேடை வெளிப்படையாகத் தெரிகின்றது. புதிதாக அமைக்கப்பட்ட மதகுகளுக்கு மேல் வீதி உரியமுறையல் சீர்செய்யப்பட்டு மட்டப்படுத்தப்படவில்லை. இந்த இடங்களில் வாகனங்கள் எதிர்பாராமல் பள்ளம் திட்டியில் ஏறி இறங்க வேண்டியுள்ளது.

ஆவரங்கால் சந்தியில் தோட்டவெளியில் வெள்ளம் ஓடுவதற்கு இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த 10 அடி அகலமான வெள்ள வாய்க்கால் மூடப்பட்டு வீதியாக்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாய்வதற்கு ஏற்றமுறையில் வெள்ள வாய்க்கால் மறுசீரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

வீதியோரத்தில் உள்ள கிணறுகள் அரை பங்கு சீமெந்துத் தட்டுக்களினால் மூடப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். ஆனால், சில கிணறுகள் அவ்வாறு மூடப்படாமல் தோண்டப்பட்ட நிலையில் உள்ளன. இந்தக் கிணறுகள் பாதசாரிகள், வாகனங்கள் வீழ்ந்துவிடக் கூடிய வகையில் உள்ளன.

வீதியின் மத்தியிலிருந்து இரண்டு பக்கங்களுக்கும் 4 1/2 மீற்றர் வீதம் தார் போட்டு மொத்தமான 9 மீற்றர் அகலமாக்கப்பட்டிருக்கும் அதேவேளை, வீதியின் இரண்டு பக்கங்களும் நடைபாதை அமைக்கப்படும் என கூறப்பட்டது. ஆனால், நடைபாதைக்கு உரிய அடையாளமோ காணப்படவில்லை. புதர் மண்டி மண் இடிந்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி அகலமாக்கப்பட்டு - புனரமைப்புச் செய்யப்பட்டு - மக்கள் பாவனைக்கு உரியமுறையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில், பூணப்படுத்தப்படாத வீதி வேலையை யார் நிறைவு செய்வார்கள் என்ற கேள்வி எழும்பாமல் இல்லை. வீதி வேலை முடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதியில் - முழுமை செய்யப்படாமல் குறையாக இருக்கும் பகுதியில் - எதிர்பாராத வீதி விபத்துக்கள், ஆபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஏதுநிலை பெருமளவில் காணப்படுகின்றது.

இதேபோல், எதிர்காலத்தில் வீதி அகலமாக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படும் பகுதிகளில் இத்தகைய குறைபாடுகள் இல்லாமல் சீர் செய்யப்படுவதும் வரவேற்கத்தக்கதாகும்.

•அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலாசார பரிமாற்றத்தின் தரிசனமாக யாழ்ப்பாண இசைவிழா

*(சென்ற வாரத்தொடர்ச்சி...)*

இக் கலைகளினுடைய பேணுகையினுடையதும் இணைவினுடையதுமான ஓர் நிகழ்வாக காலத்தின் தேவை கருதி யாழ்ப்பாண இசை விழா ஆற்றுகைப்படுத்தப்பட்டது. இவ் விழா அனைத்து இனங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் அமைந்ததுடன் தூய நாட்டுப்புறக்கலை, மருவிய நாட்டுப்புறக்கலை மற்றும் கலாசார இசை என்பன ஒன்றிணைந்த வகையில் அமைந்திருந்தது.

இலங்கையிலிருந்து 23 ஆற்றுகைக் குழுக்களும் சர்வதேச மட்டத்திலிருந்து 5 ஆற்றுகைக் குழுக்களும் பங்குகொண்டிருந்தன. கலைக்குழுக்களின் பண்பாட்டிற்கு அமைவான நாட்டுப்புறக் கிராமிய முகாம்கள் (மேடைகள்) அமைக்கப்பட்டு பகல் வேளைகளிலும் பிரதான மேடையில் இரவு வேளைகளிலும் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது.

இசைவிழாவினுடைய ஆற்றுகை நிகழ்வுகளாக யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தில் இருந்து கட்டுவன் வசந்தன் கூத்து, அம்பன் பிரதேசத்து கரகம், அல்வாய் பிரதேச கூத்து, பூதத்தம்பி இசை நாடகம், சுழிபுரம் பிரதேசத்து பப்பிரவாகம் கூத்து, அச்சுவேலி பிரதேசத்து சிந்து நடைக்கூத்து, நாகர்கோவில் பிரதேசத்து கப்பல் பாட்டு, வில்லிசை நிகழ்வு என்பன சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

வவுனியாவில் இருந்து உழவர் நடன நிகழ்வும், மன்னார் - முருங்கன் பிரதேசத்து தென்பாங்கு கூத்து நிகழ்வும், புலோப்பளை பிரதேசத்து முருகன் நடன நிகழ்வும், முல்லைத்தீவு பிரதேசத்து மகுடிக்கூத்து நிகழ்வும், முல்லைத்தீவு - முள்ளியவளைப் பிரதேசத்து கோவலன் கூத்து நிகழ்வு என்பன சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

மலையகப் பகுதியிலிருந்து கண்டி பிரதேசத்து மலைநாட்டு நடனம் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள், காமன் கூத்து நிகழ்வு என்பன சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து பறைமேளக் கூத்து மற்றும் இராவணேசன் கூத்து என்பன சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

முஸ்லிம்களின் பாரம்பரியக் கலை வடிவமான களிகம்பாட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து ஆற்றுகை செய்யப்பட்டது. இவ் ஆற்றுகை நிகழ்வு சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டது.

(தொடரும்...)

● எஸ்.ரி.குமரன்

# வீட்டு வைத்தியம்

- நல்ல சுவாசத்தைப் பெற 5 கிராம் வெப்பாலை மரவேர் சேர்த்து 2 கப் தண்ணீரைக் கொதிக்க விடவும். இதைப் பயன்படுத்தி வாய் கொப்பளித்தால் வாய் துர்நாற்றம் போகும்.
- தினமும் காலை வெறும் வயிற்றில் 1 டீஸ்பூன் தேனை வெந்நீரில் சேர்த்துக் குடிப்பதால் உடல் பருமனைக்குறைக்கலாம்.
- சாப்பிட்ட பிறகு ஒரு. துண்டு கேரட் சாப்பிட்டால் வாயில் தங்கியுள்ள உணவுப் பொருட்களை அது சுத்தம் செய்யும்.
- குழந்தையின் தொண்டையை டாக்டர் பரிசோதிக்கும் போது ஸ்பூனுக்குப் பதிலாக வாலிப்பை நாக்கில் வைத்து அழுத்தினால் குழந்தை தடுக்காமல் இருக்கும்.
- கைக்குழந்தை தொடர்ந்து அழுவதை நிறுத்த 1 ஸ்பூன் வெந்நீரில் 2 துளி தேன் சேர்த்துக் கொடுக்கவும். அழுகை நின்று குழந்தை அழுவதை நிறுத்தி நன்றாக தூங்கி விடும். நீங்களும் தூங்கலாம்.
- காபிப் பவுடரும் காபிக் கொட்டையும் நீண்ட நாள் வாசனையோடு இருக்கக் காற்றுப் போகாத டின்னில் வைத்து குளிர் சாதனப் பெட்டியில் வைக்கவும்.
- நறுக்கிய வெங்காயத்தை குளிர் சாதனப் பெட்டியில் வைத்தால் அவசரமாக உணவினைத் தயாரிக்கும் போது இது பயன்பெறும்.
- அதிகமாக பழுத்த தக்காளிப்பழங்களை ஃபிரிஜ்ஜில் உறையும் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கலாம்.
- பெருங்காய வாசனை போகாமலிருக்க அதே அளவு உப்பு சேர்த்துப் பொடித்து டப்பாவில் பத்திரப்படுத்தலாம்.
- புடவைக் கொசுவங்களையும், தலைப்பையும் சேஃப்டி பின்னில் கலர் பிந்தியை ஒட்டி பிறகு குத்தலாம். குழந்தைகளை மடியில் வைத்து நீண்ட பயணம் செய்யும் போது புடவை கிழியாது.
- ஷெல் மீனை (Shell Fish) கழுவுவது பிரச்சினையா? உறையும் பெட்டியில் மீனை வைத்து எடுத்த பிறகு குழாய்த் தண்ணீரில் அதைத் தொங்க விடவும்.
- பாதாம் வைக்கும் டப்பாவில் 1 டீஸ்பூன் சர்க்கரையைப் போட்டு வைத்தால் பாதாம் பருப்பு நீண்ட நாள் கெடாமல் இருக்கும்.
- அடிபிடித்துக் கருகிய கடாயில் தண்ணீர் நிரப்பி இரவு முழுவதும் ஊற வைத்துப் பின்னர் அதைக் கொதிக்க வைக்கவும்.
- இஞ்சி,பூண்டு விழுது கலர் மாறிக் கறுப்பாகாமல் இருக்கச் சிறிது உப்பும் சமையல் எண்ணெயும் சேர்க்கவும்.
- சமையலுக்குப் பயன்படுத்த முருங்கை இலைகளைக் கிள்ளுவது சிரமமான செயலாகும். அதனால் இலைகளோடு கூடிய கிளைகளைச் சுத்தமான ஈரமான துணியில் அழுத்தமாக கட்டி இரவு முழுவதும் வைக்கவும். மறுநாள் மூட்டையைப் பிரித்தால் இலைகள் உதிர்ந்து காணப்படும்.
- எவர் சில்வர் டீ வடிகட்டியைச் சுத்தமாக்க நேராக சில மணிநேரம் நெருப்பில் சில நிமிடங்கள் காட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியங்காடு மாலை நேர மீன் சந்தை மீண்டும் எப்போது ஆரம்பமாகும்?

**யாழ்.** குடாநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற மீன் சந்தைகளில் கல்வியங்காடு பொது மீன் சந்தையும் ஒன்றாகும். மேற்படி சந்தைக்கு தினசரி பெரும் எண்ணிக்கையான மக்கள் தங்கள் வீட்டுக்குத் தேவையான கடலுணவுகளை கொள்முதல் செய்து செல்கின்றார்கள்.

இதனால், கடல் உணவு விற்பனையாளர்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றது. இதனால், தற்போதைய பொது மீன் சந்தையில் இடப்பற்றாக்குறை நிலவி வருகின்றது. பொது மக்கள் இடப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் சனநெருக்கடிக்கு மத்தியிலும் கடலுணவுகளை கொள்முதல் செய்வதை காணமுடிகின்றது.

அண்மையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீன் சந்தையை விஸ்தரிப்பு செய்தும் வியாபாரிகளின் அதிகரிப்பால் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே, மீன் சந்தைக்கென தனியான கட்டடம் ஒன்றை ஒதுக்கி சகல வளங்களையும் கொண்ட கட்டடம் ஒன்றை பொது சந்தை வளாகத்துக்குள் நிர்மாணிக்க வேண்டும்.

தற்போது மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பால் தான் அசைவ வாசியாகி மாறிவிட்டதாக மீன் சந்தை பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார். தற்போது தம்புள்ளை என்னும் இடத்தில் இருந்து தினசரி மரக்கறி வகைகள் உள்ளூர் சந்தைக்கு வந்து குவிவதாகவும் யாழ். குடாநாட்டிலிருந்து லொறிகள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மரக்கறி வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

> பெருந்தொகையான மீன் வியாபாரிகள் வடமராட்சி பகுதியிலும் பாஷையூர் பகுதியிலும் இருந்து கொண்டுவந்து குறைவான விலையில் விற்ற காலம் ஒன்று இருந்தது.

இதேவேளை, மேற்படி சந்தைப் பகுதியில் சில நாட்களுக்கு குறைந்த விலையில் கடல் உணவுகள் கிடைப்பதாகவும் சில நாட்கள் கூடிய விலையில் விற்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடல் உணவு வகைகளின் விலைகளை நிர்ணயித்து எப்பொழுதும் ஒரே விலையில் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

இந்த பொது மீன் சந்தைக்கு பாஷையூர், நாவாந்துறை, வடமாராட்சி ஆகிய பகுதிகளில் இருந்து பெருந்தொகையான கடலுணவுகள் விற்பனைக்கு வந்து குவிவதைக் காணமுடிகிறது.

மரக்கறி உணவிலும் பார்க்க கடலுணவு வகைகளில் அதிக போஷாக்கிருப்பதோடு நோய்களை எதிர்க்கும் ஆற்றலும் அதிகம் இருப்பதாக சிலர் தெரிவிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமைகளில் மேற்படி மீன் சந்தைக்கு செல்வதை இயன்ற வரை சைவ மக்கள் தவிர்த்துவருகின்றனர். மேற்படி சந்தை அந்த நாட்களில் வெறிச்சோடிக் காணப்படுவதாக கூறுகின்றார்கள்.

இது இவ்வாறிருக்க, மேற்படி மீன் பொதுச் சந்தை சில வருடங்களுக்கு முன்பு மாலை வேளைகளிலும் கடல் உணவுகள் விற்பனையாகி வந்தது.

பெருந்தொகையான மீன் வியாபாரிகள் வடமாராட்சிப் பகுதியிலும் பாஷையூர்ப் பகுதியிலும் இருந்து கொண்டு வந்து கடலுணவு வகைகளை குறைவான விலையில் விற்று வந்த காலம் ஒன்று முன்னர் இருந்தது. அந்தக் காலம் குடாநாட்டில் ஏற்பட்ட தற்போதைய சுமுகமான சூழ்நிலையால் மீண்டும் விரைவாக வரவேண்டும் என்று மீன் பாவனையாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். முன்பு மாலை வேளைகளில் மீன்களை கொள்முதல் செய்து மறுநாள் சமைத்து உண்பதும் வழக்கமாக இருந்தது. மாலையில் விற்கப்படும் கடலுணவுகள் அன்று மக்களுக்கு மலிவாகக் கிடைத்தனவாம்.

இச்சந்தைகளில் கருவாடு விற்பனையை காணமுடிவதில்லை முன்பு நெத்தலி, பாலை மீன் கருவாடு, கணவாய் கருவாடு போன்ற தரமான கருவாடுகள் விற்பனைக்கு வருவதுண்டு.

மீனின் விலை அதிகரிக்கும் வேளைகளிலும் தட்டுப்பாடு நிலவும் வேளைகளிலும் மக்கள் அக்காலத்தில் கருவாட்டை கொள்முதல் செய்து செல்வதை அப்போது காணமுடிகின்றது.

இதேவேளை, முட்டை விலையும் குறைந்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, மீண்டும் இம் மாலை நேர மீன் சந்தையை நடத்துவதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வார்களா? என பொது மக்கள் கேட்கின்றனர்.

●வேலணை

# மூலிகை மருத்துவம்

## தூதுவளை

***Bin Solanum Trilobactum***

மறுபெயர் - அனர்க்கம், சிங்கவல்லி

பயன்படும் உறுப்பு - இலை, பூ, பழம், காய்

சுவை - கார்ப்பு, சிறுகைப்பு



செய்கை - கோழையகற்றி, வெப்பமுண்டாக்கி, உரமாக்கி

குணம் - கபத்தால் உண்டாகும் காது மந்தம், நமைச்சல், அக்கினி மாந்தம் முதலியன நீங்குவதுடன் உடல் வலிமை, ஆண்மையைக் கொடுக்கும்.

உபயோகம் (இலை) - இலையை கற்பமாக வேனும்/கறியாகவேனும் உண்ண கபம் சம்பந்த மான ரோகம் தீரும்.

இலையை பொடிசெய்து கொடுக்க இரைப்பு இருமல் தீரும்.

இலையை பிழிந்து சாறெடுத்து காதில் 2 துளி விட காதடைப்பு, காது வலி தீரும்.

பூ - பூவை நெய்விட்டு வதக்கி உண்ண உடலுக்கு வன்மையையும் ஒளியையும் தரும். சுக்கில தாது விருத்தியுண்டாகும்.

காய் - இதனால், முக்குற்றத்தால் ஏற்படும் நோய்கள், அரோசகம், மலபந்தம் என்பன தீரும்.

### தூதுவளை குடிநீர்

தூதுவளை, இம்பூரல், ஆடாதோடை, சுக்கு, திப்பலி, பற்படாகம், கண்டங்கத்தரி வகை சமன் எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/8 ஆக வற்றக் காய்ச்சி உட்கொள்ள வாத கபசுரம், சாதாரண சுரம் என்பன தீரும்.

அனுபானம் - தேன்

ரி. உமா (2 ஆம் வருடம்)
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் மாறிவரும் சமூக சூழலும் HIV/AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்


ஆபிரிக்க காடுகளில் வாழும் பச்சைக் குரங்குகளின் இரத்தத்ததில் உள்ள இவ் HIV ஆனது அப் பச்சைக் குரங்குகளின் இறைச்சியை பச்சையாக உண்ணும்போது மனிதனில் தொற்றியதாகக் கூறப்படுகின்றது. 1981ஆம் ஆண்டிலே லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகரிலே தன்னினச் சேர்க்கையாளர் மத்தியில் HIV தொற்று முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ACQUIRED IMMUNE DEFICIENCY SYNDROME பெற்ற நீர்ப்பீடண குறைபாட்டு நோய் என்பது இதன் விரிவாக்கம் ஆகும். இந் நோயானது HUMAN IMMUNE DEFICIENCY VIRUS - மனித நீர்ப்பீடணக் குறைபாட்டு வைரஸ் என்னும் கிருமியால் ஏற்படுத்தப்படுகின்றது. 1983ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூக் மொண்டிக்கயரும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த நொபேர்ட் கலோ என்பவரும் இணைந்து இவ் வைரசைக் கண்டுபிடித்தனர். பொதுவாக வைரஸ் என்பவை சூழலில் உயிர்வாழ முடியாதவை. அவை உயிர் வாழ வேறு உயிர்க்கலங்கள் தேவை.

ஒரு மனிதனில் இவ் வைரசானது குருதி, ஆண்களின் சுக்கிலப் பாயம், பெண்களின் யோனிமடற்சுரப்பு , பெண்களின் கருப்பைக் கழுத்துச் சுரப்பு போன்ற இனப்பெருக்கம் சம்பந்தப்பட்ட அங்கங்களிலும் தாய்ப்பாலிலும் அதிகளவிலும் உமிழ்நீர், கண்ணீர், மலம் , சிறுநீர் என்பவற்றில் சிறிதளவிலும் காணப்படுகின்றது. HIV தொற்றுள்ள குருதி, பாதுகாப்பற்ற பாலியல் உறவு, தாயிடமிருந்து குழந்தைக்கு என HIV தொற்று பரம்பலடையலாம்.

2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கிடைத்த தரவுகளின் படி யாழ். மாவட்டத்தில் HIN தொற்றுக்கு ஆளாகியிருப்போரின் எண்ணிக்கை 38 ஆக காணப்படுகின்றது. இதில் வெளிநாட்டில் அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களால் தொற்றுக்கு ஆளாகியிருப்போரின் எண்ணிக்கை 36 ஆகவும் உள்நாட்டில் தொற்றுக்கு ஆளாகியிருப்போரின் எண்ணிக்கை 02 ஆகவும் காணப்படுகின்றது.

2007ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் எத்தனையா விதமாக சமூகச் சூழல் மாறியிருக்கின்றது. மாறிக்கொண்டிருக்கின்றது. சமூகச் சூழலைப் பொறுத்த வரைக்கும் இம் மாற்றமானது ஆரோக்கியமாகக் காணப்படவில்லை என்ற காரணத்தினால் 2007ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியல் HIV தொற்று இன்னும் அதிகரித்துக் காணப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

2009 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்திற்கான தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டுக் காணப்பட்டதாலும் யாழ்ப்பாணத்திற்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ இறுக்கமான நடைமுறைகள் காணப்பட்டதாலும் யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்தோ அல்லது யாழ்ப்ாணத்திலிருந்தான போக்குவரத்தோ இலகுவாகக் காணப்படவில்லை. அத்துடன், யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டாலும் பிறிதொரு இடத்திலிருந்து கட்டுப்பாடான பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரு தலைமைத்துவம் யாழ்ப்பாணத்தைக் கண்காணித்துக் கொண்டிந்தமையாலும் யாழ்ப்பாணத்தில் சமூகச் சீரழிவுகள், தண்டனைக்குப் பயந்து பெரிதாக நடைபெறவில்லை. ஆனால், இன்றைய சூழல் கேட்போர் யாருமற்று கேளிக்கை களியாட்டங்களில் திளைத்துக் காணப்படுகின்றது. கடற்கரைகள் சல்லாப இடங்களாக மாறிவருவதை அடிக்கடி பத்திரிகைகளில் வரும் செய்திகள் மூலம் நாம் அறியக்கூடியதாகவுள்ளது. தவறான பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள் அதனால் கர்ப்பந்தரித்தல் , பிறக்கும் சிசுவை கிணற்றுள், பற்றைக்குள், உரப்பைக்குள் போடும் கொடூரம் என தினந்தோறும் காலையில் பத்திரிகைகள் தாங்கிவரும் செய்திகள் யாழ்ப்பாணத்தில் மாறிவரும் சமூகச் சூழலுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.



Human Immunodeficiency Virus – Structure

வெளிநாட்டு மோகம் காரணமாகவோ அல்லது டாம்பீக வாழ்க்கையை எதிர்பார்த்தோ அல்லது கல்யாணச் சந்தையில் வெளிநாட்டு மாப்பிள்ளையின் விலை குறைவாக இருப்பதன் காரணமாகவோ ஏழைப் பெற்றோர் வெளிநாட்டு வரனைப் பற்றி நன்றாக விசாரிக்காது தமது பெண்பிள்ளைகளை ஏன் தற்போதைய சூழலில் ஆண் பிள்ளைகளைக் கூட வெளிநாட்டுக்கு திருமணம் செய்து அனுப்புகின்றனர். கிடைத்த அவ் வரன் நற்குணமுள்ள ஒரு வரனாக இருக்குமிடத்து யாவருக்கும் நன்மையே. அல்லாதவிடத்து, தவறான நடத்தையுள்ள அல்லது பலருடன் பாலியல் தொடர்புகள் வைத்திருக்கும் ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு வாழ்க்கைத் துணையாவதன் மூலம் HIV தொற்றும் வாய்ப்பு உள்ளது.

எமது இன்றைய சமூகத்தில் பொருட்களின் விலை யானைவிலை குதிரை விலை என்பார்களே அது போன்றே உள்ளது. உயர்மட்டத்து குடும்பங்களுக்கும் உயர் பதவியில் இருப்போரது குடும்பங்களுக்கும் பெரிதாகப் பாதிப்பில்லை. ஆனால், நடுத்தரக் குடும்பங்களும் அன்றாடம் உழைத்து உண்ணும் அடிமட்ட மக்களும் இவ் விலை வாசியேற்றத்தால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றார்கள். இவ் விலைவாசியேற்றமானது கீழ்த்தர மக்களைப் பாதிக்கும்பொழுது வேறு எத்தொழிலுமே செய்யத்தெரியாத நிலையிலுள்ளவர்கள் உணவுத் தேவைக்கோ அல்லது அன்றாட அடிப்படைத் தேவைக்காகவோ பாலியல் தொழில் புரியவேண்டிய கட்டாயத்திலிலுள்ளனர். இலங்கையில் ஏறத்தாழ 30,000 பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். ஆண் - பெண் பாலுறவு காரணமாக ஏறத்தாழ 85% தொற்று ஏற்படுகின்றது.

ஆபாச இணையத்தளங்கள் , ஆபாச சினிமாப்படங்கள் என்பன இன்றைய யாழ்ப்பாணத்தில் மலிந்து காணப்படுகின்றன. இளம் தலைமுறையினர் அவற்றைப் பார்த்து இரசிப்பதோடல்லாமல் அதில் காண்பிக்கப்படும் காட்சிகளைப் போலத் தாமும் செயற்பட விளைகின்றனர். இதனால், HIV தொற்று ஏற்படச் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அத்துடன், திரையரங்குகளில் தமக்குப் பிடித்த நட்சத்திரங்கின் திரைப்படங்கள் புதிதாக வெளிவரும் போது அவர்களின் 'கட்அவுட்'டுக்கு பாலாபிஷேகம் செய்கின்றனர். எத்தனையோ பாலகர்கள் பசிக்காகப் பால் வேண்டி அழ 'கட் அவுட்'டுக்கு பாலாபிஷேகம் செய்வது மாறிவரும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இன்று எமது யாழ்ப்பாணம் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் மூச்சுத் திணறி நிற்கின்றது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கலாசாரத்திற்கு எமது தனித்துவமான கலாசாரமும் மெல்ல மெல்ல மாறி வருவதை இளைஞர் , யுவதிகளின் ஆடை அலங்காரங்களைப் பார்த்தே நாம் புரிந்து கொள்ளலாம். இதென்ன ஜீன்ஸ் சேர்ட் அணிந்த ஆணும் பெண்ணும் நட்ட நடு வீதியில் கைகோர்த்துக் கொண்டு போகின்றார்களே யாரென்று பார்ப்போம் எனக் கிட்டச் சென்று பார்த்தால் அவர்கள் இருவரும் ஆண்கள் தான் என்ன வித்தியாசம் என்றால் ஒருவன் முடி வளர்த்து காதணி அணிந்திருப்பான் இதுதான் இன்றைய யாழ்ப்பாணச் சமூகம் அன்றைய யாழ்ப்பாணத்தில் அதுவம் நகரத்தில் விரல் விட்டு எண்ணக்கூடியளவிலேயே விடுதிகள் அதாவது சுபாஸ் ஹோட்டல் போன்ற ஹோட்டல்கள் அமைந்திருந்தன. ஆனால் இன்றைய யாழ்ப்பாணத்தில் வீதிக்கு வீதி ஏன் முழத்துக்கு முழம் விடுதிகள் முளைவிட்டிருக்கின்றன. இவ் விடுதிகள் தங்க வருபவர்களின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து தங்குமிட வசதியை வழங்கினால் HIV தொற்றும் வீதத்தைக் குறைக்கலாம்.

(தொடரும்)

ஞானத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இன்பம்

ஒரு வீடானது எத்துணை உயர்ந்திருப்பினும், எல்லாம் சிறப்புற்றிருப்பினும் அழகு பெற மாட்டாது. அவ்வீட்டில் விளக்குகள் இல்லையெனில் இருள் சூழ்ந்திருக்கும். பகல்வேளையாக இருப்பினும் மூதேவி குடியிருக்கும். ஒரு திருவிளக்கு எரியுமாகில் அந்த வீடு மங்கலமாக ஒளி பெற்றுத் துலங்கும். எனவே வீட்டை அழகுறச் செய்வது விளக்கு. அதேபோல், ஒரு நாட்டை அழகுறச்செய்பவர்கள் கற்றறிந்தோர்கள். கல்விமான்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். முற்காலத்திலே புலவர் பெருமக்கள் சிறந்த கல்வி அறிவுடையவர்களாக விளங்கினர். புலவர்களால் நாடு பொலிவு பெறும். விளக்கு ஒளி வீசுவதுபோல் புலவர் ஞான ஒளியைப் பரப்பி அறியாமை எனும் இருளை அகற்றுவர்.

சைவ நாயன்மார்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், நாவுக்கரசர், திருவள்ளுவர், சேக்கிழார், ஒட்டடக்கூத்தர், கம்பர், புகழேந்தி, காளமேகம், வில்லிபுத்தூர், குமரகுருபரர் முதலிய பல்லாயிரக் கணக்கான புலவர் பெருமக்கள் மற்றும் இறையருள் பெற்ற அருளாளர்கள் அவ்வப்போது தோன்றி நாட்டை அலங்கரித்தனர். அவர்கள் பாடிய பாடல்கள், பக்திப் பாசுரங்கள் இன்றும் சுவைகுன்றாமல் நிலைத்திருக்கின்றன. சில பாடல்கள் வானோர்களின் அமுதமாக இருந்து ஆன்மிகத் தேடலை வளர்க்கின்றன. அன்றியும் சிந்தனையைத் தூண்டி மனதில் எண்ணுந்தோறும் உவட்டாத உவகையை ஊட்டுகின்றன.

அப்படிப்பட்ட சிவத்துவத்தை உணர்த்தும் பாடலில் வரும் கருத்தொன்றை ஈண்டு சிந்திப்போம்.

சிவபெருமானுக்கு மூன்று கண்கள் உண்டு. அப்படியே உமாதேவிக்கும் மூன்று கண்கள். இதனால்தான் 'திரியம்பகி' என்று சக்தியை சிறப்பித்து அழைப்பர்.

அதேபோலவே விநாயகருக்கும் மூன்று கண்கள். 'திரியம்பக விநாயகன்' என்று கூறுகிறார் அருணகிரிநாதர். முருகனுக்கும் மூன்று கண்கள் இருப்பதாகவும் புராணங்களூடாக பேசப்படுகின்றது. மொத்தத்தில் குடும்பத்திலுள்ள அனைவருக்குமே மூன்று கண்கள் தாம்.

திரியம்பகம் என்பது ஒரு தலம். பன்னிரு ஜோதி லிங்கங்களிலே ஒரு தலம். இத்தலத்தில் உறையும் சிவபெருமான் முக்கண்களையுடையவர். வேதங்களிலும் சிவன் மூன்று கண்களுடையவனாக சித்திரிக்கப்படுகின்றான்.

இது இங்ஙனமிருக்க, அப்பர் சுவாமிகள் சிவனைக் குறித்து பாடவந்தார். சைவ நாயன்மார்கள். சிலர் கடவுளரை நகைச்சுவையாகக் கேலிசெய்தும் பாடியுள்ளனர். கடவுளருக்கும் தமக்கும் இடையிலிருந்த அன்பின் நெருக்கத்தினால் அவர்கள் அப்படிப் பாடினர்.

சிவபெருமானை 'முக்கண்ணர்' என்று எல்லோரும் கூறுகின்றனர். ஆனால், அவரை 'ஒன்றரைக் கண்ணர்' என்று அப்பர் சுவாமிகள் வர்ணிக்கிறார். இதற்கு ஆதாரமாக சிவமூர்த்தத்தில் அர்த்தநாரீஸ்வர வடிவம் ஒன்றுண்டு. ஒருபாதி உமை. ஒரு பாதி சிவன். அந்த வகையில் ஒன்றரைக் கண் உமாதேவிக்குரியது. மிகுதி போக சிவனுக்குரியது. ஆக ஒன்றரைக் கண்தான். எனவே, சிவனை 'ஒன்றரைக் கண்ணன்' என அப்பர் குறிப்பிடுகின்றார். இவர் பாடியருளிய தேவாரம் ஒன்றில் பின்வருமாறு விளக்குகிறார்:

**"இன்றரைக் கண்ணுடையாய்
எங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்
பாவைக்குக் கூறிவிட்ட நாள்
ஒன்றரைக் கண்ணுங் கொடுத்
துமையாளையும் பாகம்
வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர்
ஒற்றியூருடைய உத்தமனே!"**

தற்போதும் கூட வாக்குக் கண்ணுடைய (மாறு கண்ணுடைய) வர்களைக் கண்டு அவன் ஒன்றரைக் கண்ணன் என சிலர் கூறி பரிகசிப்பர். இதுபோல நகைச்சுவையாக சிவனை நோக்கி இவர் முக்கண்ணர் அல்லர். ஒன்றரைக் கண்ணர் என்கிறார்.

இது இவ்வாறிருக்க இன்னொரு புலவர் சிவனை அரைக் கண்ணர் என்று புரட்சி செய்கிறார். அப்புலவர் சிவனை அரைக்கண்ணன் என்று தனது தரப்பு வாதத்தை முன்மொழிகிறார்.

சிவபெருமானை முக்கண்ணர் என முன்னோர்கள் மொழிகின்றனர். ஆனால், இப்போது அது பொருந்தாது. ஆகவே சிவனை இனி யாரும் முக்கண்ணன் என்று யாரும் அழைக்கவேண்டாம். அவர் அரைக்கண்ணர். அதுவே உண்மை. காரணம், சிவன் அர்த்தநாரீஸ்வரர். மாதொரு பாகத்தை உடையவன்.

இந்த வகையில் இடப்பாகம் உமையவளுக்குரியது. அவளுக்கு ஒன்றரைக் கண் போக மிகுதி ஒன்றரைக் கண் சிவனுக்குரியதாகிறது. ஆனால், சிவனுக்குரிய ஒன்றரைக் கண்ணிலே கண்ணப்பன் தந்த கண் ஒன்று. எனவே, மொத்தம் இரண்டரைக் கண்கள். ஆக, முக்கண்ணில் இரண்டரைக் கண்கள் போனால் மிகுதி அரைக் கண்தானே.

எனவே, அரைக் கண்ணன் என சிவபெருமானை நகைச்சுவையாகக் கூறிகிறார். அவரது பாடல் இதோ,

**"முக்கண்ணன் என்றரனை முன்
னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற்குள்ள தரைக்
கண்ணே - மிக்க
உமையாள் கண் ஒன்றரை,
மற்றூன் வேடன் கண்ணென்
றமை யுமித னாலென்றறி"**

என்ற பாடல் மூலம் மிக அழகாக - நகைச்சுவையாக சிவனை 'அரைக் கண்ணர்' என்றார் அப் புலவர்.

**எஸ். நதிபரன்** B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



கிராம சேவகர் பதவி என்பது அரச நிர்வாகக் கட்டமைப்பில் மிக முக்கியமான பதவியாகும். அரச நிர்வாகத்திற்கு எம்மை உறுதிப்படுத்தும், அறிமுகம் செய்யும், நன்மை பெற்றுக் கொடுக்கும் ஒரு அதிகாரியாக கிராம சேவகரே உள்ளார்.

கிராம சேவகரைத் தேடிச் சென்று அவரைச் சந்திப்பதில் சில வேளையோ, பல வேளையோ நீங்கள் கஷ்டத்தைக் கண்டிருக்க கூடும். முன்மாதிரியாகக் கடமை புரியும் கிராம சேவகர் ஒருவரைப் பார்ப்போம்.

அவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றுகின்றார். காலை 7.30 மணிக்கு ஒவ்வொரு நாளும் தனது அலுவலகம் செல்வார். காலை 9.30 மணி வரை கடமையிலிருப்பார். தனியார் துறையில், அரச துறையில் வேலை செய்வோர், நாளாந்த கூலி வேலைக்குச் செல்வோர் போன்றோர் அவரிடம் சென்று தனது கருமங்களைப் பார்ப்பார்கள்.

அதனால், அவர்களுக்கு வேலையில் லீவு எடுப்பதோ வருமானம் உழைக்கமுடியாமல் இருப்பதோ எதுவும் ஏற்படாது. காலை வேளையில் தமது கருமத்தைப் பார்க்கமுடிகிறது. அக் கிராம சேவகரும் காலை 9.30 மணிக்கு புறப்பட்டு தனது குடும்பத்தவரின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஈடுபடுவார். பின்பு பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் அலுவலகத்தில் இருப்பார். அப்போதும் பொது மக்கள் தமது சேவைகளை நாடி அவரிடமிருந்து சேவைகளைப் பெறமுடியும். அந்த வேலை நேரமும் மக்களுக்கு வசதியாக தான் உள்ளது. அவர் எந்நேரமும் தன்னுடன் 'இறப்பர் சீல்' முத்திரை கொண்டு திரிவார். இதனால், வழியில் யாரும் மறித்து உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்வார்.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரையும் கிராம சேவகர் தமது அலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களில் இருக்கவேண்டுமென்ற அரச நடைமுறை இவரால் மீறப்பட்டுள்ளது தான். ஆனால், பொது மக்கள் சிரமமின்றி இலகுவாக சேவை பெறும் இவரது இந் நடைமுறையை பலரும் பாராட்டுகின்றனர். இக் கிராம சேவகரின் நடைமுறையை பலரும் பின்பற்றினால் பொது மக்கள் அலைச்சலின்றி தமது தேவையை நிறைவு செய்துகொள்ள முடியுமல்லவா?

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம் 6

## Virtual Reality

நவீன உலகத்தில் ஒரு பாரிய திருப்பு முனையை ஏற்படுத்திய ஒரு தொழில் நுட்பமாக Virtual Reality கருதப்படுகிறது. கணினியால் உருவாக்கப்பட்ட ஒருமாயமான சூழலுடன், கணினிப் பாவனையாளரை தொடர்புறச் செய்யும் ஒரு தொழில்நுட்பம் Virtual Reality ஆகும். ஒரு கணினிப்பாவனையாளர் தான் உண்மை உலகிலே சாதாரணமாக அனுபவிக்கும் அனுபவங்களை மாயச் சூழலில் அனுபவிக்கவைக்கும் ஒரு தொழில்நுட்பம் என்றுகூட Virtual Reality ஐக் குறிப்பிடலாம்.

கணினித் திரையில் உருவாக்கப்படுகின்ற காட்சி அமைப்புக்கள் விசேடமாக வடிவமைக்கப்பட்ட Output Divices மற்றும் திரைகளில் உருவாக்கப்படுகின்ற காட்சியமைப்புக்கள் என்பன சாதாரண பாவனையில் உள்ள Virtual Reality சூழல்களாகக் குறிப்பிடலாம். சில சூழலமைப்புக்கள் Speakers, Headphones மற்றும் நவீன கணினி உபகரணங்கள் என்பவற்றின் பாவனையைக் கொண்டிருக்கும்.



மருத்துவத்துறை, Computer Games Applications என்பவனவற்றில் Virtual Reality தொழில்நுட்பம் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றது. கணினிப்பாவனையாளர்கள் Keyborad, Mouse போன்ற சாதாரண Input Devices மூலமாகவோ, இம்மாயமான சூழலுடன் தொடர்புகொள்ளக் கூடியதாக இருக்கும். இம் மாயமான சூழல், உண்மை உலகச்சூழலுக்கு அண்ணளவு சமமானதாகவே இருக்கும். Virtual Reality தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய உதாரணங்களாக விமான ஓட்டிகளுக்கான பயிற்சி, இராணுவப்பயிற்சி, Computer Games என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

உண்மை உலகிற்கு அல்லது கற்பனையில் உள்ள உலகிற்கு சமமான ஒரு உலகை உருவாக்குவதில் உள்ள முக்கிய இடர்களாக கணினியின் Processing Power, Imaga Resdution, தகவல் பரிமாற்றத்தில் உள்ள தொழில்நுட்ப பற்றாக்குறை, அறிவின்மை என்பனவற்றைக் கூறலாம்.


எனினும் Processor, Imaging மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியால் இப் பிரச்சினை நாளடைவில் வெற்றி கொள்ளப்படலாம் என்று கூறலாம்.

Mychilos Cline தனது Power, Madness and Immortality the Future of Virtual Reality என்னும் நூலில் Virtual Reality தொழில்நுட்பத்தால் பின்வரும் தாக்கங்கள் மனித வாழ்விலும் அனைவரது நடத்தையிலும் ஏற்படலாம் எனக்கூறுகின்றார்.

1. மனிதனது நாளாந்த வாழ்விலும் அவனது நடத்தைகளிலும், பல்வேறு வழிகளில் Virtual Reality ஒன்றிணைக்கப்படும்.
2. மனிதனுடைய நடத்தைகளிலும், அவனது தொடர்பாடல் முறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படும்.
3. மாயமான விண்வெளிச்சூழலை உருவாக்குவதில் நாம் காட்டிவரும் ஆர்வம் படிப்படியான விண்வெளிக்கான இடப்பெயர்வை ஊக்குவிக்கும். இது பொருளாதாரத்திலும், உலக வாழ்க்கையிலும், கலாசாரத்திலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். இன்னுமொரு முக்கிய பிரச்சினையாக VR Headsets களினால் உருவாக்கப்படுகின்ற தலையிடியினைக் குறிப்பிடலாம். இதைவிட Handsets Gloves களை மீண்டும் மீண்டும் பாவிப்பதால் உருவாகும் Rsi ஐ குறிப்பிடலாம்.

எது எவ்வாறு இருப்பினும் நவீன விஞ்ஞானத்தின் ஒருபாரிய திருப்புமுனையை ஏற்படுத்திய ஒரு தொழில்நுட்பமாக Virtual Reality உள்ளது என்பதில் ஐயமில்லை.

**கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.**
**முகவரி**
**'வீரகேசரி' கிளைக் காரியாலயம்**
**117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.**



# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## நாம் கடவுளின் பிள்ளைகளாவது எப்போது?

மனிதர்கள் யாவரும் கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டவர்கள். எனவே, கடவுள் தன்மையைத் தாங்கியவர்கள் அவரின் இறையரசுப் பாதையில் பயணிக்கவேண்டிய மனிதர்களாகிய ஒவ்வொருவரும் பின்வரும் நான்கு பண்புகளை தம்மகத்தே கொண்டு வாழும்போது இறைவனின் பிள்ளைகள் ஆகமுடியும். அவையாவன: இறைநம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிவு, நல்லுறவு.

**இறை நம்பிக்கை :** *"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"*

எனவே, இத்தகைய நிலையினை நாம் எம் வாழ்வில் உணர்ந்துள்ளோமா? அல்லது உலக ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு எமது சிந்தனை, சொல், செயலுக்கு ஏற்ப தான்தோன்றித்தனமாக வாழ்ந்துவருகின்றோமா? அழிந்துபோகும் மாயைகளுக்கு மூழ்கி வாழ்விழந்து நிற்கின்றோமா? கலாசார மோகங்களிலும் தான்தோன்றித்தனமான வாழ்க்கையினையும் வாழ்வதனால் அவற்றில் நம்பிக்கை கொண்டு இருப்பதனால் அழிவு நிச்சயம் என்பதனை இன்றைய காலங்கள் எமக்கு பல தரப்பட்ட செயல்கள் ஊடாக எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களில் நம்பிக்கை வைப்பதனால் வாழ்வு இன்றி அழிவே உண்டு என்பதனை நாம் உணர்ந்திருப்போம். உண்மையான நம்பிக்கை இறைவனில் வைப்போம். அப்போதே நிலைவாழ்வு எம்மில் மலரும்.

**அன்பு :** நம் அயலவரை அன்பு செய்வதனை தவிர்த்து வார்த்தையால் இறைவனே உம்மை அன்பு செய்கிறேன் எனக் கூறுவது வீண் பேச்சாக மட்டும் உள்ளது.

எனவே, அயலவர் மட்டில் உண்மையான அன்புகொண்டு வாழும் போது இறைவனின் அன்பும் எம்மில் நிறைவாக கிடைக்கும்.

**கீழ்ப்படிவு :** இயேசு தன்னை எவ்வளவு கீழ்ப்படிவுடையவராக மாற்றினார் என்பதனை அவரது வாழ்க்கையில் இருந்து நாம் உணர்ந்துகொள்கின்றோம். அத்தகைய ஓர் நிலை இன்று அருகிப் போய்விட்டது. கிழ்ப்படிவு என்ற பண்பு அற்ற ஓர் புதிய சமூகம் உருவாகுவதனை நாம் காண்கிறோம். எனவே, இத்தவக்காலம் எமக்கு வெளிப்படுத்தும் முக்கியமான பண்பாக கீழ்ப்படிவு அமைகின்றது. எனவே, நாம் இயன்றவரை எல்லோருக்கம் கீழ்ப்படிவு உடையவர்களாக வாழமுயற்சிப்போம்.

**நல்லுறவு :** இத்தகைய பண்பினை நமதாக்கி வாழும்போது எல்லோரிடையேயும் எந்தவித பிளவுகளும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, நாம் அனைவரும் ஆரோக்கியமான உறவினை வளர்த்திட முயற்சிப்போம்.

இத்தகைய நான்கு பண்புகளையும் நமதாக்கி வாழும்போது தவக்காலம் எம் அனைவருக்கும் அர்த்தமுள்ளதாக அமையும். ஆராக்கியமான ஓர் புதிய இறையாட்சி உள்ள சமூகமும் உருவாகும்.

**• ஜெ.அனுஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் விளையாட்டு செய்திகள்

# தீவக கல்வி வலய பாடசாலைகளின் உள்ளகப் போட்டி முடிவுகள்

ஏழாலை,

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான உள்ளகப் போட்டிகள் அண்மையில் தீவக வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப் பாளர் எஸ்.என். லோகநாதன் தலைமையில் ஊர்காவற்றுறை - அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றன.

**சதுரங்கப் போட்டி**

15 வயது ஆண்கள் பிரிவில் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் முதலாமிடத்தினையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இரண்டாமிடத்தினையும் வேலணை மத்திய கல்லூரி மூன்றாமிடத்தினையும்,

19 வயதுப் ஆண்கள் பிரிவில் வேலணை மத்திய கல்லூரி முதலாமிடத்தினையும் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் காரைநகர் கலாநிதி ஏ. தியாகாராஜா மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் வேலணை மத்திய கல்லூரி இரண்டாமிடத்தினையும் ஊர்காவற்றுறை றோ.க.மகளிர் வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும்,

19 வயதுப் பிரிவில் காரைநகர் ஏ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் வேலணை மத்திய கல்லூரி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

**கரம் போட்டி**

**15 வயது ஆண்கள் பிரிவில்**

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாமிடத்தினையும்,

**19 வயது பிரிவில்**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாமிடத்தினையும், கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

**15 வயது பெண்கள் பிரிவில்**

ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. மகளிர் வித்தியாலயம் முதலாமிடத்தினையும் வேலணை மத்திய கல்லூரி இரண்டாமிடத்தினையும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும்,

**19 வயது பெண்கள் பிரிவில்**

வேலணை மத்திய கல்லூரி முதலாமிடத்தினையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இரண்டாமிடத்தினையும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றன.

**பூப்பந்தாட்டம்**

**19 வயது ஆண்கள் பிரிவில்**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாமிடத்தினையும் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் காரைநகர் ஏ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தினையும்,

**19 வயது பெண்கள் பிரிவில்**

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் முதலாமிடத்தினையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இரண்டாமிடத்தினையும் வேலணை மத்திய கல்லூரி மூன்றாமிடத்தினையும் பெற்றன.



அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய அரச திணைக்களங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.செயலக அணி.

### யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும்

# இருபது-20 கிரிக்கெட் இறுதிப்போட்டியில் பற்றிக்ஸ் - யாழ். இந்து அணிகள் மோதல்

கொக்குவில்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை நடத்தும் நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ண இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் மோதுகின்றன.

சுற்றுப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் மன்னார் சென். சேவியர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இசுப்பத்தான கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, கைதடி நவீல்ட்ஸ் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வித்தியாலோக கல்லூரி, அநுராதபுரம் மத்திய கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய 14 அணிகள் பங்குபற்றின.

சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய மைதானங்களில் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வந்தன. லீக் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகள் காலிறுதிக்குத் தெரிவாகி, காலிறுதியில் வெற்றிபெற்ற அணிகள் அரையிறுதியில் மோதின.

யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற அரையிறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை பெற்றது.

155 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி 10.3 ஓவர்களில் 50 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்திருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ந்து பெய்த மழையினால் போட்டியின் முடிவினைக் காண டக்வோர்த் லூயிஸ் முறை நாடப்பட்டது. டக்வோர்த் லூயிஸ் முறைப்படி சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 70 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை எடுத்தது. சிறிகுகன் 33 ஓட்டங்களையும், சீராளன் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பதிலளித்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 8.2 ஓவர்களில் 45 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்த போது மழை குறுக்கிட்டது.

டக்வோர்த் லூயிஸ் முறைப்படி யாழ்ப்பாணக் கல்லூரி அணி 39 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தொடர்ந்து பெய்த மழையினால் இறுதிப் போட்டிகளை நடத்தமுடியாத காரணத்தினால் இறுதிப்போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# கொக்குவில் இந்து, உரும்பிராய் இந்து துடுப்பாட்டப் போட்டியில் சம்பியன்கள்

## 6 விக்கெட்டுக்களால் வெற்றி

தெல்லிப்பழை,

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 10 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும் வெற்றிபெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி எடினின் 44 ஓட்டங்களுடன் 7 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 9.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்ட நிகழ்வில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியும் உடுவில் மகளிர் அணியும் மோதின. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் மகளிர் கல்லூரி அணி 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி 4.1 பந்துப்பரிமாற்ற நிலையில் 4 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாந்திரிகர்களின் சாமப் பூஜை: நடுங்கும் மக்கள்

நமது ஊரில் தொழில் நட்டம் ஏற்பட்டால் 'அவன் எனக்கு செய்வினை செய்து விட்டான் ' என்று புலம்பவர்கள் உள்ளனர். ஆனால் அவ்வாறு புலம்புபவர்கள் ஒருசிலரே உள்ளனர். ஆனால் தமிழ்நாட்டில் பேய் நடமாட்டம், செய்வினை சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை இன்றுவரைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அந்த வகையில்தான் இப்பத்தி அமைகிறது.

தமிழ்நாடு, கிருஷ்ணகிரி - திருவண்ணாமலை வீதியில் மாத்தூரில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது பெனுகொண்டா ஏரி. இது மலையாள மாந்திரீகர்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி. ஊரே அடங்கியிருக்கும் நள்ளிரவு நேரத்தில் இங்கு செய்வினை பூஜைகள் தாராளமாக நடக்கின்றன. மழைக்காலத்தில் இந்த ஏரியை மந்திரவாதிகள் கழுகுபோல் வட்டமிடுவது ஏன்? இதன் அருகில் சென்றாமலை, போக்கம்பட்டி மலை ஆகியன இருக்கின்றன. இங்குள்ள அடர்ந்த காடுகளில் அரிய வகை மூலிகைகள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது. நோயை குணமாக்கும் மூலிகைகளோடு, ஒருவரை வசியப்படுத்தும் சக்தி கொண்ட மூலிகைகளும் உள்ளன என கருதுகிறார்கள் மாந்திரீகர்கள். மேலும், பெனுகொண்டா ஏரிக்குள் ஏராளமாக புதையல்கள் கொட்டிக் கிடக்கின்றன என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதனாலேயே செய்வினை, ஏவல் பூஜைகள் இப்பகுதியில் அதிகம் நடக்கின்றன.

செய்வினை பூஜைக்காக கருப்பு ஆடு, கருப்பு கோழி, எலுமிச்சம்பழம், வெற்றிலை, எருக்கம்பூ போன்றவற்றை எடுத்து வருகின்றனர் மாந்திரீகர்கள். சுற்றுவட்டார பகுதி முழுவதும் ஓசை அடங்கிய பிறகு, இவர்களது பூஜை தொடங்குகிறது. பிறகு படிப்படியாக பயமுறுத்தும் காட்சிகள் அரங்கேறுகின்றன. முதலில் 5 அடி ஆழத்தில் குழி தோண்டப்படுகிறது. அதில் ஆடு, கோழியை உயிரோடு போட்டு புதைக்கிறார்கள். புதையலை எடுப்பதற்காக கொடுக்கும் பலியாக இது கருதப்படுகிறது. ஆடு, கோழிகளை உயிரோடு சமாதியாக்கி விட்டு பிறகு ஆக்ரோஷ மந்திரங்கள் ஒலிக்க பூஜை நடந்து முடிகிறது. நடுநிசி செய்வினை பூஜைகள் ஏரிக்கரையில் அடிக்கடி அரங்கேறும் காட்சிகளாகி விட்டன. கேரளாவை சேர்ந்தவர்களோடு, தமிழக மந்திரவாதிகளின் நடமாட்டமும் இங்கு அதிகரித்திருக்கிறது.

இதேபோல கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காஷ்மீர் - கன்னியாகுமரி நெடுஞ்சாலை ஓரத்தில் உள்ள சூளகிரி மலையிலும் மாந்திரீகர்கள் நடமாட்டம் இருக்கிறது. இந்த மலையில் பெரும் புதையல் இருப்பதாக நம்பும் அவர்கள், அடிக்கடி இங்கு வந்து பூஜைகள் செய்கிறார்கள். திப்பு சுல்தான் ஆட்சிக்காலத்தில் புதைக்கப்பட்ட பொக்கிஷங்கள் இங்கு கொட்டி கிடக்கின்றன கூறப்படுகிறது. இந்த மலையில் சுற்றிய ஒரு மாந்தீரிகரை சிலர் பார்த்து அவரிடம் பேசியுள்ளனர். 'இந்த காட்டில் வசிய மூலிகைகள் இருப்பது உண்மை. பேய், பிசாசுகள் மூலம் நாம் யாரையும் ஆட்டிப் படைக்கலாம். இது ஒரு அமானுஷ்ய பூமி' என்று சொல்லி விட்டு சில மந்திரங்களை உச்சரித்த அவர் திடீரென மாயமாகி விட்டதாக கூறுகின்றனர் மக்கள்.

'இப்ப மருத்துவம் வளர்வதற்கு கைகொடுத்தது சித்த மருத்துவம்தான். சித்தர்கள்தான் இதற்கு குரு. சித்தர்கள் நோய்களை தீர்க்க கண்டுபிடிச்ச நிறைய மூலிகைகளுக்கு இன்னும் பெயரே தெரியல. அந்த அளவுக்கு மலையில மூலிகை புதைஞ்சு இருக்கு. மூலிகைகளுக்கு மருத்துவ குணம் இருக்கிறது. இதை பயன்படுத்தி, பூஜை, வசியம், செய்வினை என்று ஏமாற்றி சம்பாதிக்கிறார்கள் மாந்திரீகர்கள்' என்கிறார் மூலிகை ஆய்வாளர் ஒருவர். எது எப்படியிருந்தாலும் மந்திரவாதிகளின் நடமாட்டமும், நள்ளிரவு பூஜைகளும் காடுகளுக்கு அருகிலிருக்கும் மக்களை பீதியடைய வைத்துள்ளது என்பது மட்டும் உண்மை.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [15.04.11 முதல் 21.04.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேட ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும் நிலை உண்டு. குடும்பத்தில் சற்று மந்தமான நிலை இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் சற்று அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் நிலை அதிகம் இருக்கும். எதிர்பாராத வகை செலவீனம் அதிகமாக அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமைந்திருக்கும். கடன் நிலைகளில் அனுகூலங்கள் அமைய இடமுண்டு. பெண்களுக்கு சுமாரான பலன் ஏற்படும். மாணவர்களுக்கு சிறு நன்மை உண்டு.



### * மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் உண்டு. குடுபத்தில் அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலனுண்டு. தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமையும் நிலையுண்டு.

கடன் நிலைகளில் அனுகூலமான பலன் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கடகம்

கடகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலனுண்டு. எடுக்கும் முயற்சிகளில் அலைச்சல் நிலைகள் அமைந்திருக்கும். தொழில் நிலையில் மாற்றங்கள் வேலைப்பளு என்பன ஏற்படும். எதிர்பாராத பிரயாண நிலைகள் அமையும் பலனுண்டு.

குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு நற்பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன் அமையும். தொழில் நிலைகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் ஏற்படும். எதிர்பார்ப்புக்களில் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். பண வரவு சற்று சுமாரான மத்திம நிலையிலே அமையும்.

குடும்பத்தில் சிறு சிறு மந்த நிலைகள் ஏற்பட்டு மறையும். கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * துலாம்

துலாராசி அன்பர்களுக்கு மிகவும் அனுகூலமான பலா பலன்கள் அமையும். எடுக்கின் முயற்சிகளில் சிறு சிறு தடைகள் இருக்கும். தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமையும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். பண வரவு சுமாரான மத்திமமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே ஏற்படும். பெண்களுக்கு சுமாரான பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலையும் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே ஏற்படும். எதிர்பார்ப்புக்களில் வெற்றிகள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூல பலன்கள் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எதிர்பாராத வகை திடீர் சுகயீனங்கள் ஏற்படும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலையில் அலைச்சல், வேலைப்பளு என்பன அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலன் உண்டு.

கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### * கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு நற்பலா பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றங்கள் ஏற்படும் பலன் உண்டு. சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மந்தமான பலன்களே அமையும்.

பெண்களுககு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### * மீனம்

மீனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும், சுபகாரிய நிலைகளும் அமைகின்ற பலன் உண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்ப உறவினர் மூலம் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகிய காலத்தில் தீவிர வளர்ச்சி கண்ட கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

உலகில் தனித் தமிழ் தழைத்தோங்க தன்னிகரில்லாத சேவையாளராகத் திகழ்ந்த முதல்வர் அக்தியர் அன்னாரின் அடியொற்றி வாழ்ந்த தலைசிறந்த தமிழ் அன்பர்களுள் ஒருவரான செல்லையா உபாத்தியாயர் என்பவரால் 1910 ஆம் ஆண்டு 'கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை' எனும் திரு நாமத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே தற்போதைய 'கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை' ஆகும்.

'இளமையிற் கல்' எனும் மகுட வாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையினை நிறுவிய செல்லையா உபாத்தியாரே அதிபராகவும் ஆசிரியராகவும் செவ்வனே சேவையாற்றி இவ் ஊர்ப்பிள்ளைகளுக்கு மட்டுமன்றி அயலூர்ப் பிள்ளைகளுக்கும் அறிவுப் பசியினை மட்டுமன்றி வயிற்றுப் பசியினையும் போக்கிவந்தார்.

இவருடைய இச் சேவையினை கண்டு வியந்த அவ்வூர் பெருந்தகைகள் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்தியதுடன் பாடசாலையின் பெரு வளர்ச்சிக்கு தமது பல்வேறு ஒத்துழைப்பையும் வழங்கி பாடசாலையினை ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச்சென்றனர்.

இப் பாடசாலைன் தீவிர வளர்ச்சியை கண்ட அரசு 1960 ஆம் ஆண்டு இப் பாடசாலையினைப் பொறுப்பேற்றது. பாடசாலையினை பொறுப்பேற்ற அரசு இப்பாடசாலையினை ஆரம்ப நிலை, இடைநிலை, உயர் வகுப்புக்கள் கொண்ட 1 ஏபி பாடசாலையாகத் தரம் உயர்த்தியிருந்தது.

காலப்போக்கில் அரசாங்கம் கொண்டுவந்த கல்விச் சீர்திருத்தங்களின் காரணமாக ஆரம்பப் பிரிவினை மூடிவிடத் தீர்மானித்தது. 1975 ஆம் ஆண்டு முதலாம் வகுப்பு அனுமதி நிறுத்தப்பட்டது. இதனால், விசனமடைந்த கொக்குவில் மத்தி வாழ் மக்கள் அப்போதைய நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் சி.அருளம்பலம் ஊடாக இப்பாடசாலையின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறியதன் பலனாக கல்வித்திணைக்கத்தின் அனுமதியுடன் 1976.01.19 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மா. மகாதேவாவால் 'ஆரம்பக் கலவன் பாடசாலை' எனும் புதிய நாமத்துடன் தனித்துவமாகப் பெருமையுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பாடசாலையின் முதல் அதிபராக செ. நாகலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். இவ் அதிபர் தமது பணிகளை சேவை மனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் செவ்வனே ஆற்றிவந்தார்.

**2000 மாம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், ந. நொசாந்தன் என்ற மாணவன் அகில இலங்கையில் முதல் 10 மாணவர்களுள் ஒருவராக முதன்மைப் புள்ளியை பெற்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலுமொரு எடுத்துக்காட்டாகும்.**


அவ்வேளையில், இப் பாடசாலை தரம்-1 முதல் தரம்-5 வரையாக ஒவ்வொரு தரமும் 2 பிரிவுகளைக் கொண்ட வகுப்புக்களாக இருந்தது. இப்படியாக தமது கடமையை சரிவரச் செய்துவந்த அதிபர் செ. நாகலிங்கம் ஓய்வுபெற்றார்.

அவரைத் தொடர்ந்து அதிபராக எ. குருசாமி என்பவர் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து அதிபர்களாக திருமதி. கணபதிப்பிள்ளை என்பவரும் சேவையாற்றியிருந்தார்.

இவர்களின் பின் 1985.03.15 ஆம் திகதி த. அழகரத்தினம், அதிபராக பதவியேற்றார். இவ் அதிபரின் காலப் பகுதியிலேயே இப்பாடசாலைக்கு பெருமளவு மாணவர்கள் படை எடுத்ததனால் வகுப்பறைகள் மாணவர்களின் தேவைக்குப் போதாததன் காரணத்தினால் ஒவ்வொரு தரத்திலும் 3 பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு மொத்தம் 15 வகுப்புக்கள் கல்வித்திணைக்களத்தின் அனுமதியுடன் பெருமிதத்துடன் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இக் காலப்பகுதியிலேயே பாடசாலையின் கல்வி முன்னேற்றம் மட்டுமன்றி, பௌதீக வளங்களும் அதிகரிக்கப்பட்டன.

இப் பாடசாலையில் வழமையாக 10 இற்கும் குறைவான மாணவர்களே தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வந்தனர். ஆனால், இவ் அதிபரின் காலப் பகுதியில் இத் தொகை படிப்படையாக உயர்வடைந்து 45 பிள்ளைகள் வரையும் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். அத்துடன், 1997 ஆம் ஆண்டில் 4 மாணவர்கள் முதன்மைப் புள்ளிகளைப் பெற்று பாடசாலையின் பெருமையினை உலகறியச் செய்தனர். அத்துடன், இவர்களில் இரண்டு மாணவர்கள் ஜனாதிபதியிடம் பரிசும் பெற்றனர்.

மேலும், 2000 மாம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ந. நொசாந்தன் என்ற மாணவன் அகில இலங்கையில் முதல் 10 மாணவர்களுள் ஒருவராக முதன்மைப் புள்ளியினைப்பெற்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலுமொரு எடுத்துக்காட்டாகும்.




இதனால், பாடசாலையினை நாடிவரும் மாணவர்கள் தொகை வருடாந்தம் அதிகரித்த வண்ணமே காணப்பட்டது. இதனால், பாடசாலயில் பௌதீக வளப்பற்றாக் குறை ஏற்பட ஆரம்பித்தது. அதனை நிவர்த்தி செய்ய 1990 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 1998 இல் பூர்த்திசெய்யப்பட்டது. இக் கட்டடமே தற்பொழுது அழகரத்தினம் மண்டபமாக மிளிர்கின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சியினைக் கண்டு வியந்த பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலையினைப் பாராட்டி வாழ்த்தியதுடன் சங்கத்தினால் காணி ஒன்றும் கொள்வனவு செய்து வழங்கப்பட்டது. இக்காணியில் 'ஜிரிசற்' நிறுவனத்தினால் மலசல கூட வசதியும் செய்து தரப்பட்டது. இப்படியாக பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து அர்ப்பணிப்புக்களைச் செய்த அதிபர் ஓய்வுபெற்றுச் சென்றார். பாடசாலையின் வரலாற்றில் அதிபர் த. அழகரத்தினம் அவர்களது காலம் பாடசாலைக்கு ஓர் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. இவரது சேவைக்காலத்திலேயே பாடசாலை தேசிய ரீதியில் தனக்கு என ஓர் முத்திரையினைப் பதித்தது என்பதுதான் உண்மை.

இவரைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபராக 2001.03.21 அன்று சி. ஞானேஸ்வரன் என்பவர் குறுகிய காலம் (2 வருடங்கள்) அதிபராக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றார். இவரது காலத்தில் பாடசாலையின் கல்வி வளர்ச்சியடைந்ததுடன் இப்பாடசாலையின் பழைய மாணவன் தவராஜா என்பவரின் உதவியுடன் பன்முகப்படுத்தப்பட்ட அரச நிதியிலிருந்து 5 வகுப்பறைகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ் அதிபர் 2003.02.28 ஆம் திகதி இடமாற்றம் செய்யப்பட்டார். இவரது இடமாற்றத்தைத் தொடர்ந்து இப்பாடசாலையின் பழைய மாணவியும் ஆங்கில ஆசிரியையுமான திருமதி செ. சகாதேவன் அவர்கள் அதிபராகக் கடமையேற்றதுடன் பூர்த்திசெய்யப்படாமல் இருந்த கட்டடத் தொகுதியினை தன்னுடைய அயராத முயற்சி, சிறந்த பேச்சாற்றல் காரணமாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மணிபல்லவன் அவர்களின் உதவியுடன் பூர்த்தி செய்தார்.

இப்புதிய தற்போதைய அதிபரின் அதிதீவிர முயற்சியின் பயனாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடும் அபிவிருத்தி அடைந்ததுடன், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளின் அபிவிருத்திகள் மேம்பட்டுச் செல்கின்ற நிலையினை கொக்குவில் பகுதி மக்கள் மட்டுமன்றி, பல்வேறு இடங்களிலுள்ள மாணவர்களும் கவரப்பட்டமையினால் பாடசாலையின் அனுமதிக்கான விண்ணப்பங்கள் வருடாவருடம் பல நூற்றுக்கணக்கில் அதிகரித்தன. இதற்கு எல்லாவற்றுக்கும் மூலகாரணம் தற்போதைய அதிபரும் ஆசிரியர்களும் தான் என்றால் அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

(தொடரும்)

●கே.ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற மரநடுகை தின விழாவின் போது மாணவிகள் மரக்கன்றுகளை நாட்டுவதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி. பேரின்பநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்:- வேலணை நிருபர்)



கொக்குவில் இந்து முன்பள்ளியின் புதிய மாணவர்கள் வரவேற்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விளையாட்டுத் துறை அமைச்சின் வடமாகாண கல்விப் பண்பாட்டு உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.ஞானசுந்தரம் மற்றும் முன்பள்ளி நிர்வாகிகள் முன்பள்ளி மாணவர்களால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- மானிப்பாய் நிருபர்)




நேசா பவுண்டேசன் நிறுவனத்தின் அங்குரார்ப்பண விழா அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மாணவியொருவருக்க அப்பியாசப்புத்தகங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- தெல்லிப்பழை)



யாழ். முஸ்லிம் கல்லூரியில் நிர்மானிக்கப்படவுள்ள நவீன சந்தை கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ். நகர மேயர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தினால் வன்னிப்பகுதிக்கான நிறைவாழ்வு மையத் திறப்பின்போது எம்.எஸ்.எவ் நிறுவனப்பொறுப்பாளர் கார்ன் ஷெலமனால் திறந்துவைத்து உரையாற்றுவதையும் அருகில் தென் இந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீன பேராயர் அதிவண கலாநிதி டீ.எஸ்.தியாகராசா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- கிளிநொச்சி நிருபர்)



தவசிக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் புனரமைப்பு பணி கடந்த பங்குனி உத்திரதினத்தன்று ஆரம்பமானது. இப்பணிக்கு பாரிய பங்களிப்பினை வழங்கிய திருவேலு மணிவண்ணன் புனரமைப்புப் பணியை ஆரம்பித்துவைப்பதை படத்தில்காணலாம்.
(படம்:- வவுனியா நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட்டின் புதிய எதிர்பார்ப்பு

பத்தாவது உலகக்கிண்ணத் தொடர் பலதரப்பட்ட மாற்றங்கள், சுவாரஸ்யங்கள் விறுவிறுப்புக்கள் எதிர் பாராத நிகழ்வுகள் என பல பதிவுகளை பதிவு செய்து முடிவடைந்துள்ள நிலையில் இத் தொடர் இலங்கை அணியிலும் பெரு மாற்றங்களை உண்டுபண்ணியுள்ளது. இதனால் இலங்கையின் எதிர் கால கிரிக்கெட் குறித்த கேள்விகள் தற்போது எழ ஆரம்பித்துள்ளன.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் 14 அணிகள் களம் கண்டன. இந்திய- பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டியுடன் மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இத்தொடர் 42 போட்டிகளை உள்வாங்கியுள்ளது. இதில் அனைத்து அணிகளும் ஏதோ ஒரு வகையில் தமது பதிவினை கொண்டுவந்தமை மறுப்பதற்கில்லை.

மூன்று நாடுகளில் இத் தொடர் நடைபெற்றாலும் அந்நாடுகளில் உள்ள ஆடுகளங்கள் ஒரே வகையான ஆட்டத்தினையே கொண்டுவந்தன. குறிப்பாக இத் தொடரில் சுழல்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது.



இந்நிலையில் இத்தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை- இந்திய அணிகள் களமிறங்கின. இரு அணிகளும் தலா ஒரு முறை கிண்ணத்தை கைப்பற்றியிருந்த வேளையில் இப்போட்டியில் இரு அணிகளுக்குமிடையிலான எதிர்பார்ப்பு அதிகரித்தது காணப்பட்டது. இருப்பினும் இலங்கை அணியின் சவாலை தன் சொந்த மண்ணில் எதிர்கொண்ட இந்திய அணி கிண்ணத்தை கைப்பற்றியது. இதனையடுத்து 28 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் உலகக்கிண்ணத்தை இந்தியா கைப்பற்றியது.

ஆறு வாரங்கள் 49 போட்டிகள் 14 அணிகள் 210 வீரர்களுடன் பெரும் திருவிழாவாக முடிவடைந்துள்ள உலகக்கிண்ணத் தொடர் பல அணிகளில் மாற்றங்களை உண்டுபண்ணியுள்ளது.

அந்தவகையில் நீண்ட கால வெற்றி அணியாக வலம் வந்த அவுஸ்திரேலிய அணி இத் தொடரில் 2 தோல்விகளை சந்தித்ததினையடுத்து உலகக்கிண்ணத் தொடரில் வெற்றித்தலைவராக நீண்ட நாள் பயணித்த அணித்தலைவர் தனது பதவியை ராஜினாமா செய்து கொண்டார். அதேபோல் தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித், நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் விட்டோரி ஆகியோரும் தமது பதவிகளை துறந்து கொண்டனர்.

இவ்வாறு உலகக்கிண்ணத் தொடரினையடுத்து பங்குபற்றிய அணிகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதிலும் இலங்கை அணியில் அடுத்தடுத்து பல மாற்றங்கள் அரங்கேறி வருகின்றமை இலங்கை அணியின் எதிர் கால கிரிக்கெட் குறித்த கேள்வியை உண்டு பண்ணியுள்ளது. மறுமுனையில் புதிய தலைமுறைக்கு களம் அமைக்கும் நிகழ்வாகவும் இது அமைந்துள்ளது.

அந்தவகையில் குமார் சங்கக்கார சர்வதேச ஒரு நாள் மற்றும் இருபது-20 அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இது இலங்கை கிரிக்கெட் அணிக்கு பெரும் ஏமாற்றத்தையும் பின்னடைவையும் ஏற்படுத்தியதே என்று சொல்லமுடியும். தனது சிறந்த தலைமையினால் உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிவரை இலங்கை அணியை அழைத்துச் சென்ற இவர் தலைமைப்பதவியிலிருந்து விடைபெற்றுள்ளார்.

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரினை கருத்தில் கொண்டு அதற்காக ஒரு புதிய தலைவரை இப்போதிலிருந்தே தயார் செய்யும் வகையிலும் இலங்கை அணியின் எதிர்காலம் குறித்தும் இளம் வீரர்களுக்கு களம் அமைக்கும் வகையிலேயே அவர் இந்த முடிவினை எடுத்ததாக தெரிவித்தார். இருந்தும் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் எதுவும் தற்போது இல்லை எனவும் அது தொடர்பில் ஆரோக்கியத்தை பேணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து துணைத்தலைவரான மஹேல ஜெயவர்தனவும் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அடுத்தவொரு அதிர்ச்சியை அளித்தார். அனுப தலைவர்களும் வீரர்களுமான இவர்கள் இவ்வாறு அடுத்தடுத்து தமது தலைமையை இராஜினாமா செய்துள்ளமை இலங்கை கிரிக்கெட் அணிமீது ஒரு இடைவெளியை உண்டுபண்ணியுள்ளது. இளம் வீரர்களுக்கு களம் அமைக்கும் வகையிலும் எதிர்கால இலங்கை அணியின் போக்கு குறித்து இவர்களது முடிவு அமைந்திருந்தாலும் தற்போதைய நிலையில் இவை அணிக்கு பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியை இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்ற ஜெயவர்த்தனவும் 2010 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் இறுதிப்போட்டிவரை இலங்கை அணியை அழைத்து சென்ற சங்கக்காரவும் இவ்வாறு விலகியுள்ளமை அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் நிலை பற்றிய சந்தேகத்தினை உண்டுபண்ணியுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில், இலங்கை அணியின் அரவிந்த டீ சில்வா தலைமையிலான தேர்வுக் குழுவினரும் தமது பதவியை ராஜினாமா செய்து கொண்டனர். இதுவும் இலங்கை கிரிக்கெட்டிற்கு மேலும் ஒரு பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அணியின் அனுபவ வீரர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்து கொண்டமை எதிர்கால இலங்கை அணியை நடுவழியில் நிறுத்தியுள்ளதே என்று சொல்லமுடியும். இருந்தும் இவர்களது பணி தொடர்ந்து இலங்கை அணிமீது இருக்கும் பட்சத்தில் அது பலமாக அமையும் என்பதில் மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் மிக விரைவாக புதியதொரு தேர்வுக்குழு நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதொரு விடயம்.

இலங்கை அணியின் எதிர்கால நிலை குறித்து ஏற்பட்ட பரபரப்புக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் இது அமைந்திருப்பது சிறப்பு . இருந்தும் இலங்கை அணியை அடுத்த உலகக்கிண்ணத் தொடருக்கு வழி நடத்திச் செல்லப் போகும் சிறந்த தலைமையை தெரிவு செய்யும் உன்னதமான பொறுப்பு இவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அந்தவகையில் புதிதாக இலங்கை அணியை தலைமைதாங்கப்போகும் வீரர் எந்த அளவிற்கு அடுத்த உலகக்கிண்ணத்ததை நோக்கி இலங்கை அணியை நகர்த்தி செல்லப்போகிறார் எவ்வாறு என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. சங்கக்கார, ஜெயவர்தன ஆகியோரின் வெற்றிகளை பின்தொடர்ந்து இலங்கை அணியை தொடர்ந்தும் புதிய தலைவர் வெற்றிப்பாதையிலே பயணிக்கச் செய்வார் என்பது நம்பிக்கை.

இருந்தும் இவர்களின் இடைவெளி பூர்த்தி செய்யப்படாத ஒன்றாக இலங்கை அணியில் இருக்கும் எனபது மறுப்பதுக்கில்லை.

எது எவ்வாறாயினும் இளம் வீரர்களை அதிகம் கொண்ட இலங்கை அணி எதிர் கால கிரிக்கெட்டை கருத்தில் கொண்டு இப்போதே விரைவாக செயற்படும் பட்சத்தில் அடுத்த உலகக்கிண்ணத்தொடரில் கிண்ணத்தை இலங்கைக்கு கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday April 15, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org